பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆடி 31 சனிக்கிழமை (16~08~2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:261

# தமிழ்க் கூட்டமைப்புக் கட்சிகளுடன் புலிகள் தனித்தனியாக ஆலோசனை!

## இடைக்கால நிர்வாக வரைவு குறித்து

கொழும்பு,ஓகஸ்ட்16

**வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பாக இலங்கை அரசு சமர்ப்பித்துள்ள திட்டவரைவு குறித்தும், அதற்குச் செய்யப்பட வேண்டிய திருத்தங்கள் குறித்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தனித்தனியாகப் பேச்சு நடத்தி வருகின்றார்.**

கிளிநொச்சியில் புலிகளின் அரசியல்துறை நடுவப்பணியகத்தில் இந்தச் சந்திப்புகள் இடம்பெறுகின்றன.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியுடனான சந்திப்பு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. அக்கட்சியைச் சேர்ந்த எம்.பியான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சந்திப்பில் பங்குபற்றினார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ்) அணியின் பிரதிநிதிகளாக பொதுச் செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன், வன்னி மாவட்ட எம்.பியான சிவசத்தி ஆனந்தன் ஆகியோர் நேற்றுமுன்தினம் மாலையில் தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசினர்.

தமிழ்க்கூட்டமைப்பில் இடம்பெறும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## தாய்லாந்துத் தூதுவர் இன்று தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஓக.16

இலங்கைக்கான தாய்லாந்துத் தூதுவர் தலைமையிலான குழுவினர் இன்று காலை விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர்.

இன்று காலை கொழும்பில் இருந்து விமானம்மூலம் யாழ்ப்பாணம் வரும் இக்குழுவினர் தரை வழிப் பாதையூடாக கிளிநொச்சி செல்வார்கள். அங்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து சமாதான முயற்சி முன்னெடுப்புக்கள் பற்றிப் பேச்சுக்கள் நடத்துவார்கள்.

தாய்லாந்துப் பிரதமர் இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சமயத்தில் இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-8)

## சந்தேகத்துக்கிடமான சிறிய கப்பல் திருமலை கடலில் கைப்பற்றப்பட்டது

### 19பேர் கைது;கொழும்புக்கு கொண்டுவர ஏற்பாடு

கொழும்பு,ஓக16

சந்தேகத்திற்கிடமான சிறிய கப்பல் ஒன்றை திருகோணமலை கடலில வைத்து பொலஸார் கைப்பற்றியுள்ளனர். கப்பலிலிருந்த 19 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கப்பலில் 7 ஆயிரம் லீட்டர் டீசலும், உணவுப் பொருள்களும் இருந்தன என்று பொலஸார் தெரிவித்திருக்கின்றனர்.

இக்கப்பல் திருகோணமலையிலிருந்து கொழும்புக்கு வந்து கொழும்பிலிருந்து சிலரை ஏற்றிக்கொண்டு சட்ட விரோதப் பயணமொன்றை மேற கொள்ள திட்டமிடப்பட்டிருந்ததாக பொலீஸாரின் ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரியவந்திருக்கின்றது.

மேலதிக விசாரணைகள் நடைபெறுகின்றன. கப்பலைக் கொழும்புக்கு கொண்டுவருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. (ம-8)

## இந்திய அமைச்சரின் விஜயம் ஒத்திவைப்பு

கொழும்பு,ஓக.16

இந்திய வெளிவிவகார அமைச்சர் யஸ்வந்த்சின்ஹாவின் இலங்கை விஜயம் பிற்போடப்பட்டுள்ளது.

அமைச்சர் யஸ்வந்த்சின்ஹா எதிர்வரும் திங்கட்கிழமை இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவிருந்தார்.

ஆனால், எதிர்வரும் 18ஆம், 19ஆம் திகதிகளில் இந்திய நாடாளுமன்றில் ஆளும் தேசிய ஜனநாயகக் கட்சிக்கு

(16ஆம் பக்கம் பார்க்க)

## பிரேதத்தை வைத்துப் போராட்டம்

மட்டக்களப்பு,ஓக.16

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் சுட்டுக்கொல்லப்பட்ட ஈ.பி.டி.பி. உறுப்பினர் அரசரட்ணம் ரதீஷ்கரனின் பிரேதத்தை அவரது வீட்டில் இருந்து நேற்று ஈ.பி.டி.பி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) உறுப்பினர்கள் ஊர்வலகமாக தூக்கிச் சென்று, கண்காணிப்புக்குழு அலுவலகத்துக்கு எதிரே வீதியில் வைத்துள்ளனர். இக் கொலைக்கு சரியான தீர்வு கிடைக்கும் வரை பிரேதப் பெட்டியை அங்கிருந்து அகற்றப் போவதில்லை என்று அவர்கள் தெரிவித்தனர்.(ம-8)

## சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிக்க அனைவரும் கடுமையாக பாடுபட வேண்டும்

### நோர்வே மனித உரிமை ஆர்வலர் குடாநாட்டில் தெரிவிப்பு



**யாழ்ப்பாணத்துக்கு நேற்றுமுன்தினம் வந்திருந்த நோர்வே மனித உரிமை ஆர்வலர் பெறிவிக் கோல் பிறன்சன் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரியை அவரது அலுவலகத்தில் சந்தித்து உரையாடினார்.** ***(படம்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)***

யாழ்ப்பாணம், ஓக.16

தடைப்பட்டுள்ள சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அனைத்துத் தரப்பினரும் கடுமையாகப் பாடுபடவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் நோர்வே நாட்டின் கரித்தாஸ் நிறுவனப் பணியகத்தின் மனித உரிமை ஆர்வலரான பெறிவிக் கோல் பிறன்சன்( Perivi Gol Brandsen).

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்திருந்த அவர், நேற்றுப் பகல் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ அலுவலக அதிகாரி ருவான் சந்திரசேகரவுடன் சந்திப்பொன்றை நடத்தினார். அப்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழர்களும் சிங்களவர்களும் நாட்டில் உள்ள ஏனைய சமூகத்தவரும் சமாதானம் குறித்துச் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

சமாதான முயற்சிகள் ஒரு நீண்ட கால நிகழ்ச்சியாக இருந்தாலும் இதில் இரு தரப்பினரும் வெற்றிகாண்பார்கள் என்றே எண்ணுகிறேன்.

வடக்கு - கிழக்கில் நிலைமைகளை நேரில் அவதானித்த பின்னரே எனக்கு இந்த நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

இந்த நாடு பல காலமாகப் போர்ச் சூழலில் சிக்கி இருந்தது. எனவே, நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான துரித அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவேண்டும்.

எந்தவொரு நாட்டிலும் அபிவிருத்தி மேற்கொள்ளப்பட வேண்டுமாயின் மனித உரிமைகள் பற்றியவிடயங்களில் முன்னேற்றம் ஏற்பட வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் அண்மைக் காலமாக மனித உரிமைகள் விடயங்களில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இது ஒரு நல்ல விடயமாகும்.

மனித உரிமைகள் விடயத்தில் இன்னும் திருப்திகாண்பதற்கு அது தொடர்பான அறிவை இன்னும் வளர்க்க வேண்டும்.

(16ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளுக்கு வழங்கப்படுமானால்

# வடக்கு - கிழக்கு சிங்கள மக்களுக்கும் இடைக்கால நிர்வாக சபை வேண்டுமாம்

### சிங்கள அமைப்பு கோரிக்கை

கொழும்பு,ஓக.16

வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகளையும் முஸ்லிம் மக்களையும் இலக்காகக் கொண்டு இடைக்கால நிர்வாகசபை அமைக்கப்படுமானால், வடக்கு - கிழக்கில் வாழும் சிங்கள மக்களுக்கும் சகல அதிகாரங்களைக் கொண்ட அவ்வாறான சபை வழங்கப்படவேண்டும்.

- இவ்வாறு வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்பு கோரியிருக்கின்றது.

விடுதலைப் புலிகளுக்கு மாத்திரம் இடைக்கால நிர்வாகசபை வழங்கப்படுமானால், அது மேலும் சிக்கலை ஏற்படுத்தும் என்று அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் -

வடக்கு - கிழக்கில் வாழும் சகல இனமக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலேயே உத்தேச இடைக்கால நிர்வாகசபை இருக்குமென விடுதலைப் புலிகளின் அரசியற்றுறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்திருக்கிறார்.

மேலும், உத்தேச இடைக்கால நிர்வாகசபை குறித்து எதிர்காலத்தில் முஸ்லிம் பிரதிநிதிகளுடனும் விடுதலைப் புலிகள் பேச்சு நடத்தவிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

வடக்கு - கிழக்கு இணைந்த தாயகப் பிரதேசத்தில் வாழும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்துவதே தங்களது தலைமைப்பீடத்தின் நோக்கம் எனவும் தமிழ்ச்செல்வன் கூறியுள்ளார்.

முஸ்லிம் மக்களும் வடக்கு -கிழக்கிலேயே வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கான பிரதிநிதித்துவம், எதிர்பார்ப்புகள் ஆகியவை குறித்து சில முடிவுகளை எடுக்க்வேண்டிய நிலையில் தாங்கள் இருப்பதாகவும் - இது தொடர்பாக முஸ்லிம் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்த விருப்பதாகவும் - தமிழ்ச்செல்வன் தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-8)



**தாய்லாந்துப் பிரதமர் தக்சின் சின்வாரோ நேற்று நாடாளுமன்றத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க உரையாற்றினார். எலிசபெத் மகாராணிக்குப் பின்னர் இலங்கை நாடாளுமன்றில் வெளிநாட்டுத் தலைவர் ஒருவர் உரையாற்றியமை இதுவே முதற்றடவை. (விரிவான செய்திகள் 2ஆம் பக்கத்தில்)**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# அடுத்தவாரம் பிரதமர் இந்தியாவுக்கு விஜயம்

கொழும்பு,ஓக.16

இரண்டு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடுத்த வாரம் இந்தியா செல்லவுள்ளார்.

22 ஆம் திகதி கொழும்பில் இருந்து புறப்படும் பிரதமர், மறுநாள் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தினால் சென்னை 'டாட்டா வேர்ச்சுவல் அக்கடமி' நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒரு நிகழ்வில முக்கிய உரையாற்றுவார்.

சென்னையில் தங்கியிருக்கும் போது தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவையும் பிரதமர் ரணில் சந்தித்துப் பேசவுள்ளார்.

இராமேஸ்வரத்துக்கும் தலைமன்னாருக்கும் இடையில் பாலம் அமைப்பது குறித்த பிரதமர் ரணிலின் யோசனை தொடர்பாக இந்தச்சந்திப் பின்போது ஆராயப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தப்பாலம் அமைக்கப்படுவதற்கு எதிர்ப்புத்தெரிவித்து தமிழக முதல்வர் இந்தியப் பிரதமருக்கு ஏற்கனவே கடிதம் அனுப்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தனது இரு நாள் விஜயத்தின் போது இலங்கைப் பிரதமர் கொச்சினுக்கும் செல்லவுள்ளார். (ம)

## மெதடிஸ்த பாடசாலை நிகழ்வுக்காக

# உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் பெற்றோர் செல்ல படையினர் தடை

வடமராட்சி,ஓக.16

பாடசாலையில் இடம்பெற்ற தேர்ச்சி அறிக்கை பெறும் நிகழ்வில் கலந்து கொள்ளச்சென்ற குறிப்பிட்ட பாடசாலை மாணவர்களின் பெற்றோர் படையினரால் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை மாணவர்களின் பெற்றோருக்கே நேற்று இந்தக் கதி நேர்ந்தது.

குறித்த பாடசாலையில் மாணவர்களுக்கான மாணவர் தேர்ச்சி அறிக்கை பெற்றோர் முன்னிலையில் வழங்குவதற்கு ஏற்பாடுசெய்யப்பட்டு பெற்றோர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

எனினும், பருத்தித்துறை அதி உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் இப் பாடசாலையின் நுழைவாயிலிலுள்ள காவலரணில் நிலைகொண்டிருந்த படையினர் பெற்றோரை பாடசாலைக்குள் செல்ல அனுமதி வழங்கப்பட மாட்டாது என்று கூறி அவர்களைத் திருப்பி அனுப்பிவிட்டனர்.

பாடசாலைக்குள் செல்வதாயின் மூன்று நாள்களுக்கு முன்னர் அனுமதி பெற்றிருக்கவேண்டும் என படைத் தரப்பில் கூறப்பட்டதாக பெற்றோர்கள தெரிவித்தனர்.

பெற்றோர்கள் சமுகமளிக்காத நிலையில் மாணவர் தேர்ச்சி அறிக்கை மாணவிகளிடம் வழங்கப்பட்டன.

இதேவேளை, பருத்தித்துறை கோட்டக் கல்வி அதிகாரி புஸ்பலிங்கமும் கடமையின் நிமிர்த்தம் பாடசாலைக்குள் செல்லத்தயாரானபோதும் அவருக்கும் படையினர் அனுமதி வழங்கவில்லை எனக் கூறப்பட்டது.(எ-173)

# பேராதனைப் பல்கலைக்கழக ஜி.ஏ.கியூ பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.16

பேராதனைப்பல்கலைக்கழக வெளிவாரிப்பரீட்சைகள் பிரிவினால் இன்று முதல் நடத்தப்படவிருந்த முதற்கலைத் தேர்வு (ஜி.ஏ.கியூ) தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பரீட்சை யாழ்ப்பாணம், பேராதனை, கொழும்பு, குருநாகல் ஆகிய மாவட்டங்களில் நடைபெறவிருந்தது.

பரீட்சை நடைபெறும் புதிய திகதி விரைவில் அறிவிக்கப்படும் என்றும் கூறப்பட்டது. (எ)

# மூதூரில் அமைதி நிலவுகிறது; வழமைபோன்று அலுவல்கள்

மூதூர், ஓக.16

மூதூரில் பதற்றம் தணிந்து நேற்று அமைதி நிலவியது. கடைகள் ,பாடசாலைகள், வங்கிகள் ,அரசாங்க அலுவலகங்கள் அனைத்தும் வழமைபோல இயங்கின.

மூதூர் பொலீஸ் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு அமுலுக்கு வந்த ஊரடங்குச் சட்டம் நேற்றுக் காலை 6 மணிக்கு நீக்கப்பட்டது. சம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

வழமைநிலை திரும்பிய போதும் பஸ் போக்குவரத்து மிகக் குறைவாகவே காணப்பட்டது. மூதூரில் பொலீஸாருடன் இணைந்து இராணுவத்தினரும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். ரோந்து சேவைகளும அதிகரிக்கப்பட்டுள்ளன.

மூதூர் கிழக்கு , மூதூர் தெற்கு, ஈச்சிலம் பற்று ஆகிய தமிழ்ப் பகுதிகளில் இருந்து தமிழ் மக்கள் மூதூர் நகருக்கு வருவதை தவிர்த்துள்ளனர். மூதூர் கிழக்கிலிருந்து நோயாளர்கள் கிளிவெட்டி வழியாக திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

மூதூரைச்சேர்ந்த இரு முஸ்லிம்கள் திருகோணமலை செல்வநாயகபுரத்தில் கடந்த 13 ஆம் திகதி இரவு சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து நேற்று முன்தினம் மூதூரில் பதற்றம் நிலவியது தெரிந்ததே.

கொல்லப்பட்டவர்களது இறுதிக் கிரியைகள் நேற்றுமுன்தினம் மாலை மூதூரில் இடம்பெற்றன. (ம)

# தாய்லாந்துப் பிரதமர் தக்சினுக்கு நேற்று நாடாளுமன்றில் செங்கம்பள வரவேற்பு

கொழும்பு,ஓக.16

தாய்லாந்துப் பிரதமர் தக்சின் சின்வத்ராவுக்கு நேற்று நாடாளுமன்றத்தில செங்கம்பள வரவேற்பளிக்கப்பட்டது. முப்படை வீரர்கள் நாடாளுமன்ற பிரதான வாயிலின் இரு மருங்கிலும் அணிவகுத்து நின்று மரியாதை செலுத்தினர். குதிரைப்படை வீரர்கள் சூழ மோட்டார் பவனியில் அழைத்துவரப்பட்ட தாய்லாந்துப் பிரதமரை சபாநாயகரும நாடாளுமன்றச் செயலாளர் நாயகமும வரவேற்றனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ மற்றும் படைகல சேவிதர் ஆகியோர் பிரதான வரவேற்பு மண்டபத்தில் தாய்லாந்துப் பிரதமரை வரவேற்றனர்.

அங்கு இலங்கை - தாய்லாந்து வர்த்தகக் கூட்டு ஒத்துழைப்பு ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டது.

இருநாட்டுப் பிரதமர்களினதும் முன்னிலையில் தாய்லாந்து வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுரகியாட் சதிராதய், இலங்கை வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ ஆகியோர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.



*இலங்கை - தாய்லாந்து வர்த்தக கூட்டு ஒத்துழைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது....*

வெளிநாட்டுத் தூதுவர்களும், விசேட விருந்தினர்களும் பார்வையாளர்கள் கலரியில் நிறைந்திருந்தனர்.

சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தாய்லாந்துப் பிரதமரை வரவேற்றுப் பேசினார். அதனைத்தொடர்ந்து தாய்லாந்துப் பிரதமர் வரலாற்றுச் சிறப்புமிக்க உரையை நிகழ்த்தினார்.

1985 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் பிரதமர் மார்கிரெட் தட்சர் இலங்கை விஜயத்தின்போது நாடாளுமன்றத்தில் உரையாற்றினார். அதன் பின்னர் வெளிநாட்டுத் தலைவர் ஒருவர் நாடாளுமன்றத்தில் உரையாற்றியது இதுவே முதற்தடவையாகும்.

தாய்லாந்துப் பிரதமர் உரையாற்றியபின் சபை முதல்வரும், நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சருமான டபிள்யூ. ஜே.எம்.லொக்குபண்டார, எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரும் உரையாற்றினர்.

# இலங்கையை மீளக் கட்டியெழுப்ப சகல உதவிகளையும் வழங்குவோம்

## நாடாளுமன்ற உரையில் தாய்லாந்துப் பிரதமர் உறுதி



*நாடாளுமன்றத்துக்கு சபாநாயகரால் அழைத்துவரப்படும் தாய்லாந்துப் பிரதமர்.*

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கு தாய்லாந்து அரசு சகல உதவிகளையும் வழங்கும். இலங்கையில் நிரந்தர சமாதானமும் அமைதியும் ஏற்படுத்தப்படுவதற்கான சமாதானப் பேச்சுகளுக்குக் களம் அமைத்துக்கொடுப்பதைத் தாய்லாந்து மக்களும் அரசினரும் கௌரவமாகவே கருதுகின்றனா என்று தாய்லாந்துப் பிரதமர் தக்சின் சின்வத்ரா நேற்று நாடாளுமன்றத்தில குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற விசேட அமர்வில் ஆற்றிய உரையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஆசிய கண்டத்தில் அழகிய முத்தைப்போன்று பிரகாசிக்கும் இலங்கையில் அமைதியும் சமாதானமும் ஏற்பட வேண்டும் என்ற பிரார்த்தனையுடன் தனது உரையை ஆரம்பித்த தாய்லாந்துப் பிரதமர் மேலும் கூறியதாவது:-

இலங்கையின் பொருளாதார, கூட்டு வர்த்தக அபிவிருத்திக்கு நூறு கோடி ரூபாவையும், ஏற்றுமதிக் கடனாக இரண்டு கோடி ரூபாவையும் வழங்குகின்றோம். மேலும் விவசாய, கைத்தொழில், சுகாதார அபிவிருத்திகளுக்காக இரண்டு வருடங்களில் எட்டு கோடி ரூபாவையும் வழங்கத் தீர்மானித்துள்ளோம்.

இலங்கையைப் போன்று தாய்லாந்தும் உலக வங்கிக்கும் சர்வதேச நாணய நிதியத்திற்கும் கடனாளியாகவே இருந்தது. ஆனால், நாம் மேற்கொண்ட துரித அபிவிருத்தித்திட்டங்களின மூலம் கடன்களில் இருந்து விடுபட்டிருக்கின்றோம்.

ஒரு கிராமத்திற்கு ஓர் உற்பத்தி, அனைவருக்கும் சுகாதாரம், கிராமங்கள் தோறும் கைத்தொழில்கள், எல்லோருக்கும் இலகுகடன் என்ற நான்கு முக்கிய குறிக்கோள்களுடன் செயற்பட்டதாலேயே பாரிய அபிவிருத்தியைக் காண முடிந்தது. இதனை இலங்கையும் பின்பற்ற வேண்டும்.

இப்பொழுது ஐரோப்பிய ஒன்றியம், ஆபிரிக்க ஒன்றியம், சர்வதேச நாணய நிதியம் என பலமிக்க அமைப்புக்கள் இருக்கின்றன.

ஆனால், ஆசிய நாடுகள் மத்தியில் உறுதியான ஓர் அமைப்பு இல்லை. எனவே, ஆசிய நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியை உறுதி செய்யும் வகையில் ஆசிய நாடுகளின் அபிவிருத்தி நிதியத்தளம் பலப்படுத்தப் படவேண்டும்.

கடந்த ஆண்டு இலங்கையும் இந்த அமைப்பில் இணைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த அமைப்பின் ஆசிய ஒத்துழைப்பு மாநாடு இலங்கைப் பிரதமரின் தலைமையில் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- இவ்வாறு அவர் கூறினார்.

# இன முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் செயற்பாடுகளை அனுமதிக்க முடியாது!

## புலிகளின் மட்டு.-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கருத்து

நிந்தவூர்,ஓக.16

தமிழ்-முஸ்லிம் இன முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் செயற்பாடுகளில் அரசியல்வாதிகள் ஈடுபடுவதை ஒருபோதும் அனுமதிக்கமுடியாது என்று விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் கருத்து வெளியிட்டார்.

நேற்று ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற அம்பாறை மாவட்ட தமிழ் - முஸ்லிம் மக்களின் காணி மற்றும் பிரச்சினைகளை ஆராய்வதற்கான மாவட்டக்குழுக் கூட்டத்தின் முடிவில் ஊடகவியலாளர்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

"தமிழ், முஸ்லிம் மக்களிடையே கசப்புணர்வுகளை மறந்து நல்லுறவை மேம்படுத்துவதற்கு நாம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

அவற்றில் ஓர் அங்கமாகவே தமிழ், முஸ்லிம் மக்களின் காணிப்பிரச்சினைகளுக்குப் பரஸ்பரம் சுமுகமான தீர்வுகளைகக் காண்பதற்கென இத்தகைய மாவட்டக் குழுக்கூட்டங்களை நடத்தி வருகின்றோம்.

இந்த நோக்கில் இருசாராரும் நல்ல முன்னேற்றங்களை [illegible] வருகின்றோம்.

இப்படியான நல்ல நிகழ்வுகள் நடக்கும் காலகட்டத்தில் முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலர் திட்டமிடப்பட்ட இனமுரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவது கவலையளிப்பதுடன், விசனத்தையும் ஏற்படுத்துகின்றது.

குறிப்பாகச் சொல்லப்போனால் இன்று இவர்கள், கடந்த காலங்களில நடைபெற்ற முஸ்லிம்களின் படுகொலைகளை மெருகூட்டி, கடுமையான முறையில் பிரசாரம் செய்து வருகின்றனர்.

பழைய நிலைமையை மீண்டும் கொண்டுவர இவர்கள் விரும்புகிறார்களா?

[illegible] தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் என்றில்லாமல் எல்லா இனங்களையும் சேர்ந்தவர்களில் ஒரு சிலர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

எமது தலைவரின் முழு நோக்கமும், கடந்தகால படுகொலைகள், கசப்பான சம்பவங்கள் இனிவரும் காலங்களில் ஒரு போதும் நடக்கக் கூடாது என்பதுதான்.

இதற்காகவே தமிழ், முஸ்லிம் மக்களிடையே அடிமட்டப் பிரச்சினைகளுக்குக்கூடப் பேச்சு நடத்தி நல்ல சூழ்நிலைகளைத் தோற்றுவித்து வருகின்றோம்.

இக்காலகட்டத்தில் குரோத செயற்பாடுகளையும் இனங்களுக்கிடையே முரண்பாடுகளையும் தோற்றுவிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்கள் அதற்கான கடும் தண்டனைக்கு உரியவர்களாகின்றார்கள்.

இப்படியான செயற்பாடுகள் வளருமேயானால் தமிழ், முஸ்லிம் மக்களிடையே மேலும் மேலும் முரண்பாடுகள் தோன்றும். அதன் விளைவுகள் பாரதூரமானவையாக இருக்கும்.

இத்தகைய நிலைமைகள் உருவாகுவதை நாம் ஒருபோதும் விரும்பவில்லை.

விடுதலைப் போராட்டத்திற்கு நல்ல தீர்வு கிடைத்து, வடக்கு-கிழக்கு பிரதேசத்தில் வாழும் மக்கள் சுதந்திரமாகவும், நிம்மதியாகவும், சுயநிர்ணய உரிமையுடனும் வாழ வேண்டும் என்பதே எமது தேசியத் தலைவரின் நோக்கமும் விருப்பமும் ஆகும்.

அதனாலேயே சர்வதேச அனுசரணையுடன் அரசாங்கத்தொடு அரசியல் பேச்சு நடத்த முன்வந்தோம்.

கடந்த காலக் கசப்பான உணர்வுகளை எல்லோரும் விட்டுவிட்டு இனி வரும் காலங்களில் அப்படியான செயற்பாடுகள் நடைபெறாமல் நாம்

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா, கனடாவில் பாரியளவில் மின்தடை

நியூயோர்க்,ஓக.16


நியூயோர்க் உட்பட அமெரிக்காவின் வடபகுதியிலும், டொரன்டோ உட்பட கனடாவின் தெற்குப் பகுதியிலும் நேற்றுமுன்தினம் பாரியளவில் மின்தடை ஏற்பட்டது. நயகரா நீர்வீழ்ச்சிப் பகுதியில் உள்ள மின் உற்பத்தி நிலையத்தை இடிதாக்கியதே இந்த மின்தடைக்குக் காரணம் என்று கனடிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆனால், இதனை அதிகாரிகள் மறுத்துள்ளனர். தீவிரவாதச் செயலுக்கும் மின்தடைக்கும் தொடர்பில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த மின் தடையால் மின்சார ரயில்கள், லிப்டுக்கள் போன்றவற்றுக்குள் ஆயிரக்கணக்கானவர்கள் சிக்கிக்கொண்டனர். போக்குவரத்து சேவைகள் மற்றும் வீதிச்சைகைகள் செயலிழந்ததால் அமெரிக்க, கனடிய நகரங்கள் ஸ்தம்பித்தன. தற்போது மின்சாரம் பகுதிபகுதியாக வழங்கப்பட்டு வருகின்றது.



மின்சாரத்தடை காரணமாக நியூயோர்க் நகரில் போக்குவரத்து ஸ்தம்பித்தது. இதனால் வீதிகளில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது.



அமெரிக்காவில் உள்ளூர் சேவையில் ஈடுபடும் ரயில்கள் மின்சாரத்திலேயே இயங்குகின்றன. மின்சாரம் தடைப்பட்டுப் போனதால் நட்ட நடுப் பாலத்தில் ரயில் ஒன்று நிற்கிறது.




ஐரோப்பிய நாடுகளைப் போலவே அமெரிக்காவிலும் வெப்பநிலை அதிகரித்துள்ளது. இந்த நிலையில் மின்சாரம் இல்லாததால் வீடுகளுக்குள் இருக்கமுடியாது மக்கள் வீதிகளில் தங்கினர்.



எப்போதும் மின்சார ஒளிவிளக்குகளால் இரவிலும் பகலாகக் காட்சியளிக்கும் ரொரன்டோ நகர நெடுஞ்சாலை மின்சாரத் தடையால் புராதன காலம் போல் தீப்பந்த வெளிச்சத்துடன் காணப்பட்டது.

# பிரான்ஸில் அனல் பறக்கும் வெப்பம்; இரண்டு வாரங்களில் 3,000 பேர் பலி!

பரீஸ்,ஓக.16

பிரான்ஸில் வெப்பம் அனல் பறக்கின்றது. இதன் காரணமாக அங்கு கடந்த இரு வாரங்களில் 3 ஆயிரம் பேர் வரை இறந்துள்ளனர்.

அந்நாட்டின் பிரதமர் ஜுன் - பைரி ராபரின் சுகாதார அமைச்சர் பிராங்கோஸ் மற்ரேய் மற்றும் அதிகாரிகள் நேற்றுமுன்தினம் இதுதொடர்பான அவசரக் கூட்டமொன்றையும் நடத்தினர். கடும் வெப்பத்தினால் ஏற்படும் மரணத்திற்குக் காரணமான 'தொற்று நோய்' பற்றி அவர்கள் உரையாடினர்.

வைத்தியர்கள், தாதிகளின் விடுப்புக்கள் ரத்துச்செய்யப்பட்டன. பிரேத கூடத்தொழிலாளர்களில் ஓய்வு பெற்றவர்கள் கூட அவசரமாக அழைக்கப்பட்டனர். மேலதிக படுக்கைகளுக்கும் மருத்துவமனைகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்த நெருக்கடி நிலையில் அந்நாட்டு அரசின் மெத்தனம்" பற்றி அவசரகால சேவை வைத்தியர்கள் விசனம் தெரிவித்தனர். நெருக்கடி ஏற்பட்ட காலத்தில் அமைச்சர்கள் பிரதமர் உட்பட பலர் விடுமுறையில் சென்றிருந்தனர்.

எட்டு நாள்கள் தொடர்ச்சியாகப் பணியாற்றிய வைத்தியசாலை ஊழியர்கள் களைப்படைந்துள்ளனர். ஆனாலும், நெருக்கடி நிலை தொடர்கின்றது.

வெப்பம் இவ்வாறு கடுமையாகப் பாதிப்பதற்கு முக்கிய காரணம்,

அந்நாட்டின் கட்டடங்கள், வீடுகள் குளிர்கால நிலைக்குப் பாதுகாப்பு வழங்கும் நோக்கில் அமைக்கப்பட்டமையே என்று கூறப்படுகின்றது. வழமையிலும்பார்க்க மிகவும் அதிகமான வெப்பம் இப்போது நிலவுகின்றது. வெப்பத்தாக்கத்தினால் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பிரான்ஸ் முழுவதிலும் 3,000 பேர் இறந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. கடந்த வருடம் இந்தக் காலத்தில் இறந்தவர்களை விட இது 37 சதவீதம் அதிகமாகும்.

பரீஸ் நகரில் மட்டும் 2,000 பேர் இறந்திருப்பதாக வைத்தியர்களின் சங்கம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

நகரின் பிரேத அறைகள் நிரம்பி வழிகின்றன. இறந்த உடல்களை வைப்பதற்குக் குளிரூட்டப்பட்ட தற்காலிக முகாம்கள் எழுப்பப்படுவதாக ரி.எவ்.பி.ஐ. தொலைக்காட்சி தெரிவித்தது.

கடந்த 3 ஆம் திகதியிலிருந்து 13ஆம் திகதி வரையான காலகட்டத்தில் வெப்பநிலை 40 பாகை செல்சியஸ் (100 பாகை பரனைட்) ஆக உயர்ந்ததாக அத்தொலைக் காட்சி மேலும் தெரிவித்தது. பிரான்ஸில் வெப்பம் சாதாரணமாக 23 பாகை செல்சியஸ் ஆக இருப்பதே வழக்கம்

உலக அரங்கில்

# இந்தியச் சுதந்திர தின உரையில் வாஜ்பாய் வார்த்தை தடுமாற்றம்

டில்லி,ஓக.16

எதிர்வரும் 2008 ஆம் ஆண்டுக்குள் சந்திர மண்டலத்துக்கு விண்வெளி ஓடத்தை இந்தியா அனுப்பும் என்று இந்தியப் பிரதமர் வாஜ்பாய் தெரிவித்தார்.

டில்லி செங்கோட்டையில் நேற்று சுதந்திர தின விழாவில் பேசிய போது, இதனை அவர் தெரிவித்தார். இதற்கு 'சந்திரயான்பிரதம்' என்று பெயர் சூட்டப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பிரதமர் வாஜ்பாய் பேசும் போது, சந்திர மண்டலத்துக்கு 1908 இற்குள் விண்வெளி ஓடத்தை இந்தியா அனுப்பும் என்று தவறுதலாகக் கூறினார்.

அதேபோல் பூமியிலிருந்து சந்திரமண்டலத்துக்கு விண்வெளி ஓடத்தை அனுப்பவுள்ள முதல் வல்லரசாக இந்தியா திகழும் என்றும் குறிப்பிட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜெய்ப்பூரில் நடந்த பா.ஜ.க. பேரணியில், மக்களவைத் தேர்தலுக்கு இன்னும் இரண்டரை ஆண்டுகள் உள்ளன என்று தவறுதலாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

சுமார் 100 கோடி சனத்தொகையைக் கொண்டதும், இலங்கைப் பிரச்சினையில் செல்வாக்குச் செலுத்த விரும்புவதுமான இந்திய அரசை வழிநடத்துபவர் பிரதமர் வாஜ்பாய் என்பது குறிப்பிடத்தக்கது.

# உலகில் மிகவும் ஆபத்தான பகுதிகளில் காஷ்மீரும் ஒன்று

## அமெரிக்க துணை அமைச்சர் தெரிவிப்பு

இஸ்ரேல், பலஸ்தீனத்துக்கு அடுத்த படியாக உலகின் மிகவும் ஆபத்தான பகுதி காஷ்மீர் என்று அமெரிக்க வெளியுறவுத்துறைத் துணை அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் தெரிவித்தார்.

ஆஸ்திரேலியாவில் ஆசிய சமூகத்தினிடையே நடந்த கூட்டத்தில் பேசும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்கு ஆசியாவில் இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத்துக்கு இடையே அமைதி நடவடிக்கைக்கான செயல் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளது குறித்து அவர் விளக்கம் அளித்தார்.

இஸ்ரேலும் பலஸ்தீனமும் உலகின் மிக ஆபத்தான பகுதியாக உள்ளன. அதேபோல் காஷ்மீரும் இதே நிலையைக் கொண்டுள்ளது.

ஆஸ்திரேலிய அரசின் வெளியுறவுக் கொள்கையின் வெள்ளை அறிக்கையை வெளியிட்டுப் பேசிய ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் அலெக்ஸாண்டர் டௌனர், ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் தைவான் ஜலசந்தி, கொரிய தீபகற்பம் மற்றும் காஷ்மீர் ஆகிய மூன்றும் பெரும் சர்ச்சைக்குரிய பகுதிகளாகும் என்று தெரிவித்தார்.

# இரண்டு பாகிஸ்தானியர் அமெரிக்காவில் கைது

அமெரிக்காவில் விமானப் பயணம் செய்வதற்கு தடைவிதிக்கப்பட்டிருந்த 2 பாகிஸ்தானியர்கள் நியூயோர்க் நகருக்கு விமானப்பயணம் செய்ய முயன்ற போது கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் சியாட்டில் நகரிலிருந்து நியூயோர்க் செல்வதற்கு பயணச் சீட்டு கேட்டு விமான நிலைய முகவரை அணுகினர்.

முகவர், அவர்களது பெயர்கள் தடைவிதிக்கப்பட்ட பெயர்களடங்கிய பட்டியலில் இருப்பதை இனங்கண்டு பொலீஸாருக்குத் தகவல் தெரிவித்தார்.

பொலீஸார் அவர்களை கைது செய்தனர். விமானங்களைக் கடத்தக் கூடியவர்கள் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானவர்கள் என்று சந்தேகிக்கும் நபர்கள் விமானத்தில் பயணம் செய்ய அமெரிக்கா தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அல் கெய்டாவின் முக்கிய புள்ளி கைது!



பாங்கொக்,ஓக.16

ஆசியாவிலுள்ள அல்கெய்டா அமைப்பின் முக்கிய உறுப்பினர்களுள் ஒருவர் தாய்லாந்தில் பிடிபட்டார். ஹம்பாலி என்றழைக்கப்படும் நித்வான் இஸ்தீன் என்ற இந்தோனேசியரே பிடிபட்டவராவார்.

இவர் அமெரிக்காவிடம் கையளிக்கப்பட்டார். கடந்த புதனன்று அமெரிக்க விசேட விமானம் இவரை பாங்கொக் விமான நிலையத்திலிருந்து அமெரிக்காவுக்கு ஏற்றிச் சென்றுள்ளது.

# இடி அமீனுக்கு சிறுநீரகம் தேவை



உகண்டாவின் முன்னாள் சர்வாதிகாரி இடி அமீனுக்கு சிறுநீரகத்தைத் தானம் செய்யக்கூடியவரை தேடி வருவதாக அவரது மகன் காசிம் அலி தெரிவித்தார்.

தற்போது இடி அமீன் சிறுநீரகம் போன்று செயற்படும் இயந்திரத்தின் உதவியுடனேயே உயிர்வாழ்வதாகவும் அவர் மேலும் கூறினார்.

# ஷியா பிரிவு முஸ்லிம்களுக்கு சதாம் ஹுசைன் அழைப்பு

டோஹா,ஓக.16

ஈராக்கை ஆக்கிரமித்துள்ள அமெரிக்கர்களையும், பிரிட்டிஷாரையும் எதிர்த்துப் புனிதப் போர் நடத்துமாறு ஈராக்கில் பெரும்பான்மையாக உள்ள ஷியா முஸ்லிம்களுக்கு முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கைப்பட எழுதியிருக்கும் கடிதத்தை அல் ஜெஸீரா தொலைக்காட்சி ஒளிபரப்பியது.

ஷியா முஸ்லிம்களின் தலைவரான அயதுல்லா அலிசிஸ்தானியை அமெரிக்கர்களுக்கு எதிராகப் புனிதப் போர் நடத்துமாறு ஷியா முஸ்லிம்களுக்கு அழைப்பு விடுக்குமாறு அக்கடிதத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார் சதாம்.

'புனிதப் போர் நடத்துமாறு ஷியாக்களுக்கு அழைப்பு விடுங்கள். அதன் மூலம், ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக அனைத்து ஈராக்கிய மக்களும் ஒன்றுபட்டு நிற்கின்றனர் என்பதை பிரகடனம் செய்யுங்கள்' என்று அக்கடிதத்தில் சதாம் அலி சிஸ்தானியை கோரியுள்ளார்.

சன்னி முஸ்லிம் பிரிவைச் சேர்ந்தவர் சதாம். அவரது ஆட்சிக் காலத்தில் ஷியா பிரிவினரை அவர் அடக்கி ஒடுக்கி வைத்திருந்தார். இருந்த போதிலும் ஷியா பிரிவினருக்கு இப்போது அவரே அழைப்பு விடுத்திருக்கிறார்.

போருக்குப் பிந்தைய ஈராக்கில் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்துவதில் சிஸ்தானி முக்கிய பங்கு வகிப்பார் என்று அமெரிக்கர்கள் கருதுகின்றனர். ஆனால், ஈராக்கை அமெரிக்கர்கள் ஆக்கிரமித்து இருப்பதற்கு அவர் எதிர்ப்புப் தெரிவித்துள்ளார். ஈராக்கை ஈராக்கியர்களே ஆட்சி புரிய அனுமதிக்க வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

இந் நிலையில், புனிதப் போருக்கு அழைப்பு விடுக்குமாறு அவருக்கு தனது கடிதத்தின் மூலம் கோரிக்கை விடுத்திருக்கிறார் சதாம் ஹுசைன்.

PRASHANNAA COMPUTER STUDY CENTRE • CSC •
A/L பெறுபேறு எதிர்பார்த்து நிற்பவரா?
உங்கள் எதிர்காலத்தை நீங்களும் பிரகாசிக்கச் செய்யலாம்!
இன்றே இணையுங்கள்!!
பிரசன்னா கணனிக் கல்வி நிலையம்
K.K.S. வீதி, சுன்னாகம்
புதிய பிரிவுகள் ஆரம்பம் 18.08.2003
★Dip. in MS Office ★Dip. in Desktop Publishing
★Hardware Engineering
...dra Graphics

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

தச்சுவேலை செய்யும் சீனா மெசின்கள் 10",12",14",16" ஆகியன வும் மின்சார றில்லர்கள், அலுமினிய கட்டிங் மெசின், வெல்டிங் டிரான்ஸ் போமர்கள், ஜெனரேற்றர்கள் ஆகியன வும் விற்பனைக்குண்டு. தொடர்பு: கிசுதா கரன், இல.20, 2ஆம் ஒழுங்கை, அரசடி வீதி, நல்லூர். (21409)

கொழும்பிலிருந்து கொண்டு வரப் பட்ட தூய இன யேமன் ஷெப்பேட் அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்ப னைக்குண்டு. தொடர்பு: இல.59, சிவன் புதுவீதி, நல்லூர். (21447)

African லவ்பேட்ஸ், புதியரக Finchers, வெள்ளை சிறியரக மணிப் புறா. ஜாவா குருவிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 169, மருத்துவபீடம் முன்பாக, திருநெல்வேலி. (21446)

நல்ல நிலையிலுள்ள வொக்ஸ் வெகன் 1300 கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: 115/1, அரசடி வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம். (21461)

திருத்திப் பாவிக்கக் கூடிய நிலை யிலுள்ள பியானோ எக்கோடியன், கிற்றார், வயலின், ஓர்கன், National T.V (2071) என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: றோய், 44, பாற்பண்ணை வீதி, திருநெல்வேலி. (21460)

## ஓடுகள் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள (பாவித்த) சுமார் 800 ஓடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 55, சீனியர்லேன், யாழ்ப் பாணம். T.P. 222 3772. (21463)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் விளையாட்டு மைதானத்துக்கு அரு கில் உள்ள ஒழுங்கையில், மயூரன் கொமினிகேசனுக்கு அண்மையில் 10 பரப்பில் அமைந்துள்ள, ஒரு தரமான வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P. 222 2869. (21455)

## வீடு விற்பனைக்கு

மானிப்பாயில் சகல வசதிகளும் கொண்ட மேல்மாடி வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.சுந்தரலிங்கம் ஆசிரியர், சோதிவேம்படி, மானிப் பாய். (21438)

இல.15, பொன்னப்பா லேன், வண்ணார்பண்ணையில் 3 அறையுடன் கூடிய சகல வசதிகளுடனும் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. பொது நிறு வனங்களுக்கு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு கொடுக்கப்படும். மேற் கூறிய விலாசத்துடன் நேரில் தொடர்பு கொள்ளவும். (21443)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் 1Kg 160/-. மொத்த மாகவும், சில்லறையாகவும் விற்பனைக் குண்டு. தொடர்பு: 1.மான்ஸ் பாட சாலை வீதி, டச்றோட், உடுவில். 2.பொன்னாலை வீதி, விதானைவளவு, மானிப்பாய் 3. மீன் சந்தை முன்பாக, சுன்னாகம். (21336)

## பூங்கன்றுகள் விற்பனைக்கு

முசந்தாஸ் (சிவப்பு - பிங்), எவ கிறீன், நித்தியகல்யாணி, பாரிஜா தம், ஐந்தூரியம் (சிவப்பு), மஞ்சள் கொடிப்பூ, செவ்வரத்தை, அடுக்கு நந்தியாவெட்டை, ஈரப்பலா ஆகிய கன்றுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (I.C.R.Cக்கு அண்மையில்)
T.P. 222 - 6563 (21466)

## மனையடி வாஸ்து சாஸ்திரம்

உங்களது சகல குறைகளையும் நிவர்த்தி செய்துகொள்ளவும், புது மனை நிலையம் (மனைப் பொருத் தம்) பார்க்கவும் நீங்கள் அணுக வேண்டிய இடம்: S.S யோகராஜ், வாஸ்து வல்லுநர், 44/1, யாழ்வீதி யாழ்ப்பாணம். T.P. 077 6082534 (சி-29525)

## வீடு வாடகைக்கு

835, நாவலர் வீதியில் (கனகரத் தினம் ம.ம.வி. - ஸ்ரான்லி அருகில்) அழகாகத் திருத்தி அமைக்கப்பட்ட பெரியமாடி வீடு ஏற்ற சூழலில் வாட கைக்குண்டு. மருத்துவமனை, ஸ்தா பனங்கள் நடத்துவதற்கு ஏற்ற வசதி யுடையது. தொடர்பு: சோ.சிவபாத சுந்தரம், 272, ஆனந்தன் வடலி வீதி, அரியாலை. T.P. 021 222 6338 (21475)

## வீடு காணி தேவை

யாழ்.விழிப்புலனற்றோர் சங் கத்தினரின் காரியாலயத்தினை இயக கவும் மற்றும் பார்வையற்ற அங்கத் தினர்கள் ஒன்று கூடவும் வீடு அன் றேல் காணி வாடகைக்கோ அல்லது விலைக்கோ தேவை. மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பகுதி விரும் பத்தக்கது. தொடர்பு: 228, பிரதான வீதி, யாழ்ப்பாணம், T.P. 6017, 2) செயலாளர், 151, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (21384)

உடுப்பிட்டிச் சந்தியிலிருந்து 3 கிலோ மீற்றர் தொலைவிற்குள் வீடு அல்லது காணி வாடகைக்கு அல் லது குத்தகைக்குத் தேவை. தொடர்பு: சாம் இராஜசூரியர். T.P. 222 3204, 0777 174500. (21382)

## சாவகச்சேரியில் மேலும் 2 வீதிகளுக்கு மின்சாரம்

சாவகச்சேரியில் மேலும் இரு வீதி களுக்கு மின்சார விநியோகம் நேற்று முன்தினம் தொடக்கம் வழங்கப்படு கிறது.

பெரிய அரசடி, ஆசிரியர் வீதி பகுதி வீடுகளுக்கு சாவகச்சேரி ஆஸ் பத்திரி வளவில் உள்ள மின் பிறப் பாக்கி மூலம் மின்சாரம் விநியோகிக் கப்படுகிறது.

இதேவேளை, தென்மராட்சி பிர தேசத்திற்கு 24 மணிநேர மின் விநி யோகத்திற்கான வேலைகள் பூர்த்தி யடைந்துள்ளதாகவும் -

அளவெட்டிப் பகுதிக்கான உயர் அழுத்த மின்விநியோக வேலைகள் முடிவுற்றதும் இரு இடங்களுக்கும் இம்மாத இறுதிக்குள் மின்சாரம் வழங்கப்படும் எனவும் -

மின்சார சபை வட்டாரங்கள் தெரி வித்தன. (ஒ-117)

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு பிற்போடப்பட்டுள்ளது

யாழ்.பல்கலைக்கழக இளம்பொருளியலாளர் மன்றத்தினரின் இதழ்-4 வெளியீட்டுக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத பல காரணங்களால் எதிர்வரும் 31.08.2003 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

இதற்கான சீட்டுக்களை விற்பனை செய்தவர்கள் 22.08.2003 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு மேற்படி மனறத்தில் சீட்டுப் புத்தகங்களை ஒப்படைக்குமாறு வேண்டப்படுகின் றனர். (21464) (21-12-13) - மன்றத்தினர்.

## நெஞ்சை விட்டகலாத முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 - 01 - 1916



மறைவு 29 - 07 - 2002

### அமரர் தம்பாபிள்ளை சின்னையா

திதி- 16.08.2003 பஞ்சமி சனிக்கிழமை

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வத்துள் ஒன்றான ஐயாவே!
வையத்துள் நாம் வாழும் வரை
நீங்கள் தெய்வமாய் வழிகாட்டி நிற்பீர்கள்.

(21205)

சி. சிவயோகநாதன் (மகன்)
மதவடி ஒழுங்கை.
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

மனைவி, மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
சகோதரிகள்.

# மரண அறிவித்தல்கள்

## சதாசிவம் துரைசிங்கம்

(ஓய்வுபெற்ற போமன், நீர்ப்பாசனத் திணைக்களம்)

சண்டிலிப்பாய், ஐயனார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், 103A, டச்சு றோட், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற செல்வமணி துரைசிங்கத்தின் அன்புக்கணவர் சதாசிவம் துரைசிங்கம் 28.07.2003 அன்று காலமானார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் யாவும் யாழ்ப்பாணம் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
பிள்ளைகள்.

103A, டச்சு றோட்,
உடுவில்.

(21477) (21-12-13)

## திருமதி சிவசுப்பிரமணியம் கோசலையம்மா

வல்வெட்டித்துறை, ஊரிக்காட்டைச் சேர்ந்த திருமதி சிவசுப்பிரமணி யம் கோசலையம்மா அவர்கள் நேற்றுமுன்தினம் (14.08.2003) வியாழக் கிழமை மாலை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சி.வே.சிவசுப்பிரமணியம் (உரிமையாளர், பேபி சோடாக்கம்பனி, றாஜுஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும் திருமதி ச.ஞானசௌந்தரி அம்மா (லண்டன்), திருமதி ல.ரூபா சௌந்தரி அம்மா (கொழும்பு), திருமதி து.விமலாதேவி (ஆஸ்திரேலியா), திருமதி இ.சுபத்திராதேவி (ஆஸ்திரேலியா), செல்வி சி.சரோஜினிதேவி (வல்வெட்டித்துறை), திருமதி ஞா.பத்மாதேவி (இந்தியா), காலஞ்சென்ற செல்வன் சி.இராஜசேகரம் மற்றும் சி.ஞானசேகரம் (றாஜுஸ்ரோர்ஸ், யாழ்ப் பாணம்), சி.பாலசேகரம் (சுப்பிரமணியன் சோடாக்கம்பனி, வல்வெட்டித் துறை), காலஞ்சென்ற சி.குணசேகரம், திருமதி பொ.நிர்மலாதேவி (லண டன்), சி.குலசேகரம் (வல்வெட்டித்துறை), சி.ஸ்ரீதர் (லண்டன்) ஆகியோ ரின் அன்புத்தாயாரும் டாக்டர்.ஆ.சரவணமுத்து (லண்டன்), V.R.வைத் திலிங்கம் (ஆர்.வி.ஜீ.பீடிக்கம்பனி உரிமையாளர், கொழும்பு), நா.துரை சாமி(ஆஸ்திரேலியா), கி.இந்திரலிங்கம் (கொழும்பு), வ.ஞானகுரு(கனடா), திருமதி ஞா.சந்திராதேவி (கொழும்பு), திருமதி பா.ஜெயதேவி (யாழ்ப் பாணம்), திருமதி கு.தயாநிதி (இந்தியா), சு.பொன்னுத்துரை (லண்டன்). திருமதி கு.தெய்வானையம்மா (வல்வெட்டித்துறை), திருமதி ஸ்ரீ.ரஞ்சினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(16.8.2003) சனிக்கிழமை காலை 8மணிக்கு வல்வெட்டித்துறை ஊரிக்காட்டில் அன்னாரின் சொந்த இல் லத்தில் நடைபெற்று, பூதவுடல் வல்வை ஊறணி மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

(ப 29530)(21-12-13)

தகவல்:
மகன் சி.[illegible]
மகன் சி.ஞானசேகரம் (சேகர்)
மகன் சி.பாலசேகரம் (ரவி)

# கல்விச்சாலைக் காட்சிகள்



கல்வியங்காடு கஸ்ஸியோ பாலர்பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற விளையாட்டு நிகழ்வில் சிறார்கள் பாடல் இசைப் பதைப் படத்தில் காணலாம். பாடசாலை ஆசிரியர்களான செல்வி ரோகினி, செல்வி சர்மிளா ஆகியோரும் படத்தில் காணப்படுகின் றனர். (எ-180)



காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்ற போது அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட காரைநகர் உதவி அரசாங்க அதிபர் வே.சாம்பசிவத்தை வித்தியாலய அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை மாலை அணிவித்து வரவேற் பதைப் படத்தில் காணலாம். (எ-73)



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபராக அண்மையில் பொறுப்பேற்றுக் கொண்ட என்.ஏ.விமலேந்திரனுக்கு தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் கலாநிதி எஸ்.ஜெப நேசன் ஆசிவழங்குவதைப் படத்தில் காணலாம். (எ-185)



தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா மங்கள விளக் கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் செ.குபே ரநாதன், யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவ ராஜா, பாடசாலை அதிபர் செ.செல்வராசா ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (எ-76)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஜனாதிபதியின் போக்கு!

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் நோக்கோடு தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகள் தொடர்பாகத் தனது சுய ரூபத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளிப்படுத்தியிருக்கின்றார்.

தனது நிலைப்பாடு என்னவென்பதை கறுப்பு - வெள்ளையில், எழுத்தில் தந்திருக்கின்றார் அவர்.

வடக்கு - கிழக்குக்கு இடைக்கால நிர்வாகம் வழங்கும் விடயம் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தான் அனுப்பிய பிந்திய கடிதத்திலேயே ஜனாதிபதி குமாரதுங்க தனது உள்ளக் கிடக்கையை அம்பலப்படுத்தியிருக்கிறார்.

"வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பாக உங்களுக்கும் (பிரதமருக்கும்) புலிகளுக்கும் இடையில் ஓர் இணக்கம் ஏற்பட்ட பின் இணக்கம் காணப்பட்ட அந்தத் திட்டம் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படும் என்று நீங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள். உங்களாலும் புலிகளாலும் ஏற்றுக்கொள்ளப்படும் யோசனை, என்னாலும் நாட்டு மக்களாலும் அப்படியே ஏற்றுக்கொள்ளப்படும் என்று கருதிவிடாதீர்கள்!" - என்று முன்கூட்டியே தமது நிலைப்பாட்டை சூசகமாக வெளியிட்டிருக்கின்றார் ஜனாதிபதி குமாரதுங்க.

ஐந்து தசாப்த காலத்துக்கு மேல் நாட்டைச் சீரழித்து வரும் தேசியப் பிரச்சினையான இனப்பூசலுக்கு, அமைதி வழியில் தீர்வுகாண்பதற்குக் கிடைத்துள்ள இந்த இறுதி வாய்ப்பை -கடைசிச் சந்தர்ப்பத்தை - நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தைக் கோட்டை விடுவோமேயானால் நாடு போரழிவு எனும் பேரழிவுக்குள் சிக்கிவிடும் என்பது திண்ணம். அதன் விளைவு நாட்டு மக்களினால் தாங்க முடியாததாக இருக்கும் என்பதும் தெளிவு.

இந்தச் சந்தர்ப்பத்தைச் சரிவரப் பயன்படுத்தும் முக்கிய பொறுப்பு நமது நாட்டின் பிரதான கட்சிகளையே சார்ந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. அந்தவகையில், இந்த விடயத்தில் ஜனாதிபதியினதும் அவரது பொதுஜன ஐக்கிய முன்னணியினதும் செயற்பாடும் ஒத்துழைப்பும் மிகமிக அத்தியாவசியமானவையாக அமைகின்றன.

ஆனால், குறுகிய அரசியல் லாபங்களுக்காக - ஆட்சியைப் பிடிக்கவேண்டும் என்ற அற்ப ஆசைக்காக - இந்தத் தேசியப் பிரச்சினையில் குட்டையைக் குழப்பும் போக்கையே ஜனாதிபதியும் அவரது அணியினரும் கடைப்பிடிக்கப்போகின்றார்கள் என்பதற்கு கட்டியம் கூறுகின்றது ஜனாதிபதியின் தற்போதைய அறிவிப்பு.

விடுதலைப் புலிகளுடன் அமைதிப் பேச்சு நடத்தி, சமாதானத் தீர்வு ஒன்றைக் காணவும் அதுவரை வடக்கு - கிழக்குக்கு ஓர் இடைக்கால நிர்வாகத்தை அமைக்கவும் தேர்தல் விஞ்ஞாபனம் மூலம் மக்கள் ஆணை ஒன்றைப் பெற்றே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசு ஆட்சிக்கு வந்தது.

மக்களிடம் பெற்ற ஆணைப்படி அந்தத் திசையில் நகர முற்படுகின்றது ரணிலின் அரசு. ஆனால், அந்த வகையில் காணப்படக்கூடிய சமாதானத் தீர்வுக்கு தாம் இணங்குவார் என்பது சந்தேகமே என்ற சாரப்பட முன் கூட்டியே பிரகடனப்படுத்தியிருப்பதன் மூலம் மக்கள் ஆணையைத் தூக்கியெறியத் தயாராகின்றார் ஜனாதிபதி குமாரதுங்க என்றே கருதவேண்டியிருக்கிறது.

புலிகளுடன் சமாதானம் பேசி, இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பேன் என்று நாட்டு மக்களுக்கு உறுதியளித்தே 1994இல் அவரது அரசும் பதவிக்கு வந்தது. ஆனால், மக்களுக்கு அளித்த உறுதிமொழியை - மக்களின் ஆணையை - உதாசீனம் செய்து காற்றில் பறக்கவிட்டுவிட்டு 'சமாதானத்துக்கான யுத்தம்' என்ற பெயரில் நாட்டு மக்கள் மீது கொடூர யுத்தம் ஒன்றை அவர் திணித்தார். அதனால், நாட்டு மக்கள் அவரது அரசைத் தூக்கி எறிந்தனர்.

ஆனாலும், அந்த அனுபவத்திலிருந்து அவர் பாடம் படித்துக்கொண்டதாகத் தெரியவில்லை.

தான் செய்யத்தவறியதை ரணிலின் அரசு செய்யமுற்படுகின்றபோது அதற்கும் தடுக்குப் போட அவர் தயாராகின்றார்.

அவர் அமர்ந்திருக்கும் அவரது பதவிக் கதிரையின் அதிகாரம் அவரை இப்படிக் குழப்பத் தூண்டுகிறது போலும்!

அவர் அக்கதிரையில் அமர்ந்திருக்கும் வரை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பது துர்லபமே என்று புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கம் ஏற்கனவே கூறியதை நிரூபிக்க முயல்கிறார் ஜனாதிபதி. அவ்வளவே!

## 'பெற்றோமக்ஸ்' பற்றவைத்தவேளை தீ பற்றியதில் இளைஞர் படுகாயம்!

### அல்வாய் வடக்கில் வியாழனிரவு சம்பவம்

யாழ்ப்பாணம்,ஓக.16

'பெற்றோமக்ஸ்' பற்ற வைத்தவேளை மண்ணெண்ணெய் சிதறி தீப்பற்றி எரிந்ததில் ஒருவர் தலை, முகம் ஆகிய பகுதிகளில் படுகாயமடைந்தார்.

அல்வாய் வடக்கில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்தவரும், பெற்றோமக்ஸைப் பற்ற வைத்தவருமான சீவரத்தினம் கௌசீகன் (வயது 22) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இவர் அண்மையிலேயே கனடாவிலிருந்து விடுமுறையில் வந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்தவர் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (எ-15)

## ஊர்காவற்றுறை, காரைநகருக்கான குடிதண்ணீர் விநியோகம் ஆரம்பம்

ஊர்காவற்றுறை மற்றும் காரைநகர் பிரதேச செயலர் பிரிவுகளில் குடிதண்ணீர் தட்டுப்பாடான பகுதிகளில் வசிப்பவர்களுக்கு பவுஸர் மூலம் இலவச குடிதண்ணீர் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கென சமூக நலன்புரி அமைச்சினால் இவ்வாண்டு நான்கு லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஊர்காவற்றுறை மற்றும் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளின் ஏற்பாட்டில் ஊர்காவற்றுறை பிரதேச சபை பவுஸர் மூலம் குடிதண்ணீர் வழங்கும் பணிகளை ஆரம்பித்துள்ளது என்றும் கூறப்பட்டது.

அதேபோன்று, எழுவைதீவு பிரதேசத்திற்கும் படகு மூலமான இலவச குடிதண்ணீர் விநியோகம் இம்மாத ஆரம்பத்தில் இருந்தே மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் -

தினமும் 4ஆயிரம் லீற்றர் தண்ணீர் இப்பிரதேசத்துக்கு படகு மூலம் எடுத்துச்செல்லப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### உற்சவம் முடிந்து திரும்புவோருக்கு

## நல்லூர்குறுக்கு வீதிப் பகுதியில் இளைஞர் குழுவால் தொல்லை

நல்லூர் ஆலயத்தின் உற்சவம் முடிந்து நல்லூர் குறுக்கு வீதிச்சந்தி வழியாக வீடு திரும்பும் பக்தர்கள் குறிப்பாகப் பெண்கள் அப்பகுதியில் நிற்கும் இளைஞர் குழு ஒன்றால் தொல்லைகளுக்கு உள்ளாக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

திருவிழா முடிந்த பின்னர் வீடு திரும்பும் பெண்களை இந்த இளைஞர்கள் கிண்டல் செய்வதாகவும் -

சேஷ்டைகள் புரிய முற்படுவதாகவும் - பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த இளைஞர் குழுவை தட்டிக்கேட்க முற்படுவோர் கடும் அச்சுறுத்தலுக்கு உள்ளாவதாகவும் கூறப்படுகிறது. இத்தகைய சம்பவங்களைத் தடுத்துநிறுத்த சமூக நலனில் அக்கறை கொண்டோர் முன்வரவேண்டுமெனப் பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். (ஒ-86)

## கந்தரோடைக் குளத்தை புனரமைக்க கோரிக்கை

வலி.வடக்கு,ஓக.16

கந்தரோடைக்குளம் கடந்த பல வருடங்களாக எந்தவகையான பராமரிப்புக்கும் உட்படுத்தப்படாதுள்ளது. இக்குளத்தைப் புனரமைக்கும்படி விவசாயிகள் கோரியுள்ளனர்.

கந்தரோடைக் குளத்தைச் சூழவுள்ள நூற்றுக்கு மேற்பட்ட ஏக்கர் வயல்களில் நெல் உட்பட மற்றும் சிறுதானியங்கள், மரக்கறிவகைகள் உற்பத்தி செய்வதில் விவசாயிகள் ஈடுபட்டு வந்தனர்.

இந்த விவசாயிகள் கந்தரோடைக் குளத்தில் இருந்து நீரைப் பெற்று விவசாயத்துக்குப் பயன்படுத்தி வந்தனர். குடாநாட்டில் தற்போது நிலவும் அதிக வெப்பம் காரணமாக இக்குளத்து நீர் வற்றியுள்ளது.

இதனால் இப்பகுதியில் பயிர்ச்செய்கையில் ஈடுபடுபவர்கள் நீர் இன்மையால் தூர இடங்களில் உள்ள கிணறுகளில் இருந்து நீர் பாய்ச்சும் அவல நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இக்குளத்தின் அணைக்கட்டுக்களை மீளப்புனரமைத்து குளத்தை ஆழமாக்கி மழைநீரைத் தேங்கச் செய்வதன்மூலம் விவசாய முயற்சிக்கு வேண்டிய நீரைப் பெறக்கூடியதாக இருப்பதுடன், அயற்பகுதிகளில் உள்ள கிணறுகளில் நல்ல நீரின் தன்மையைப் பேணமுடியும் எனவும் விவசாயிகள் கூறுகின்றனர். (ஒ-86)

## கந்தரோடையில் மருந்துச்சாலை நிறுவுமாறு மகஜர் மூலம் கோரிக்கை

சண்டிலிப்பாய்,ஓக.16

கந்தரோடையில் அரசினர் மத்திய மருந்துச்சாலை ஒன்றை திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்று சுன்னாகம் லயன்ஸ் கழகம் யாழ்.சுகாதார திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கந்தரோடை, மாகியப்பிட்டி, இக்குறானை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களின் நலன் கருதி இந்த மருந்துச் சாலையை ஆரம்பிக்கும்படியும் -

இந்த மருந்துச்சாலையை நிறுவுவதற்கு ஐந்து பரப்புக் காணி ஒன்றை கொள்வனவு செய்து வழங்கமுடியும் என்றும் -

கந்தரோடை கிராம அலுவலர் கே.திருநாவுக்கரசு யாழ் சுகாதாரத் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்துள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார். (எ-135)

### நாளை

ஆடி 32
ஞாயிற்றுக்கிழமை
(17.08.2003)
திதி : பஞ்சமி
பிற்பகல் 1.34 வரை
நட்சத்திரம்: ரேவதி
பிற்பகல் 2.04 வரை
சுபநேரம் : 9.05 - 10.35
ராகுகாலம்: 4.35 - 06.05
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

செய் கருமம் அனைத்தையும் இதயம் நினைத்துப் பார்ப்பதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடுகளில் கள், சாராயம் விற்பது எழுவைதீவில் முற்றாகத் தடை

ஊர்காவற்றுறை,ஓக.16

எழுவைதீவு பிரதேசத்தில் வீடுகளில் பனங் கள் மற்றும் சாராயம் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளதுடன், அதனைக் கண்காணிக்கும் பொருட்டு ஐந்து பேரடங்கிய குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சட்டவிரோத நடவடிக்கைகளினால் வீடுகளில் சென்று மது அருந்துபவர்கள் போதை தலைக்கேறியவுடன் அடிக்கடி கோஷ்டி மோதல்கள் மற்றும் தகராறுகள், தீவைப்பு போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் இது பின்னர் இப்பிரதேசத்தில் பெரும் சமூக மோதலுக்கு வழி வகுத்துவிடும் என்பதையும் கருத்திற்கொண்டே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

இப்பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற சமூகங்களுக்கிடையிலான மோதல் குறித்தும் உள்ளூர்ப் பிரச்சினைகள் குறித்தும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடலின்போது மேற்படி முடிவு எடுக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ் செல்வநாயகம், பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள், கடற்றொழில் கூட்டுறவுச்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் உள்ளூர் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்ட மேற்படி கலந்துரையாடலில் இப்பிரதேசத்தில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்திப் பணிகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டதாகக் கூறப்பட்டது. (எ-16)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயம்!

### வதிரியில் வியாழனன்று சம்பவம்

யாழ்ப்பாணம்,ஓக.16

வதிரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

திருநெல்வேலியைச் சேர்ந்த சண்முகதாஸ் வாகீசன் (வயது-24) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

மோட்டார் சைக்கிளுக்குக் குறுக்காக நாய் ஓடியமையே விபத்து இடம்பெற்றமைக்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்தவர் மந்திகை வைத்தியசலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை - துன்னாலைப் பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் எதிரும்புதிருமாகச் சென்று மோதுண்டு விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிள்களைச் செலுத்திச் சென்ற இருவரும் படுகாயமடைந்தனர். இருவரும் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எ-15)

### பதிவிலக்கம் கிடைப்பதற்கு

## 'அக்ரஹாரா' விண்ணப்பங்களை ஆங்கிலத்தில் அனுப்பவேண்டும்

### காப்புறுதி அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.16

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அரச ஊழியருக்கு நடைமுறைப்படுத்தி வரும் அக்ரஹாரா திட்டத்துக்கான விண்ணப்பங்களை ஆங்கிலத்தில் பூர்த்திசெய்தாலேயே அதற்கான பதிவிலக்கங்கள் வழங்கப்படும்.

- இவ்வாறு இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ். பிராந்திய அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அக்ரஹாரா திட்டத்திற்கான பதிவிலக்கங்கள் விண்ணப்பித்து நீண்டகாலமாகியும் உரியவர்களுக்கு வழங்கப்படாதமை குறித்துக் கேட்டபோதே அந்த அதிகாரி இத்தகவலைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அந்த அதிகாரி மேலும் தெரிவித்ததாவது:-

அக்ரஹாரா காப்புறுதித்திட்டத்தின் கீழ் பணம் செலுத்தும் அரச ஊழியர்கள் தமது விண்ணப்பப்படிவங்களை ஆங்கிலத்திலேயே பூர்த்திசெய்து அனுப்புதல் வேண்டும்.

எனினும், பலர் அதனைத் தமிழிலேயே பூர்த்திசெய்து அனுப்பியுள்ளனர். இந்த விண்ணப்பப்படிவங்களை கொழும்பில் உள்ள தலைமையகமே கையாள்கிறது. தமிழில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை பரிசீலிப்பதில் அங்கு ஆளணிப் பற்றாக்குறை நிலவுகிறது. இதுவே பதிவிலக்கங்கள் வந்துசேர்வதற்குத் தாமதம் ஏற்படக் காரணமாகிறது.

இதுகுறித்து அறிந்த சிலர் தமது விண்ணப்பங்களை மீண்டும் ஆங்கிலத்தில் நிரப்பி அனுப்பியுள்ளார்கள். இதேபோன்று ஏனையோர்களும் செய்தல்வேண்டும்.

ஆங்கிலத்தில் பூர்த்திசெய்யப்படும் விண்ணப்பப்படிவங்களே இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தலைமைக் காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

தற்போது இந்த விடயங்கள் தொடர்பான முழுப் பணிகளையும் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தலைமைக் காரியாலயமே மேற்கொள்கிறது - என்றார் அவர். (ஒ-12)

### கொழும்புத்துறை பகுதியில்

## தும்புத் தொழிலாளர் மீது படையினர் கடும் கெடுபிடி

அரியாலை,ஓக.16

கொழும்புத்துறை கடலில் புதைக்கப்பட்டிருந்த தேங்காய் மட்டைகளை அகற்றிவரும் அப்பகுதி மக்கள் கடந்த சில நாள்களாக பெரும் அசௌகரியங்களுக்கு இலக்காகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தும்புத் தொழிலுக்காக கொழும்புத்துறைக் கடலில் புதைக்கப்பட்ட மட்டைகளை பெரும் சிரமப்பட்டு கடலில் இருந்து அகற்றி வருவோரே இவ்வாறு படையினரின் சோதனைக் கெடுபிடிகளுக்கு உள்ளாவதாகக் கூறப்பட்டது.

கடலில் இருந்து அகற்றிவரும் மட்டைகளை படையினர் துருவித் துருவி சோதனை செய்தபின்னரே கரைக்குக் கொண்டு செல்ல அனுமதிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

படையினரின் இந்த சோதனை நடவடிக்கைகளால் கடலில் இருந்து மட்டைகளை அகற்றிவரும் மக்கள் பெரும் சிரமங்களை அனுபவிக்க நேரிடுவதாகவும் - தெரியவருகிறது.(எ-17)

# உலகை மீண்டும் ஒருமுறை தன்பக்கம் ஈர்த்துள்ள இடி அமீன் இலங்கையிலும் பணியாற்றியவர்

**மனித மாமிசத்தை உண்ணுமளவிற்கு குரூரமான கொடிய சர்வாதிகாரியாக இடிஅமீன் விளங்கினார். சமீபத்தில் உலகின் கவனத்தை மீண்டும் தன்பக்கம் ஈர்த்த அவரது கடந்த காலம் பற்றிய கண்ணோட்டம் இது.**

சவூதி அரேபியத் தகவல் சேவையின் மூலம் அண்மையில் வெளியிடப்பெற்ற ஒரு தகவல் உலகின் கவனத்தை ஈர்த்தது.

1971இல் இருந்து 1979 வரையிலான 8வருட காலங்கள் ஆபிரிக்க நாடான உகண்டாவை ஆட்சி செய்த இடி அமீன், கடும் சுகவீனம் காரணமாக ஜெட்டா நகர மருத்துவமனையின் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என அச்செய்தி தெரிவித்தது. அவர் நினைவிழந்த நிலையில் உள்ளதாகவும் மேலும் அத் தகவலகள் தெரிவித்தன.

இத்தகவல் உலகில் பலரின் கவனத்தை ஈர்ப்பதற்கு விசேட காரணமுள்ளது. தனது எட்டு வருடகால ஆட்சியின்போது இடி அமீன் மனிதத் தன்மையற்ற கொடூரமான செயல்களால், அவர் அநேக மக்களின் வெறுப்புக்கும், அருவருப்பிற்கும் பாத்திரமாகியுள்ளதே இதற்கான காரணமாகும். இடி அமீன் எனப்படும் பெயரானது, அடொல்ப் ஹிட்லர், முஸோலினி போன்ற குரூரமான ஆட்சியாளரது நாமங்களைப்போன்று நாகரிகமடைந்த சமூகங்களின் அருவருப்பிற்குள்ளான ஒரு பெயராகக் கணிக்கப்படுகிறது. இடி அமீனின் எட்டு வருடகால ஆட்சியின்போது கொல்லப்பட்ட உகண்டா வாசிகளின் எண்ணிக்கை 3லட்சத்திற்கும் மேல் என அறிக்கைகள் தெரிவித்துள்ளன. கனவிலும் இடி அமீனை விரோதித்துக்கொள்ளாத அப்பாவிகள கூட அவரது ஆணையின் பேரில் கொல்லப்பட்டனர்.

இடி அமீன் தனது பிரச்சினைக்கு ஒரு புதிய முறையிலேயே தீர்வு கண்டார். அதாவது, எவராவது வினா எழுப்புவதற்கு முன்னர் அல்லது தனக்குப் பிரச்சினைக்குரியவராவதற்கு முன்னர் அந்நபரைத் தீர்த்துக்கட்டுவதே அவரது தீர்வாக இருந்தது.

உகண்டாவின் ஒரு கிராமத்தில் 1928இல் இடி அமீன் பிறந்தார். அவரது தந்தையார் ஓர் இஸ்லாமியர். இடி அமீன் பிறந்து சிலநாள்களுக்குள்ளாகவே அவரது பெற்றோர்கள் பிரிந்துவிட்டனர். முதலில் இடி அமீன் கரும்புத்தோட்டமொன்றில் தொழிலாளியாகவே பணிபுரிந்தார். அக்கரும்புத்தோட்டம் இந்தியாவிலிருந்து உகண்டாவில் குடியேறிய வர்த்தகரான மேத்தா என்பவருக்குச் சொந்தமானதாகும்.

இரண்டாவது உலகப் போரின்போது இடி அமீன் ஆபிரிக்க 'ரைபிள்' படையில் சமையல் பணியாளரின் உதவியாளராக இணைந்து கொண்டார். அவ்வாறு இணைந்த இடி அமீன் அப்போர்க்காலத்தின்போது இலங்கையிலும் சொற்ப காலங்கள் பணியாற்றியதாக ஆவணங்கள் தெரிவிக்கின்றன.

இராணுவத்தில் பணிபுரிந்த காலத்தில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் மனங்கவர்ந்த, பணிவுள்ள ஊழியனாகப் பணியாற்றிய இடி அமீன் ஆங்கிலத்தில் "குட் மோர்னிங்" என்ற சொல்லை மாத்திரமே தெரிந்து வைத்திருந்தார்.

வெள்ளையரின் மனங்கவர்ந்த, பணிவுள்ள ஊழியனாக இருந்தமையினால் இடி அமீன் அதி சீக்கிரத்திலேயே இராணுவச் சார்ஜன் ஆகினான். அவ்வாறான உயர்வுக்குப் பின்னர் தனது நெருங்கிய ஒருவரின் மனைவியோடு முறைகேடான நடத்தையில் ஈடுபட்டிருந்தபோது, ஒருமுறை கையும் களவுமாகப் பிடிபட நேரிட்டது. அவ்வேளையில், அவர் நிர்வாணமாகவே வீதிகளின் ஊடாக ஓடித்தப்பினார். இராணுவத்தில் பணிபுரிந்த காலகட்டங்களில் அவன் பாலியல் சம்பந்தமான நோய்களால் பீடிக்கப்பட்டிருந்தான்.

பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து உகண்டா விடுபடுவதற்கு ஆறுமாத காலங்களுக்கு முன்னதாக தென்மேற்குக் கென்யாவிற்கு அங்கிருந்த துர்க்கானா இனத்தவரை நிராயுதபாணிகளாக்கும் பணிக்கு இடி அமீன் தலைமையிலான ஆயுதப்படைப் பிரிவொன்று அனுப்பப்பட்டது. அவர்களை நிராயுதபாணிகளாக்குவதற்குப் பதிலாக இடி அமீன் துர்க்கானா இனத்தவர்களைக் கொன்றுகுவித்து பெரும் மனிதப் புதைகுழிக்குள் புதைத்துவிட்டார்.

அத்தகைய செயலினால் பெரும் சீற்றத்துக்குள்ளான இராணுவக் கட்டளையதிகாரி, இடி அமீனுக்கு எதிராக இராணுவ நீதிமன்றை நாடினார். அச்சந்தர்ப்பத்தில் அன்றைய உகண்டாவின் பிரதமராகவிருந்த மில்ட்ரன் ஒபோற்றேவால் இடி அமீன் காப்பாற்றப்பட்டார். இடி அமீனைப் பதவியிறக்குவது தொடர்பாக நாடாளுமன்றத்தில சமர்ப்பிக்கப்பட்ட ஆலோசனையொன்றையும் ஒபோற்றே நிராகரித்திருந்தார். அத்தகைய ஆலோசனையொன்றை சமர்ப்பிக்கக் காரணமாக அமைந்தது, இடி அமீனால் மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத யானைத்தந்த விற்பனையாகும்.

பின்னர் ஒபோற்றே தன்னை நாட்டின் ஜனாதிபதியாகப் பிரகடனப்படுத்திக் கொண்டார். இவ்வாறு ஜனாதிபதியான ஒபோற்றே, இடி அமீனை உகண்டாவின் இராணுவத் தளபதியாக நியமித்தார். அதனையடுத்து ஒபோற்றே - இடி அமீன் இடையிலான நல்லுறவு வலுப்பெற்றது.

ஆயினும், சொற்பகாலத்தின் பின்னர் இராணுவத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியைத் தவறாகப் பயன்படுத்தியது தொடர்பாக இருவரிடையேயும் விரிசல் ஆரம்பித்து காரசாரமான வாக்குவாதம் இடம்பெற்றது. பாதுகாப்புக்கான நிதியில் உகண்டா நாணயத்தில் 400லட்சம் சிலிம் காணாமற்போன சம்பவத்திற்கு விளக்கமளிக்குமாறு இடி அமீன் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் ஒனாவா ஆகியோருக்கு ஆணைபிறப்பித்த ஜனாதிபதி ஒபோற்றே சிங்கப்பூரில் நடைபெறவிருந்த ஐக்கிய இராச்சிய மண்டலத தலைவர்களுக்கான மாநாட்டில் கலந்துகொள்ள சிங்கப்பூர் புறப்பட்டுச் சென்றார்.

சிங்கப்பூரில் இருந்து ஒபோற்றே நாடு திரும்பிக் கொண்டிருந்தவேளையில், இடி அமீன் இராணுவப் புரட்சியொன்றின் மூலம் உகண்டாவின் அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்டார். அதிகார பலத்தைக் கைப்பற்றிக் கொண்ட இடி அமீன் தனது பதவி நிலையை ஜெனரல் ஒருவரின் நிலைக்கு உயர்த்திக் கொண்டார். நாடாளுமன்ற முறைமையை இல்லாதொழித்தார். சகல அரசியல்கட்சிகள மற்றும் தொழிற்சங்கம் அனைத்திற்கும் தடைவிதித்தார்.

ஒபோற்றேயின் ஆதரவாளர்கள் அனைவரையும் கைதுசெய்யும்படி ஆணையிட்டார். அத்தோடு, தன்வசமுள்ள இராணுவத்தின் தொகையை இரு மடங்குகளாக்கிக்கொண்டார்.

சர்வாதிகாரி இடி அமீனின் உகண்டா இராச்சியத்தை அங்கீகரித்த உலகின் முதலாவது நாடு பிரிட்டனாகும்.

நாட்டின் அதிகார பலத்தைக் கைப்பற்றியதும், இடி அமீன் தனது எதிரிகளை அழிக்கும் பணியை மேற்கொணடார். அவர் மில்ற்றன் ஒபோற்றே பிறந்த பிரதேச வாசிகளான அச்சோலி மற்றும் டென்சி இனத்தவர்கள் சகலரையும் தனது எதிரிகளாகவே கருதினார். அதன்படி இராணுவ சேவையில் ஈடுபட்டிருந்த அச்சோலி மற்றும் டென்சி இனத்தவர்களைக் கூட கொன்று குவித்தார். உகண்டாவிலிருக்கும் ஆசிய நாட்டவர்கள் அனைவரும 90 நாள்களுக்கிடையில் நாட்டை விட்டு வெளியேறிவிடவேண்டுமென்று கட்டளையிட்ட இடி அமீன், கடவுள் தனது கனவில் தோன்றி அவ்வாறு கட்டளையிடும் வண்ணம் தனக்கு உபதேசித்தார் எனப் பகிரங்கமாக அறிவித்தார்.

இவரது இத்தகைய தீர்மானத்தால் உகண்டாவின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. ஆசிய நாட்டவரின் உடைமைகளாக இருந்த அநேக முதல் நிலையிலான வர்த்தகங்கள் தாமாகவே அற்றுப்போயின. வெளிநாட்டுச் செலாவணி விகிதாசாரம் சீக்கிரத்திலேயே கீழிறங்கியது. ஆசிய நாட்டு ஆசிரியர்கள் சேவை செய்த அநேக பாடசாலைகள் மூடப்பட்டன.

ஆசிய நாட்டவர்களை நாடு கடத்திய பின்னரும், திருப்தியடையாத இடிஅமீன், அதுவரையிலுமிருந்த இஸ்ரேலுடனான நல்லிணக்கத்தினையும் சிதைத்துக் கொண்டார். இடி அமீனின் அத்தகைய செயலானது நாட்டின் வீழ்ச்சியடைந்த பொருளாதார நிலையை சீர்செய்வதற்காக அரபு உலகத்தின் ஆதரவைப்பெறும் முனைப்பேயாகும். இதன் எதிரொலியாக, மூன்று தினங்களுக்குள் உகண்டாவிலுள்ள இஸ்ரேலுக்கான பிரதிநிதிகள் நாட்டை விட்டு வெளியேறி விடவேண்டுமென ஆணை பிறப்பித்தார். அவ்வாண்டில (1972) மேற்கு ஜேர்மனியின் மியுனிச் நகரில் இடம்பெற்ற ஒலிம்பிக் நிகழ்வுகளில் கலந்துகொண்ட இஸ்ரேலிய விளையாட்டு வீரர்கள் பலஸ்தீனிய கெரில்லாக்களால் கொல்லப்பட்ட நிகழவின்போது இடி அமின் ஒரு சாதாரணமான நிகழ்வே என்று கருத்து வெளியிடடார். இடி அமீனின் ஆணையின் பேரில கொலை செய்யப்பட்ட முதலாவது நபர் இராணுவத்தின் முக்கிய அதிகாரியான "பிரிகேடியர்" ஹுசைன் ஆவார். இடி அமீனின் ஆணைப்படி இராணுவத்தால் கைது செய்யப்பட்ட அவர் சிறைச்சாலையொன்றுக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவர் ரைபிள் துப்பாக்கிகள் மூலம் தொடர்ந்து சுடப்பட்டார். இந்த உடலை பகுதி பகுதிகளாக வெட்டுமபடி இடி அமீன் கட்டளையிட்டார். அவ்விதம் வேறாக்கப்பட்ட ஹுசைனின் சிரசு இடி அமீனின் மேசை மீது வைக்கப்பட்டது. பின்னர் அது அமீனினுடைய குளிர்சாதனப் பெட்டியினுள பத்திரப்படுத்தப்பட்டது.

அமீனின் ஆணையின் பேரில் ஒருமுறை 32 சிரேஸ்ட இராணுவ அதிகாரிகள் கொலை செய்யப்பட்டனர். அக்கொலைச்சம்பவம் மிகவும் துஷ்டத்தனமானதாகவும் மிலேச்சத்தனமானதாகவும் மேற்கொள்ளப்பட்டது. முதலில் இராணுவ அதிகாரிகள் அறையொன்றினுள் இடப்பட்டனர். பின்னர் அவ்வறையினுள் வெடிபொருள நிரப்பி வெடிக்கவைக்கப்பட்டது. இதனால், இராணுவ அதிகாரிகளின் உடலகள் சிதறிச் சின்னாபின்னமாயின.

இடி அமீனின் உன்மத்தம் கொண்ட செயற்பாடுகள் எல்லையற்றவையாக அமைந்தன. யாராவது ஒருவரின் கொலை செய்யப்பட்டதன் பின்னர், அந்நபரின் பிரேதத்தை சித்திரவதைக்குள்ளாக்குவதும் இடி அமீனின் வழக்கமாகியிருந்தது. இராணுவக் கட்டளை அதிகாரியாகவிருந்த கேணல் மசேயுரா அராம் கொலை செய்யப்பட்ட பின்னர் அப்பிரேதத்தின மர்மஸ்தானத்தை வெட்டி, அதை அதன வாயினுள் வைக்கும்படி அமீன் ஆணைபிறப்பித்தான்.

இடி அமீனின் ஆணைக்கிணங்க அரசபடைகள் உகண்டாவின் சிரேஷ்ட நீதியரசர் பெனடிக்டோ இவானுகாவின அலுவலகத்திற்குள் நுழைந்து துப்பாக்கி முனையில் அவரை இடி அமீனின்முன் நிறுத்தினர். சிரேஷ்ட நீதியரசரை நோக்கி ஏளனச் சிரிப்பொன்றைப் பரவவிட்ட இடி அமீன், அவர் உயிருடன் இருக்கும் போதே அவரது மூக்கு, காது, மற்றும் மர்மஸ்தானம் ஆகியவற்றை வெட்டியெறியுமாறு ஆணையிட்டார். அந்தச் சித்திரவதையின் போது சிரேஷ்ட நீதியரசர் இரு மணி நேரங்களுக்கு மேலாக வேதனை தாளாது கத்தினார். அவர் இறந்ததன் பின்னர் அவரது உடல் பெற்றோல் ஊற்றி எரிக்கப்பட்டது.

மனித மாமிசத்தில் விசேட விருப்புக் கொண்ட ஒருவராக இடி அமீனின் பெயர் சரித்திரத்தில் பொறிக்கப்பட்டது. தான் சயர் நாட்டிற்கு விஜயம் செய்தவேளை குரங்கு மாமிசம் உட்கொண்ட விதம்பற்றி ஒருமுறை இடி அமீன் தனது அதிகாரிகளுக்கு விளககினார். அதிகாரிகள் அதிசயத்துடன் அவரை நோக்கினர். தான் குரங்கின் மாமிசம் மட்டுமன்றி மனித மாமிசத்தையும் ருசித்துள்ளதாக அவ்வேளையில் இடி அமீன் அதிகாரிகளுக்குக் கூறினார். யுத்தத்தில் ஈடுபட்டுள்ள வேளை உண்பதற்கு ஒன்றுமேயில்லாத விடத்து இறந்துபோன சக சிப்பாயின மாமிசத்தை உண்பது தவறாகாது என்றும் இடி அமீன் அவ்வதிகாரிகளுககுக் கூறியிருந்தான்.

அன்று அவ்விடத்திலிருந்த அதிகாரிகளில் ஒருவரைத் தவிர, ஏனைய சகல அதிகாரிகளும் பின்னர் ஒரு சந்தர்ப்பத்தின்போது அமீனின் ஆணைககிணங்க கொல்லப்பட்டதோடு, அமீன அவர்களது மாமிசத்தைப் பச்சையாகவே உண்டான் எனத் தெரிய வந்துள்ளது. மனித மாமிசம் புலியின மாமிசத்தை விடவும் உப்புத்தன்மையானது என்று அமீன் விவரித்திருந்தார்.

இடிஅமீன் கொடிய காமுகனாகவும் இருந்துள்ளார். ஜனாதிபதியாக இருந்தபோது தான் விரும்பிய



பெண்களைத் தன்னகத்தே வரவழைத்துக்கொண்டார். அவன் மூலமாக நூற்றுக்கணக்கான பிள்ளைகள் பிறந்துள்ளனர். இதனால், தனது பெயரில் மைந்த ஒரு புதிய இனத்தையே உருவாக்கமுடியுமென அவன் ஒரு முறை நம்பிக்கை தெரிவித்தார்.

இடி அமீனுக்கு நான்கு சட்டபூர்வ மனைவியர் இருந்தனர். முதல் மனைவி சாரா அமீன் - சாரா விவாகம் 1958 ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. கே என்பது அவரது இரண்டாவது மனைவியின் பெயராகும். இவர் கிறிஸ்தவ மத போதகர் ஒருவரின் மகளாவார். மூன்றாவது மனைவியாக நோராவும், நான்காவது மனைவியாக மெதினாவும் இருந்தனர். இந் நான்கு மனைவியரது பிள்ளைகளும் இடி அமீனின் ஜனாதிபதிக்கான வாஸஸ தலத்திலேயே வசித்தனர். 1974ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26ஆம் திகதியன்று அவன் தனது முதல் மூன்று மனைவியரையும் திடீரென விவாகரத்துச் செய்தார்.

1974ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத தில் செக்கரேரே பல்கலைக்கழக பட்டமளிப்பு நிகழ்வுக்கான பிரதம அதிதியாக கல்வியறிவற்ற இடி அமீன அழைக்கப்பட்டார். அச்சந்தர்ப்பத்தின போது அங்கிருந்த உகண்டாவின் வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட பெண் அதிகாரி எலிசபெத் பகாயாவின் மீதே அவனது கண்கள் நிலைத்தன. அப்பெண் அதிகாரி மிக அழகாகவும் இளமையாகவும் காணப்பட்டார். இடிஅமீன் அவளை மேடைக்கு வருமாறு அழைத்தார். தனது வெளிவிவகார அமைச்சர் மிகாயில் ஒன் கொகாவை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கியுள்ளதாகவும், அப்பதவிக்கு எலிசபெத் பகாயாவை நியமித்துள்ளதாகவும் மேடையிலேயே இடிஅமீன் அறிவித்தான்.

1979 இல் இடி அமீன் அண்டைய நாடான தான்சானியாவைத் தாக்கினார். பதவி நீக்கம் செய்யப்பெற்ற முன்னாள உகண்டாவின் ஜனாதிபதியான மில்ற்ரன் ஒபோற்றேயும் அச்சமயம், தான்சானியாவில் தான் இருந்தார். அமீனின் இத் தான்சானியா மீதான தாக்குதலே அவனின் வீழ்ச்சிக்கு ஆரம்பமாக அமைந்தது. தான் சானியாவின் "மிக்" குண்டு வீச்சு விமானங்கள கம்பாலா மற்றும் ஜின்ஜா நகரங்கள் மீது குண்டுமழை பொழிந்தன. என்டபே நகரம் அமீனுக்கு எதிரான புரட்சிவாதிகளின் கைகளுக்கு மாறியது.

1979 ஏப்ரல் 11ஆம் திகதி கம்பாலவும் இடி அமீன் எதிர்ப்புச்சக்திகளின் வசமாகியது. அத்தோடு, 8வருட காலங்களாக உகண்டாவை ஆண்டு ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களைக் கொன்றொழித்த இடி அமீனின் சர்வாதிகார ஆட்சி வீழ்ந்தது. அமீன் ஆட்சிக் கவிழ்ப்பின் மறுகணமே, பல்லாயிரக்கணக்கான உகண்டாவாசிகள், மகிழ்ச்சி ஆரவாரக் கோஷங்களுடன் வீதிகளில் நிரம்பிவழிந்தனர். அமீனின் கொலைப்பட்டாளம் வீதிகளிலிருந்த வாகனங்களில் ஏறித் தப்பியோடினர். பல சிப்பாய்கள் மக்களால் கொல்லப்பட்டனர்.

கோபாவேசமுற்ற மக்களின் கரங்களில் சிக்கிக் கொள்வோம் என்ற பீதியினால் இடி அமீன் கம்பாலா நகரை விட்டுத் தப்பியோடினார். கம்பாலாவிலிருந்து 140 மைல்களுக்கப்பால் அமைந்துள்ள சொரோனி நகரத்தினூடாக மிக இரகசியமாக சவூதி அரேபியா சென்றடைந்தார். அன்றைய நிலையில் வெளிநாட்டு வங்கிகளில் அவரது கணக்கில் மிகப்பெரும் தொகையிலான பணம் வைப்பிலிடப்பட்டிருந்தது. அந்நிதிக்குவியலின் பயனாக அமீன், சவூதி அரேபியாவில் அரச வாழ்க்கையை ஆரம்பித்தார்.

1989 ஜனவரி 3ஆம் திகதி இடி அமீன், சாய்ரே நாட்டு போலிக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி சாய்ரே நாட்டுக்குள் நுழைய முயன்றார். அங்கு சாய்ரே அதிகாரிகள் அவரிடம் விசாரணைகளை மேற்கொண்டனர். தனக்கு கின்ஷாசா நகரூடாகத் திரும்பவும் உகண்டா செல்லும் அவசியமிருப்பதாக இடி அமீன் கூறினார். இருப்பினும், செனகல் நாட்டிலுள்ள சவூதி அதிகாரிகள் சவூதி செல்ல அவருக்கு அனுமதி மறுத்தனர். இதன் பிரகாரம் திரும்பவும் அவர் சாய்ரே நாட்டிற்கு அனுப்பப்பட்டார்.

இதற்கிடையே, உகண்டா அரசு மனிதப்படுகொலைகள் சம்பந்தப்பட்ட விசாரணைகளை மேற்கொள்ளுமுகமாக இடி அமீனைத் திரும்பவும் உகண்டாவிடம் ஒப்படைக்குமாறு சாய்ரே அரசைக் கோரியது. ஆயினும்,

**இ.சரவணன்**

சாய்ரே ஜனாதிபதியான மொபூட்டு செசெசெகோ, அக்கோரிக்கையை நிராகரித்தார்.

அம்மாத இறுதியில் இடி அமீன் சவூதி அரேபியாவுக்குள் மீண்டும் நுழைவதற்கான அனுமதியை சவூதியின் அரச அதிகாரிகள் வழங்கினர். அவ்வனுமதியும் சில ஆபிரிக்கத் தலைவர்களின் கோரிக்கைகளுக்கு இணங்கியே வழங்கப்பட்டது. ஆபிரிக்க அரசியல் நடவடிக்கைகளில் தலையிடமாட்டேன் என இடி அமீன் வாக்குறுதியளித்த பின்னரே இடி அமீனுக்கு அரசியல் புகலிடம் வழங்க சவூதி அரேபியாவின் அரசர் காலித் சம்மதம் தெரிவித்தார். அன்றிலிருந்து சவூதியில் இடி அமீன் தங்கியுள்ளார். ✦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு கட்டடம் அமைப்பதற்கு காணி

## பிரான்பற்று சங்கம் வழங்கியது

சண்டிலிப்பாய்,ஓக.16

பிரான்பற்று மகளிர் கிராம அபிவிருத்தி சங்கம், பிரான்பற்று கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றை நிறுவுவதற்காக தனது இரண்டு பரப்புக் காணியை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

உத்தியோகபூர்வமாக இதற்கான காணி உறுதி எழுதப்பட்டு யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளரிடம் இச்சங்கத்தினரால் கடந்த வாரம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கான நிதி வசதி இருப்பதாகவும் -

யாராவது அதற்கான காணியை அன்பளிப்பாக வழங்கும் பட்சத்தில் அதனை அங்கு நிறுவமுடியும் என்றும் - மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி அண்மையில் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

(எ-135)

## பயிற்சி மருத்துவர் நியமனம்

யாழ்ப்பாணம்,ஓக.16

யாழ். ஆஸ்பத்திரிக்கு தென்பகுதியிலிருந்து உள்ளகப் பயிற்சி மருத்துவர்கள் 5பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கடந்த புதன் கிழமைமுதல் கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டனர்.

(ஒ-139)



தேசிய காக்கை வலிப்பு நோய் தினத்தை முன்னிட்டு, ஆனைக்கோட்டை பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தில் மாணவர்களிடையே நடத்தப்பட்ட வினாடி வினாப்போட்டியில் சித்திபெற்ற மாணவர் ஒருவருக்கு ஆனைக்கோட்டை குடும்ப சுகாதாரசேவை அலுவலர் திருமதி எஸ்.பரமேஸ்வரி பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். பொது சுகாதார பரிசோதகர் டி.ராஜாரவிதர்மா, வித்தியாலய அதிபர் திருமதி சூ.ஜெயவீரசிங்கம் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (எ-135)

## அல்லைப்பிட்டியில் 7 பேருக்கு மலேரியா

சண்டிலிப்பாய்,ஓக.16

அல்லைப்பிட்டிப் பகுதியில் ஏழு பேருக்கு மலேரியா நோய் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பரிசோதனை மூலம் இது கண்டறியப்பட்டதை அடுத்து சுகாதார அதிகாரிகள் அப்பகுதியில் தீவிர தடுப்பு நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மையில் பூநகரி, வலைப்பாடு ஆகிய இடங்களில் இருந்து அல்லைப்பிட்டிப் பகுதியில் மீளக்குடியமர்ந்தவர்களே இவ்வாறு மலேரியா நோயின் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

இவர்கள் வசிக்கும் இடங்களில் 'டெல்ரா மித்திரின்' எனப்படும் நுளம்பு கொல்லி மருந்து விசிறப்பட்டுள்ளதுடன், சுற்றாடல்களில் வசிப்பவர்களுக்கு யாழ். சுகாதார திணைக்கள மலேரியா நோய்தடுப்பு பிரிவினரால் இரத்தப் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நுளம்பு வலைகளும் வழங்கப்படவுள்ளன. (எ-135)

## மருந்து வகைகள் விநியோகம்

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினா வைத்தியசாலைகள், அரசினர் மத்திய மருந்தகங்கள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு அலுவலகங்கள் ஆகியவற்றுக்கு இவ்வருட மூன்றாம் காந்தாயத்திற்கான (காலாண்டுக்கான) மருந்து வகைகள் யாழ். சுகாதார திணைக்களத்தினால் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

யாழ். சுகாதார திணைக்களத்தின் மாவட்ட மருந்துக் களஞ்சியப் பிரிவினர் திணைக்கள லொறி மூலம் இந்த மருந்துகளை நேரடியாக கொண்டு சென்று விநியோகம் செய்து வருகின்றனர்.

இதன் பிரகாரம் வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்தியசாலை, வட்டுக்கோட்டை அரசினர் மத்திய மருந்தகம், தொல்புரம் அரசினர் மத்திய மருந்தகம், பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலை, சங்கானை சுற்றயல்கூறு அரசினர் வைத்தியசாலை ஆகியவற்றுக்கு இவ்வாரம் மருந்து வகைகள் விநியோகம் செய்யப்படவுள்ளது. (எ135)



சங்கானை மக்கள் வங்கிக் கிளையில் இடம்பெற்ற சுயதொழில் முயற்சிக் கடன் வழங்கும் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்ட ஜீ.ரீ.இசற்றின் ஆலோசகர் பியனேசா மங்களவிளக்கு ஏற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் நிறுவன ஆலோசகர் பிராங்முல்லர், கிறிஸ்ரீனா சோல்பரிக் ஆகியோரும் வங்கியின் முகாமையாளர் பொ.அச்சுதம்பிள்ளையும், வர்த்தகர் கா.பரமானந்தமும் காணப்படுகின்றனர். (எ-29)

# பாதீனியத்தைக் கட்டுப்படுத்த புதிய களை கொல்லி மருந்து

யாழ்ப்பாணம்,ஓக.16

விவசாயத்திற்கும் கால்நடைகளுக்கும் தீங்கு விளைவிக்கும் தாவரமான பாதீனியத்தைக் கட்டுப்படுத்துவதற்கு விவசாய திணைக்களம் புதிய ரக களை நாசினி ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

கீரிமலை கமநல கேந்திர நிலையத்துக்கு "க்ளைபோசற்" (Clyphosate) எனப்படும் இந்த களைநாசினி கிடைத்துள்ளதை அடுத்து இப்பகுதியில் பாதீனிய தாவரத்தை அழிப்பதற்கு இது பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

மல்லாகம் மத்தி கிராம அலுவலர் பிரிவிலும், அளவெட்டி கிழக்கு கிராம அலுவலர் பிரிவிலும் பாதீனியம் அதிகம் வளர்ந்துள்ள இடங்களில் இக்களைநாசினி அண்மையில் விசிறப்பட்டது. அதன் பின்னர் பாதீனியத்தின் வளர்ச்சி பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தொட்டிலடியில் இயங்கும் கீரிமலை கமநலகேந்திர நிலையத்தின் விவசாய போதனாசிரியர் தெரிவித்தார்.

இந்தக் களைகொல்லி மருந்தை பாதீனியத்தின் ஆரம்ப வளர்ச்சிக் காலத்தில் தெளித்தால் அதனை முற்றாக அழித்து விட முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

பாதீனியம் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்குகள் பாடசாலை ரீதியாகவும், விவசாய சம்மேளனங்கள் மூலமாகவும் இப்பிரிவில் நடத்தப்பட்டு வருகின்றன.

(ம-135)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

—— கமத்தொழில் கால்நடை அமைச்சின் ——

# ஜீப் ஒதுக்கீட்டில் வடக்கு - கிழக்கு தமிழ் மாவட்டங்கள் புறக்கணிப்பா?

தெல்லிப்பழை,ஓக.16

கமத்தொழில் கால்நடைகள் அபிவிருத்தி அமைச்சினால் மாவட்ட அலுவலகங்களுக்கு என வழங்கப்பட்ட ஜீப் வண்டிகளின் ஒதுக்கீட்டில் வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ் மாவட்டங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கால்நடை வைத்திய அதிகாரிகள், விவசாய மேற்பார்வை உத்தியோகத்தர்கள் ஆகியோரின் பாவனைக்கென இந்தியக் கடனுதவியின் கீழ் வாகனங்களை வழங்குவதற்கான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் கீழ் கமத்தொழில் கால்நடைகள் அபிவிருத்தி அமைச்சுக்கு 101 ஜீப் வண்டிகள் கிடைத்திருந்தன.

இவற்றை ஒதுக்கீடு செய்வதில் வடக்கு - கிழக்கு தமிழ் மாவட்டங்கள புறக்கணிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. இந்த மாவட்டங்களுக்கு 17ஜீப்கள் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளன.

வடக்கு-கிழக்கு மாவட்டங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில இந்த ஜீப்களை பகிர்ந்தளிக்குமாறு வடக்கு-கிழக்கு மாகாண கமத்தொழில் கால்நடை அபிவிருத்தி அமைச்சிற்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இந்த முன்னுரிமைப் பட்டியலைத தயாரித்த தமிழ் அதிகாரியொருவர் அதில் யாழ். மாவட்டத்தை இறுதியாகக் குறிப்பிட்டு சிபாரிசு செய்திருந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. அதுடன் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு தலா ஒரு ஜீப் வண்டியையே ஒதுக்கீடுசெய்யவும் அவர் சிபாரிசு செய்துள்ளார்.

போரால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட இந்த மாவட்டங்களின் அபிவிருத்திக்கு உதவுவதில் அதிகாரிகள ஏனோதானோப் போக்கில் செயற்படுவது குறித்து பொது அமைப்புக்கள் விசனம் தெரிவிக்கின்றன.

இந்த மாவட்டங்களுக்கு தலா ஒரு ஜீப வண்டியே ஒதுக்கப்பட்ட போதும் கிழக்கு மாகாண சிங்கள குடியேற்றப் பகுதி மாவட்டம் ஒன்றுக்கு 4 ஜீப் வண்டிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்துக்கு ஒரு ஜீப் வண்டியே ஒதுக்கப்பட்டபோதும் இங்குள்ள அதிகாரிகளின் தீவிர முயற்சி காரணமாக அவற்றின் எண்ணிக்கை இரண்டாக உயர்த்தப்பட்டுள்ளது. (ம-150)


## தேவை

பதவி - கணனி இயக்குநர்

தகைமை - ★ கணனி தொடர்பான பூரண அறிவு
★ க.பொ.த. (உ/த) சித்தி
★ ஆங்கிலத்தில் சிறப்புத் தேர்ச்சி

விண்ணப்ப முடிவு திகதி: 21-08-2003

முகவரி: *மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு,*
*அறை இலக்கம் -30,*
*யாழ். போதனா வைத்தியசாலை.*

T.P.021 - 222 5657 (சி-29512) (21-15-19)



## இரண்டு வீடுகள் விற்பனைக்கு

யாழ்ப்பாணம், புகையிரத நிலையத்துக்கு அருகில் 3பரப்பு 7குழிகள் கொண்ட காணியில் இரண்டு வீடுகள் உடனடி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

S. தனராஜா
48/3, முதலாம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(26-21-15-19) (21437)


ஓம்விராட் விஸ்வப் பிரம்மனே நம

## நீங்கா நினைவில் 33ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில் 26 - 06 - 1923



விண்ணில் 15 - 07 - 2003

### திருமதி வெற்றிவேலு மகாலட்சுமி

வாஞ்சை நிறைந்தவளே!
வதையுண்டு போன தாயே!
வாடித் தவிக்கின்றோம்
விழியிரண்டும் நீர் சொரிந்து!
தந்தையை இழந்த போதும்
தளர் வெதனையும் காட்டிடாது
தாலியிலே நாம் உயர
மெழுகுவர்த்தியானீர்கள்.
ஆயிரம் உறவுகளிலிருந்தும்
ஆசையுடம் "அம்மா" என்றழைக்க
அகிலத்தில் யார் வருவார்
மாண்டுதான் போனீர் ஏனோ?

அன்னாரின் இல்லத்தில் இன்று (16-08-2003) சனிக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*முகவரி:*
நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோவிலடி.
கோண்டாவில்.

*நிரந்தர முகவரி:*
குரும்பசிட்டி.
தெல்லிப்பழை.

துயருறும்:
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(26-21-19-15)

சிதைந்து உருக்குலைந்து போன

# கிளிநொச்சி மத்திய கல்லூரிக் கட்டடம் போர்க்கால நினைவுச் சின்னமாக்கப்படும்

## ஏ-9 வீதியிலும் போர் நினைவுச் சின்னங்கள் அமைக்கத் திட்டம்

கிளிநொச்சி,ஓக.16

வன்னியில் இடம்பெற்ற போரால் மிக மோசமாகச் சிதைவடைந்த கிளிநொச்சி மத்திய கல்லூரிக் கட்டடம் போர்க்கால நினைவுச் சின்னமாகப் பாதுகாக்கப்பட உள்ளது. அத்துடன், தமிழீழ விடுதலைப் போராட்ட நிகழ்வுகள், சம்பவங்கள், சாதனைகள் என்பவற்றை நினைவூட்டத்தக்க போராட்ட நினைவுச் சின்னங்கள் ஏ-9 வீதியோரங்களில் நிறுவப்படவுள்ளன.

அரும்பொருள் பாதுகாப்பு நடுவகத்தைச் சேர்ந்த ரமேசப்பா இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு எங்கும் போராட்ட நினைவுச் சின்னங்களை நிறுவும் ஒரு திட்டத்தின் ஆரம்பமாக முதலில் ஏ-9 வீதியோரங்களில் அவை நிறுவப்படவுள்ளன.

வரலாற்றுச் சிறப்பு மிக்க குடாரப்பு தரையிறக்கம் மூலம் ஏ-9 வீதியில் படையினரின் நிலைகளை தாக்கி அழித்து விடுதலைப் புலிகள் ஊடுருவிய பகுதியில் அவர்களால் சேதப்படுத்தப்பட்ட கவசவாகனம் உள்ள இடத்தில் ஒரு போர்க்கால நினைவுச் சின்னம் அமைக்கப்படவுள்ளது.

ஆனையிறவு முகாம் மீது 1991இல மேற்கொண்ட தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் பயன்படுத்திய கவசவாகனம் கிடக்கும் பகுதியிலும் ஆனையிறவு முகாம் மையத்திலும் போர் நினைவுச் சின்னங்களை அமைபபதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

நினைவுச் சின்னங்கள் அமைக்கப்படும் இடங்களில் போர்க் காட்சிகளை ஒளிபரப்புவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்படவுள்ளன.

மாங்குளத்தில் போர் நினைவுப் பூங்கா ஒன்றை அமைப்பதற்கும் ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம-6)

## கூட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.16

அராலி சரஸ்வதி மகா வித்தியாலய பழைய மாணவ சங்கக்கூட்டம் இன்று பி.ப. 3 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அபிவிருத்தி பற்றி இதில் கலந்துரையாட உள்ளதால் அனைத்து பழைய மாணவர்களையும தவறாது கலந்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (எ-6)

★ ★ ★

வலிகாமம்தெற்கு,ஓக.16

நவாலி விவசாய சம்மேளனத்தின காலபோக நெற்செய்கை சம்பந்தமான ஆலோசனைக்கூட்டம் இன்று மாலை மூன்று மணிக்கு சம்மேளனத் தலைவா வே.சிற்றம்பலம் தலைமையில் நவாலி வை.எம்.சி.ஏ. கட்டடத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் இப்பகுதிக்கான காலபோக நெல்விதைப்பு , பராமரிப்பு, அறுவடை தொடர்பான காலங்கள், கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துவது தொடர்பான தீமானங்கள ஆராயப்பட்டு முடிவுசெய்யப்படவுள்ளன.

உடுவில் கமநலசேவை திணைகளை பெரும்பாக உத்தியோகத்தர், விவசாய போதனாசிரியர், விவசாய சம்மேளன உறுப்பினர்கள் மற்றும் பல விவசாயிகளும் இதில் கலந்துகொண்டு கருத்துரை வழங்குவர். (எ-152)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.16

நாரந்தனை சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி ஆலய வருடாந்த மகாசபைக் கூட்டம் இன்று காலை 9 மணியளவில் ஆலய முன்மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆலய பரிபாலன சபைத் தலைவா தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் அடியார்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-6)


## தேவை

புடைவை வியாபாரத்தில்
அனுபவம்வாய்ந்த
ஆண், பெண்
இருபாலாரும் தேவை.
உடன் நேரில் வரவும்.

மிலேனியம் பஷன் &
பொம்பே பஸார்
10,11, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

(C/29517) (21-15-19)



## ஒப்பறேற்றர் தேவை

சங்கானை நிறைஞ்சனாஸ்
தியேட்டருக்கு
ஒப்பறேற்றரும்,
ஒப்பறேற்றராக வேலை பழக
விரும்புபவர்களும் தேவை.
17.08.2003 ஞாயிறு காலை 10.00
மணிக்கு நேரில் வரவும்.

முகாமையாளர்

(சி-29493) (21-26-19-15)


# ரயில்வே அதிகாரசபை ஊழியர் கொழும்பில் கூடி ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஓக.16

இலங்கை ரயில்வே அதிகார சபையின் செயற்பாடுகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு கோரி அதன் ஊழியர்கள் நேற்றுமுன்தினம் கொழும்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தினை தேசிய ரயில்வே சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. ரயில்வே தொழிற்சங்க உறுப்பினர்களும் அவர்களின் குடும்பத்தைச சேர்ந்தவர்களும் என நூற்றுக்கணக்கானவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ரயிலில் பிரயாணம் செய்பவர்களுக்கு சிறந்த ரயில் சேவையினைப பெற்றுக்கொடுக்குமாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர்.

ஊழியர்களின் தீர்க்கப்படாத பிரசசினைகளுக்கு துரிதமாகத் தீர்வு கண்டு தமது தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு அவர்கள் அரசிடம் கோரிக்கை ஒன்றையும் சமர்ப்பித்தனர். (ம-6)

## ஓராண்டு நினைவஞ்சலியும் 25ஆவது பிறந்த நாள் நினைவும்

அன்னை மடியில் 15 - 08 - 1978



இறைவன் அடியில் 29 - 07 - 2002

### அமரர் கனகநாயகம் ஜெயபிரகாஸ்

எம்மையெல்லாம் மகிழ வைத்துச் சிரித்திடும் பிரகாஸ்
உதவி செய்யப்போய் உத்தமனாய்ப் போனாயே அச்சண்ணா.
எமைத் தவிக்கவிட்டு எங்கு நீ சென்றாயோ?
சிரித்துச் சிரித்து கதை சொன்ன காலமெல்லாம் கனவானதே
சீர்குலைந்து தவிக்குதே உன் உறவுகள்
ஏழு வெந்நீரூற்றாய் நாமிருந்த காலமதை இனி -
ஆண்டுகள் ஒன்றென்ன எப்பிறப்பில் காண்போமோ?
ஒரு ஜென்மம் கடந்தாலும்
உன் நீண்ட துயிலின் நினைவுகளுடன் வாழ்கின்றோம்.

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

புதுக்கலட்டி,
இலகடி,
அல்வாய்.

(29514)(21-15-19)

உன் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### குணரத்தினம் கனகரத்தினம் (ரத்தினம்)

அராலி மத்தி, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குணரத்தினம் கனகரத்தினம் நேற்று முன்தினம் 14.08.2003 அன்று காலமானார்.

அன்னார் குணரத்தினம் - காலஞ்சென்ற சிவபாக்கியம் தம்பதிகளின் அருமைப் புதல்வனும் சிவனேஸ்வரி, மகேஸ்வரி (ஜேர்மனி), யோகேஸ்வரி, இராஜேஸ்வரி (பிரான்ஸ்), சிவானந்தன் (பிரான்ஸ்), மகேந்திரன் (பிரான்ஸ்), அனுஷியாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் செல்வலிங்கம் (குமுதினி படகு ஊழியர்), புனிதராசா (ஜேர்மனி), சிவராசா, ஆனந்தராசா (பிரான்ஸ்), வேலாயுதம் (பிரான்ஸ்), மங்கலகரசி (பிரான்ஸ்), சாந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ராஜ்குமார் (பிரான்ஸ்), கஜந்தா, ராஜ்மோகன், மோகனராஜி, மகிழ்ந்தா (ஜேர்மனி), பைந்தா (ஜேர்மனி), ரமேஸ் (ஜேர்மனி), ராஜிவ்குமார், சிவசகிலா, சர்மிளா, சிவதர்சினி, சுகந்தினி, ரஜிஷன் (பிரான்ஸ்), துஷிகா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் சையிலினி (பிரான்ஸ்), சைமிலன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.08.2003) ஞாயிற்றுக் கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வேலன்காடு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.

(21-19-15)(21457)

தகவல்:
க.குணரத்தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை. ஊழியர்கள் போராட்டத்துக்கு அரசியல் சாயம் பூசுவதற்குக் கண்டனம்

## ஊழியர் சங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.16

பல்கலைக்கழக ஊழியர்களின வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு அரசியல் சாயம் பூசப்படுவதை வன்மையாகக் கண்டிக்கின்றோம் - என்று யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமைமுதல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் இச்செய்திக்குறிப்பினை வெளியிட்டுள்ளனர்.

அச்செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பல்கலைக்கழக ஊழியர்களின் போராட்டம் முற்றாக அரசியல் பின்னணி வாய்ந்தது என மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சரும், அரச சார்பு அமைப்புகளும் வெளியிட்டு வரும் தகவல்களை யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

பல்கலைக்கழக போதனை சாரா ஊழியர்களின் சம்பள முரண்பாடுகள் தொடர்பான முறைப்பாடுகளை கடந்த சில ஆண்டுகளாக உரியவகையில் பரிசீலனை செய்யத் தவறிய அரசின் போக்கே இன்றைய நிலைக்கு வித்திட்டது.

இப்போராட்டத்துக்கு அரசியல் சாயம் பூசுவதன் மூலம் அரசு நிலைமையை மேலும் மோசமாக்குகிறது.

உண்மையில் அரசாங்கமே பல்கலைக்கழக நிர்வாகத்தில் அரசியல் தலையீடுகளை மேற்கொண்டுள்ளது. யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் தெரிவு, துணைவேந்தர் தெரிவு, ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் அமைச்சரொருவரின் தலையீடு என்பன இதற்கான உதாரணங்களாகும் - என்றுள்ளது.

# யாழ். குடாநாட்டில் இப்போது இப்படியும் கிடைக்கிறது மணல்

யாழ்ப்பாணம்,ஓக.16

குடாநாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள மணல் தட்டுப்பாட்டினை அடுத்து வடமராட்சியின் சில இடங்களில் வெள்ளவாய்க்கால் பகுதிகளில் சேரும் மணல் கூட்டி அள்ளப்பட்டு கட்டடவேலைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

வதிரிப் பகுதியில் இம்மணலைக் கூட்டி அள்ளி விற்பனை செய்பவர்களும் அதிகரித்துள்ளனர்.

வெள்ளவாய்க்காலில் வெள்ளத்தால் அடித்துவரப்படும் ஒருவகை சிறு மணலை அப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் சிறுசிறு தொகுதிகளாகக் கூட்டி அள்ளிக் குவித்து விலைபேசி விற்றுவருகின்றனர்.

தற்போது இப்பகுதிக்கு மணல் வாங்கவரும் லான்ட்மாஸ்டர்களின் நடமாட்டமும் அதிகரித்துள்ளது.

இப்படிப் பெறப்படும் மணல் கட்டடத் தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-15)

# ஜனக பண்டார எம்.பியை கைது செய்ய நடவடிக்கை

மாத்தளை மாவட்ட பொ.ஐ.முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜனக பண்டார தென்னக்கோனை கைதுசெய்ய மத்திய மாகாண பிரதிப் பொலீஸ்மா அதிபர் நடவடிக்கை எடுத்திருக்கிறார்.

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க இதனைத் தெரிவித்திருக்கிறார்

தென்னக்கோனை கைதுசெய்ய தம்புள்ள நீதிவான் பிடிவிறாந்து பிறப்பித்திருப்பது தெரிந்ததே.

## மாணவி மயூரணி கொலை வழக்கு:

# பாலபிரசன்னாவுக்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகளை தளர்த்த உத்தரவு

மதுரை,ஓக.16

இலங்கை மாணவி மயூரணி கொலை வழக்கில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட பாலபிரசன்னாவுக்கு நிபந்தனைகளைத் தளர்த்த மாஜிஸ்திரேட் வனிதா உத்தரவிட்டார்.

இலங்கை மாணவி மயூரணி கொலை வழக்கில் கைதான மாணவர் பாலபிரசன்னாவை பிணையில் செல்ல மாஜிஸ்திரேட் நீதிமன்றம் உத்தரவிட்டது. அவர் அண்ணாநகர் பொலீஸ் நிலையத்தில் தினமும் காலை 10.00 மணிக்கு ஆஜராகி கையெழுத்திட வேண்டும் எனவும் நிபந்தனை விதிக்கப்பட்டது. அதன்படி அவர் அண்ணாநகர் பொலீஸ் நிலையத்தில் கையெழுத்திட்டு வந்தார்.

பாலபிரசன்னா 'பிளஸ் 2' தேர்வில் 80 சதவீத புள்ளிகள் பெற்றுள்ளார். அவருக்கு ஒட்டன்சத்திரம் கிறிஸ்டியன் கல்லூரியில் கணனி பொறியியல் படிப்புக்கு அனுமதி கிடைத்தது.

ஆனால், அவர் நீதிமன்ற நிபந்தனை காரணமாக பொலீஸ் நிலையத்தில் கையெழுத்திட்டு செல்வதால் வகுப்புக்களில் பங்கேற்க முடியாத நிலையிருந்தது. எனவே, அவர் தனக்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகளைத் தளர்த்தக்கோரி மாஜிஸ்திரேட் நீதிமன்றில் மனு செய்தார்.

அந்த மனு மீதான விசாரணை கடந்த புதனன்று நடந்தது. அவர் சார்பில் சட்டத்தரணி சண்முகசுந்தரம் ஆஜரானார். கல்லூரியில் அனுமதி தொடர்பான ஆவணங்களை சமர்ப்பிக்கும்படி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார். அவற்றை சட்டத்தரணி சமர்ப்பித்தார். அதையடுத்து பாலபிரசன்னாவுக்கு ஏற்கனவே விதிக்கப்பட்ட நிபந்தனைகளை மாஜிஸ்திரேட் தளர்த்த உத்தரவிட்டார். பாலபிரசன்னா ஒவ்வொரு வாரமும் சனி, ஞாயிறு கிழமைகளில் காலை 9 மணிக்கு அண்ணாநகர் பொலீஸ் நிலையத்தில் ஆஜராகி கையெழுத்திடும்படி மாஜிஸ்திரேட் வனிதா உத்தரவிட்டார்.

## அரச உத்தியோகத்தர்களுக்கு

# 'அக்ரஹாரா' மூலம் வழங்கப்படும் மருத்துவ உதவியில் திடீர் வெட்டு

யாழ்ப்பாணம்,ஓக.16

'அக்ரஹாரா' காப்புறுதித் திட்டத்தின் கீழ் அரச ஊழியர்களுக்கு இது வரை வழங்கப்பட்டுவந்த வைத்திய உதவிக்கொடுப்பனவு கடந்த மார்ச் மாதம்முதல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ். அலுவலக வட்டாரங்கள் இந்தத் தகவல்களை வெளியிட்டன.

இதுகுறித்து அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்ததாவது:-

அரச ஊழியர்களின் வைத்திய நலன் கருதி மூக்குக் கண்ணாடி பெறுதல், கண் சிகிச்சை பெறுதல், பல் சிகிச்சை பெறுதல் மற்றும் குடும்ப அங்கத்தவர்களின் சிகிச்சை முதலானவற்றிற்கான கொடுப்பனவுகள் 'அக்ரஹாரா' காப்புறுதித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வந்தன.

இவ்வாறு வழங்கப்பட்டுவந்த கொடுப்பனவுகளே தற்போது நிறுத்தப்பட்டுள்ளன.

எனினும், ஆஸ்பத்திரி 'வார்ட்டுக்களில்' தங்கி நின்று சிகிச்சை பெறும் சந்தர்ப்பத்தில் 'அக்ரஹாரா' காப்புறுதித்திட்டத்தின் மூலம் அரச ஊழியர் உரிய சலுகைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

இவ்வாறு காப்புறுதியாளர்களின் சலுகைகள் மட்டுப்படுத்தப்பட்டமைக்கு இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் நஷ்டத்தில் இயங்குவதே காரணம் என்று அலுவலக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை - மருத்துவக் கொடுப்பனவுகள் மட்டுப்படுத்தப்பட்ட போதிலும், அரச ஊழியரின் மாதாந்த வேதனத்திலிருந்து [illegible] 'அக்ரஹாரா' காப்புறுதி நிதி [illegible] வதையிட்டு அரச ஊழியர் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டது. (எ-12-88)

# 'நல்லைக்குமரன்' மலர் வெளியீடு

நல்லைக் கந்தன் திருவிழாவை முன்னிட்டு யாழ்.மாநகர சபை இந்து சமய விவகாரக் குழுவினால் வருடாந்தம் வெளியிடப்படும் 'நல்லைக் குமரன்' சிறப்பு மலர் வெளியீடு எதிர்வரும் 19ஆம் திகதி செவ்வாய் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நல்லை ஆதீன மண்டபத்தில் இடம்பெறும் இந்நிகழ்வில் மாநகர சபை அதிகாரிகள் மற்றும் சைவப் பெரியோர்கள், படைப்பாளிகள் கலந்து கொள்வர். (ம-30)

# நல்லூர் ஆலய சூழலில்

யாழ்ப்பாணம்,ஓக.16

நல்லூர்க் கந்தன் உற்சவத்தையொட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினரால் நடத்தப்பட்டுவரும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் மல்லிகா குணபூசணம் நாகராசாவின் பாட்டுக்கச்சேரி இடம்பெறும்.

இதில் பக்கவாத்தியக் கலைஞர்களாக வயலின் - ஏ.ஜெயராமன், மிருதங்கம் - எஸ்.துரைராசா, கெஞ்சிரா - எஸ்.விமல்சங்கர் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (எ-10)

★ ★ ★

நல்லூர்க் கந்தன் உற்சவத்தையொட்டி நல்லூர் சைவ மகாசபையினரால் ஆலய மேற்கு வீதியில் உள்ள ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய அரங்கில் நடத்தப்பட்டுவரும் தெய்வீகத் தொடர் இசைச் சொற்பொழிவு நிகழ்வில் இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு 'சிவலோக தரிசனம்' பற்றி சி.வை.நித்தியானந்தசர்மா இசைச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (எ-10)

★ ★ ★

நல்லூர்க் கந்தன் உற்சவத்தையொட்டி வடபிரதேச இந்துப் பேரவையால் நல்லூர் அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் நடத்தப்பட்டுவரும் தெய்வீக நிகழ்ச்சித் தொடரில் இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு 'உதித்தனன் உலகம் உய்ய' என்னும் பொருளில் கு.பாலசண்முகன் சொற்பொழிவாற்றுவார். (எ-10-30)

# பீடாரோகண விழா

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் 37ஆவது பீடாரோகண விழா எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமை காலை 10மணிக்கு ஆதீன குரு மூர்த்த ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இதனையொட்டி அபிஷேகம், பீட அபிஷேகம், கொலு பூசை, பட்டணப் பிரவேசம் ஆகியனவும் இடம்பெறவுள்ளன. (ம-10)

# உள்ளூராட்சி வார இறுதி நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஓக.16

வலி.தெற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வார இறுதிநாள் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்கு சபையின் செயலாளர் ந. சிவபாலதர்மகுலசிங்கம் தலைமையில் உடுவில் உப அலுவலக திறந்த வெளி அரங்கில் நடைபெறவுள்ளது. [illegible] உள்ளூராட்சி திணைக்கள [illegible] ரி.வி.கிருஷ்ணசாமி கலந்துகொள்ளவுள்ளார். (ம-10)

# நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

பதினான்காம் திருவிழா



## துயர் துடைப்பான் வேலன்

வல்ல சூரனை வதைத்த தேவன் - புகழ்
நல்லைப் பதியாளும் சிவகுமாரன்
தொல்லை கூறித் தொழுமடியவர் - துயர்
சொல்லிய கணத்தில் துடைக்கும் வேலன்.

நல்ல பாம்பணி நர்த்தனன் - காதிலே
வல்லவாறு தமிழுரைத்த குருநாதன்
அல்லற்பட்டு அழும் அடியவர் - துயர்
சொல்லிய கணத்தில் துடைக்கும் வேலன்.

- ஞான அபிராமி *அச்சுவேலி.*

## செகமுய்ய வரம் தா!

ஊற்றாகி உலகெங்கும் நிறை இறையாகி
செந்தமிழ் செப்புவாரின்
கொற்றவனாகி கோழிக் கொடியேந்தி
பக்தரை ஈர்த்தாளும்
சுற்றமாகி சுந்தரவேல் தாங்கி சூழும்
தளையறுத்துதவும்
அற்புதத் தெய்வமாகி அழிக்க முடியாத குல
பண்பும் அறிவூட்டும்
சற்குருவாகி சண்முகனாய் திருநல்லையில்
கருணை பொழியும் நின்
பொற்கழலைப் பற்றிப் பேரருள் திறனை
வாழ்த்தி நாளும் புகழ்ந்து
சொற்றமிழால் போற்றுகின்றோம் செம்மையறமும்
செகமுய்ய வரம் தா!

- கந்த. தியாகராசா.

## குறை நீக்கி ஆண்டருள்வீரே!

குக்குடக் கொடியொடு வேலேந்தி மயில்மீது
குடிகொண்ட நல்லூர்த் தேவா!
குருவாகிப் பிரணவம் காதிலே ஓதிய
குமரகுருவான பரனே!
குவலயம் வலம்வந்து கலகநிலை யதுவென்ற
உயர்ஞானப் பழனி நாதா!
குறவர் குலம் விளங்கவரு வள்ளியின் காந்தனே!
குறை நீக்கி ஆண்டருள் வீரே.

- கவிமணி கந்தமுருகேச தாசனார்.

## கைவேல் வந்திடும் நம்மைக் காக்க

*மந்திரம் கந்தன் நாமம்*
*மருந்தாகி வினைகள் தீர்க்கும்*
*தந்திரம் அறிவார் யாரோ*
*சகலதும் அவனின் கூத்தே*
*சுந்தர புருஷன் நல்லூர்ச்*
*சுப்பிர மணியன் கைவேல்*
*வந்திடும் நம்மைக் காக்க*
*வாழ்வினில் துணையாய் நிற்கும்.*

- கவிஞர் வ.யோகானந்தசிவம்.

## இன்ப வாழ்வு அருளுமையா!

*நல்லையிலே கோயில் கொண்டு – நீ*
*நாளெல்லாம் உறைய வேண்டும் – உனை*
*தீந்தமிழ்க் கவியால் பாடுவேன் – எமை*
*நீனைக் கண் பார்த்தருள வேணும்*
*சீல மயிலேறும் வாகனனே – எமக்கு*
*சீலமெல்லாம் தந்தருள வேண்டும்*
*கதி நீயென்று பற்றினோம் கந்தா – எம்*
*பாவம் தீர்த்தின்பம் அருளுமையா!!*

- சி.தவசீலன், *பெரியமாவடி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலைகளை அகற்ற இராணுவம் தயார்; நாம்தான் அதனைத் தடுத்துள்ளோம்!

## நல்லூர் பிரதேச செயலர் உரை

நல்லூர்,ஓக.16

அரியாலை, ஈச்சங்காட்டுப் பகுதியில் இருந்து இராணுவ காவல் அரண்களை அகற்ற இராணுவம் தயாராக இருந்தபோதிலும், நானும் மேலதிகாரியுமே இராணுவ நிலைகளை அகற்ற வேண்டாம் எனக் கேட்டுள்ளோம்.

மேற்கண்டவாறு நல்லூர் பிரதேச செயலாளர் வி.வி.முருகையா குறிப்பிட்டார்.

அரியாலை, ஈச்சங்காட்டுப் பகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து தற்போது நெற்செய்கைக்கு விடப்பட்ட காணி உரிமையாளர்கள் குத்தகையாளர்களுக்கான கலந்துரையாடல் நல்லூர் பிரதேச செயலாளர் வி.வி.முருகையா தலைமையில் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் இடம்பெற்றது.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய. நல்லூர் பிரதேச செயலாளர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது இராணுவத்தினால் அனுமதிக்கப்பட்ட நிலப்பரப்பினுள் சென்று வருவதற்கான அனுமதிப் பத்திரத்தை நான் அப்பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு வழங்குவேன்.

அனுமதிப்பத்திரத்தை இராணுவத்திற்கு காட்டிவிட்டு காலை ஆறு மணிமுதல் மாலை ஆறு மணிவரை விவசாய நடவடிக்கைகளில் மக்கள் ஈடுபடமுடியும்.

இப்பகுதிக்கான விவசாய சம்மேளனத்தை விரைவில் அமைக்கவேண்டும். இதற்குப் பொறுப்பாகவும் தகுதியானவராகவும் எஸ்.ரி.பத்மநாதனை நான் நியமனம் செய்கின்றேன். இதனை இங்குள்ளவர்கள் ஆட்சேபிக்க மாட்டார்கள் என்று நினைக்கின்றேன் - என்றார் அவர்.

கமத்தொழில் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன், தலைமையகப் பெரும்பாக உத்தியோகத்தர் ச.உருத்திரேஸ்வரன், விவசாய திணைக்கள உதவிப் பணிப்பாளர் க.சின்னத்துரை, யாழ். மாவட்ட இராணுவ பொதுசனத் தொடர்பு அலுவலர் கேணல் ரட்ணாயக்கா உட்பட பலர் இதில் உரையாற்றினர்.


## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 25 - 06 - 1971

மறைவு 16 - 08 - 1990

### பரராஜசிங்கம் சுதன்

ஆண்டது பதின்மூன்றான போதும்
ஆறவில்லை உன் இழப்பது
அகிலமுள்ளவரை அகலாது உன் நினைவு
அன்பான அப்பாவுடன் நீயும்....
வசந்தத்து மலரென வந்துதித்திட்டு
இலையுதிர் இலையென சென்றிட்டாய்
தந்தைவழி மூத்தமைந்தன் நீயும் தரணியில்
தனியிடம் வகிப்பாய் யென்றிருக்க - பொல்லாத
காலனவனும் விமான வடிவத்தில் வந்து கவர்ந்தானோ?

உன் நினைவால் துயருறும்:
அக்கம்மா, தம்பிமார், அம்மம்மா
மற்றும் உறவினர்கள்.

(24-16-15) (21473)


## செயலமர்வு ஒத்திவைப்பு

வலிகாமம்தெற்கு,ஓக.16

இம்மாதம் 18 ஆம் திகதி திங்கட்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவிருந்த வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளில் தரம் 10,11 ஆகிய வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான வர்த்தகமும் கணக்கியலும் பாடம் தொடர்பான செயலமர்வு எதிர் வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும் என கல்வி அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.நாகராஜா அறிவித்துள்ளார்.

(எ-152)

# யாழ். மாவட்டத்திற்கான தொழில் இல்லம் விரைவில்!

## அமைக்கப்படும் என்கிறார் அதிகாரி

வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு உதவ யாழ். மாவட்டத்திலும விரைவில் 'தொழில் இல்லம்' அமைக்கப்படவுள்ளது.

- இவ்வாறு யாழ் மாவட்டத்தொழில திணைக்களத்தின் உதவி ஆணையாளர் எஸ்.முத்துக்குமாரசாமி தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கல்வி கற்றுவிட்டு வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கான பதிவினை மேற்கொள்ளல், தொழில்பயிற்சிகளை வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள தொழில் இல்லம் என்னும் அமைப்பு மாவட்டங்கள்தோறும் அமைக்கப்பட்டு வருகின்றது. அரசின் புதிய தொழில் திட்டத்தின்கீழ் இந்நடவடிக்கை செயற்படுத்தப்படுகிறது.

இந்தத் தொழில் இல்லம் 18 மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டு சேவைகள் இடம்பெற்று வருகின்றன.

யாழ். மாவட்டத்திலும் தொழில் இல்லம் அமைப்பதற்குரிய இடம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இத்தொழில் இல்லம் அமைக்கப்பட்டால் எமது திணைக்களத்தின் வேலைப்பளுவும் ஓரளவு குறைக்கப்படும் என எதிர்பார்க்கிறோம் - என்றார் அவர் (ஒ-12)


உ
குகமயம்
ஸ்ரீ அம்பலவாண முருகன் துணை

### தாவடி
### ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி கோயில்

யாழ்ப்பாணம் - தாவடியூர் ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி கோயில்
மஹோற்சவங்களை ஆகம முறைப்படியும் மிகுந்த பக்தியோடும்
கானாமிர்தமாக மந்திரமழை பொழிந்து தொடர்ந்து
ஐந்து வருடாந்த மஹோற்சவங்களைச் செவ்வனே
நடத்தி நிறைவேற்றிவரும்
நல்லூர் சட்டநாத சிவன் ஆலய
பிரதம குரு

### பிரம்மஸ்ரீ தாணு. வாசுதேவக் குருக்கள் ஐயா

அவர்களுக்கு

### "சிவாச்சாரிய தேவகான பூஷணம்"

என்னும் கௌரவ விருதினை ஆலய பரிபாலனசபையும்,
உபயகாரர் சபையும், வழிபடுவோரும் வழங்கிக் கௌரவித்து,
தங்கப் பதக்கமும் சூட்டிப் பாராட்டி வாழ்த்துகின்றனர்.

வாழ்த்து

பூவளரும் சோலை கொண்ட சுந்தரத்
திருத்தலம் காண் தாவடி
தேவளரும் அம்பலவாண முருகன் கோயில்
திரு உற்சவ காலந் தன்னில்
பாவளரும் பண்ணினொடு பற்பல மந்திரத்தைத்
தேமதுரம் கலந்து தந்து
கோவளர குடிவளர குலம் வளர
முருகன் அருள் பூத்த
தேவகான பூஷண வாசுதேவக் குருக்கள்
ஐயா பல்லாண்டு வாழி! வாழி!

- ஆலய பரிபாலன சபையினர்.

(24-15-19) (21458)






சமாதானத்தை உறுதிப்படுத்துவோம்.

இரு தசாப்தங்களாக துயரம் கண்ட நம் பிள்ளைகள் இன்று சமாதானம் கண்டு புன்னகைக்கின்றனர். இந்நிலையை நாம் நிரந்தரமாக்குவோம் என அவர்கள் நம்புகின்றனர். சமாதானத்தை முன்னெடுக்க உறுதி எடுத்துப் பாடுபடுவோம். ஒத்திவைக்காது ஒன்றுபட்டு அதனை அடைய ஒத்துழைப்போம். அவர்களின் எதிர்காலத்தை ஒளிமயமாக்குவோம். இது நம் கடமை.

Save the Children
in Sri Lanka

Grant McCann


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறார்களின் உடல், உள வளர்ச்சிக்கு வித்திடும் பொறுப்பாளிகள் ஆசிரியர்களே!

## முன்பள்ளி கட்டடத் திறப்பு விழாவில் ஆணையாளர் உரை

முன்பள்ளிகளில் இணைந்துகொள்ளும் சிறார்களை அன்புடன் அரவணைத்து அவர்களின் உடல், உள வளர்ச்சிக்கு வித்திடும் பொறுப்பு முன்பள்ளி ஆசிரியர்களையே சாரும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி.

வலி.தென்மேற்கு பிரதேச சபையால் புதிதாக அமைக்கப்பட்ட செபமாலை மாதா முன்பள்ளிக்கான கட்டடத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதேச சபையின் செயலாளர் பி.விக்டர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றுகையில்:-

சிறார்களின் எதிர்கால வளர்ச்சிக்கு ஏற்ற விதத்தில் கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாடுகள் முன்பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிறார்களின் மூளையானது விருத்தி பெறுவது ஐந்து வயதுக்கு உட்பட்ட காலத்தில்தான் என்று கண்டறியப்பட்டுள்ளது. இக்காலத்தில் அவர்களின் செயற்பாடுகள், சிந்தனைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை ஆசிரியர்கள்தான் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும்.

எதிர்காலத்தில் இச்சிறார்கள் உள வளர்ச்சி பெறுவதற்கும், நல்லவர்களாக வாழ்வதற்கும் அவர்களை உருவாக்கவேண்டிய பொறுப்பு பெற்றோர்களுக்கு மாத்திரமல்லாது ஆசிரியர்களுக்கும் உண்டு - என்றார்.

சண்டிலிப்பாய் உதவிப் பிரதேச செயலர் மு.பாலசிங்கம், சமூக அபிவிருத்தி மன்றத்தலைவர் திருமதி ந.ஜெகதீசன், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ம.தயாபரன், பண்டத்தரிப்பு றோ.க. த.க. பாடசாலை அதிபர் க.புலேந்திரராசா உட்படப் பலரும் உரையாற்றினர். (எ-10-135)

# ஆங்கிலத்தின் அவசியம் உணரப்பட்ட சமயம் ஆசிரிய நியமனத்தில் பாராமுகம் ஏன்?

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கம் கேள்வி

யாழ்ப்பாணம்,ஓக.16

ஆங்கிலத்தின் அவசியம் இன்று அனைவராலும் உணரப்பட்ட நிலையில் ஆங்கில ஆசிரியர் நியமனத்தில் பாராமுகம் ஏன்? இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளது வடக்கு - கிழக்கு மாகாண பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கம்.

இது தொடர்பாக அச்சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1997ஆம் ஆண்டிலிருந்து வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள அனைத்து கல்வி வலயங்களிலும் ஏற்பட்ட பாரிய ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்களை ஓரளவிற்கேனும் நிரப்பும் பொருட்டு வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் ஒப்பந்த கால அடிப்படையில் தகுதியானவர்கள் தகுதிகாண் பரீட்சைகள் மூலம் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டு நாளொன்றுக்கு 2 மணித்தியாலங்கள் வீதமும் மணித்தியாலத்திற்கு 40 ரூபா வீதமும் அதிகபட்சக் கொடுப்பனவாக மாதாந்தம் ரூபா ஆயிரத்து 600 மட்டும் பெற்று மாணவர்களின் கல்வி உயர்ச்சியை நோக்கமாகக் கொண்டு முழுநேர ஆசிரியர்களைப் போல் சகல கல்விச் செயற்பாடுகளிலும் அர்ப்பணிப்புணர்வோடு பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் சேவையாற்றி வருகின்றனர்.

மேலும் பாடசாலைகளிலும் நீண்டகாலமாக ஆங்கிலக் கல்வியைப் போதிப்பதற்கு எந்தவோர் ஆசிரியர்களும் இல்லாத நிலையில் மாணவர்கள், எதிர்காலம் இருளான நிலையில் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றார்கள் என்பது மிகவும் பாரதூரமானதும் வேதனைக்குரியதுமாகும். இவ்விடயம் தொடர்பாக ஆழமான கரிசனையோடு பல தடவைகள் உரிய கல்வி அதிகாரிகளிடம் நேரடியாகத் தொடர்புகொண்டபோதும் எமது மாணவர்கள் அநாதைகளாக்கப்பட்டுள்ள இந்த இழிசெயலை இனிமேலும் எம்மால் ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை. கல்விக் கொள்கைகளில் பல முற்போக்கான மாற்றங்களை கல்வி அமைச்சு ஏற்படுத்த முனைகின்ற போதும் ஆங்கில ஆசிரியர்களின் நிரந்தர நியமனத்தில் மட்டும் அசமந்தப் போக்கைக் கையாண்டு வருவது மிகவும் கவலையையும் ஏமாற்றத்தையும் தருகிறது.

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2001ஆம் ஆண்டில் உலக வங்கியின் நிதியுதவியைக் கொண்டு திறைசேரி அங்கீகாரம் வழங்கியும் இறைவரை எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கையும் உரியவர்களால் எடுக்கப்படவில்லை என்பது கணகூடு. போரினால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கில் இந்த நிலை தொடர்கதையாக உள்ளது. புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி என்ற போர்வையில் பல சர்வதேச நிறுவனங்களிடம் நிதியுதவி பெறப்படுகின்றபோதும் யாவற்றிற்கும் அடிநாதமாக விளங்கும் கல்வி அபிவிருத்தியில் மட்டும் ஏன் இந்த பாராமுகம் என்பது வியப்பிற்குரியதாக உள்ளது. இன்றைய நவீன யுகத்தில் ஆங்கிலக் கல்வியின் அவசியம் சகல தரப்பினராலும் உணரப்பட்ட நிலையில் எமது மாணவர்களுக்கேற்பட்ட இத்துர்ப்பாக்கிய நிலையிலிருந்து அவர்களை மீட்டு ஒரு வளமான கல்விச் சமுதாயத்தைக் கட்டியெழுப்பி சுபீட்சத்துடன் மிளிரச்செய்ய எமக்கு காலந்தாழ்த்தாது நியமனத்தை வழங்குவதன் மூலம் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருமாறு வேண்டிநிற்கின்றோம்.

மேலும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் குறிப்பிட்ட காலத்தில் நிரந்தர நியமனம்பெற்று ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு அனுப்பப்பட்டிருந்தால் எமது பிரதேசம் மேலும் சிறந்த சேவையினை இக்காலப்பகுதியில் பெற்றிருக்கும்.

எனவே, எமது கடந்த கால சேவையினைக் கருத்திற்கொண்டு மிகவிரைவில் எமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும். எமக்கு உடனடியாக நிரந்தர நியமனம் வழங்கப் [illegible] [illegible] இல்லை நிறுத்திக்கொள்ள நேரிடும் - என்றுள்ளது.

# குடாநாட்டு ஆங்கில ஆசிரியர்களுக்கு அமெரிக்க நிறுவனம் விசேட பயிற்சி

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் ஆங்கில பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விசேட பயிற்சித் திட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்வதற்கு அமெரிக்க நாட்டின் யு.எஸ்.எயிட் நிறுவனம் முன்வந்துள்ளது.

மேற்படி பயிற்சித்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் யாழ். கல்விவலயத்தில் நடைபெற்றது. இதில் குறிப்பிட்ட நிறுவனப் பிரதிநிதிகளும், கல்வி அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

யாழ். கல்விவலயத்தின் ஊடாக இந்த பயிற்சித்திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது என்றும் இதற்கான நிதி ஒதுக்கீடு மற்றும் பயிற்சிக்காலம், பயிற்சி நாள்கள் தொடர்பான விவரங்களை யு.எஸ்.எயிட் நிறுவனம் விரைவில் வெளியிடும் என்றும் கல்வி வலய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (எ-12)



உரும்பிராய் செல்வபுரம் சனசமூக நிலையத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் முன்பள்ளி மாணவர்களின் கலை விழா நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உரும்பிராய் தெற்கு கிராம அலுவலர் ஆ.சூரியகுமாரன் உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். அருகில் யாழ். இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம், செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், சனசமூக நிலையத் தலைவர் பொ.இரத்தினசிங்கம் ஆகியோர் காணப்படுகின்றனர். (எ)

## போதைப்பொருள் குறித்த வழக்குகளில்

# மரணதண்டனை விதிக்கப்பட்ட 47 பேர் இலங்கைச் சிறைகளில்

போதைப்பொருள் சம்பந்தப்பட்ட குற்றங்களுக்காக மரணதண்டனை விதிக்கப்பட்ட 47 பேர் தற்போது இலங்கைச் சிறைகளில் உள்ளனர். இவ்வாறு போதைப்பொருள் தடுப்புப் பிரிவுப் பொலீஸார் தெரிவித்தனர். இதுபற்றி அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களைத் தவிர போதைமருந்து சம்பந்தப்பட்ட வழக்குகளில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட 80 பேரும் சிறைகளில் உள்ளனர். மரணதண்டனை பெற்றவர்களில் இலங்கையர்கள் 38 பேர் ஆவர். இவர்களில் 37 பேர் ஆண்களாவர். ஒருவர் பெண. ஏனைய 9 பேரும் வெளிநாட்டவராவர். அவர்களில் 7பேர் ஆண்கள் ஏனையவர்கள் பெண்கள்.

ஆயுள்தண்டனை பெற்றுள்ளோரில் 66 இலங்கையர்களும் 14 வெளிநாட்டவர்களும் அடங்கியுள்ளனர்.

இலங்கையர்களான 66 பேரில் 9 பேர் பெண்கள் ஆவர். வெளிநாட்டினர் 14பேரில் 2பேர் பெண்கள் ஆவர்.

மேற்படி குற்றவாளிகள் போதைப் பொருளைக் கடத்தியமை, வைத்திருந்தமை மற்றும் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டமை போன்ற குற்றச்செயல்களுக்காகத் தண்டனை பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-12)

### விரிவுரைகள் ஆரம்பம்

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் விரிவுரைகள் யாவும் [illegible] மறுதினம் திங்கட்கிழமை [illegible] கும் என கல்லூரி அதிபர் எஸ். யோகராஜன் தெரிவித்தார். (எ-12)

# மக்கள் முகம்



பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கத்தின் பவள விழாவினையொட்டி அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட இலக்கியப் போட்டியில் உயர்கல்விப் பிரிவில் சிறுகதைப் போட்டியில் பங்குபற்றிய யாழ். பல்கலைக்கழக இரண்டாம் வருட தமிழ்ச் சிறப்புக்கலை மாணவன் பெ.சிறிகந்தநேசன் சிறப்புப் பரிசினைப் பெற்றுள்ளார்.

★ ★ ★ ★



கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த இராசதுரை சுகதாஸ் 2002ஆம் ஆண்டுக்கான அதிர்ஷ்ட சீட்டுக்குலுக்களின் மூலம் அமெரிக்காவில் உயர்கல்வியுடன் கூடிய தொழில்வாய்ப்பைப் பெற்று அங்கு பயணமாகியுள்ளார்.

தனது ஆரம்பக்கல்வியை கோண்டாவில் இந்துமகா வித்தியாலயத்திலும் உயர்தரக் கல்வியை கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், கணனிக் கல்வியை கொழும்பிலும் கற்ற இவர் உயர்கல்வியை அமெரிக்காவில் பெறவுள்ளார். (எ)

★ ★ ★ ★



யாழ்ப்பாணம், கில்னர் கல்லூரி வீதி, வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகக் கொண்ட சண்முகராஜா ஜெகதீஸ்வரராஜா (ஜெகதீஸ்) அண்மையில் யாழ். மேலதிக நீதிவான் பா.சுப்பிரமணியம் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் வைத்தீஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவனும், அக்கல்லூரியின் பழைய மாணவர் சங்க உபசெயலாளரும் செஞ்சிலுவைச் சங்கத்தின் நல்லூர் பிரிவின் உறுப்பினரும் ஆவார். (எ)

★ ★ ★ ★



சுதுமலை வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த சதாசிவம் தம்பித்துரை மல்லாகம் நீதிபதி திருமதி ச.இளங்கோவன முன்னிலையில் அண்மையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

ஓய்வுபெற்ற மக்கள் வங்கிப் பிரதி முகாமையாளரான இவர், சுன்னாகம் ப.நோ.கூ. சங்கப பணிப்பாளராகவும் பணியாற்றியவர். சமூக, சமயத் தொண்டரான இவர் சுதுமலை ஈஞ்செடி ஞானவைரவர் ஆலயம், மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம் ஆகியவற்றின் உறுப்பினருமாவார். (எ)

★ ★ ★ ★



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கு மணியகாரன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி கோபகா நவநீதன் இந்திய கலாசார அமைச்சினால் நடத்தப்பட்ட புலமைப் பரிசில் பரீட்சையில் பரத நாட்டியத்தில் சித்தியடைந்து இந்தியாவில் உள்ள கலாசேத்திராவில் உயர்கல்வி கற்கவெனப் பயணமாகியுள்ளார்.

இவர் சாவகச்சேரி மகளிர் கல்லூரி பழைய மாணவியும், சாவகச்சேரி (திலக நர்தனாலய) திருமதி யசோதா விவேகானந்தனின் மாணவியும் ஆவார். (எ)

★ ★ ★ ★



பருத்தித்துறை மக்கள் வங்கியில் எழுதுநராகக் கடமையாற்றும் செல்வி தர்சினி சிவபாதசுந்தரம் இலங்கை வங்கியாளர் நிலையத்தினால் இவ்வாண்டு மார்ச் மாதம் நடத்தப்பட்ட 'வங்கியியல் நிதியியல்' சான்றிதழ் பரீட்சையில் சித்தி பெற்றுள்ளார். இவர் இப்பரீட்சைக்குரிய 6 பாடங்களையும் ஒரே தடவையில் சித்திபெற்றமை குறிப்பிடத்தக்கது.

வவுனியா கரம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலய பழைய மாணவியான இவர், நெடுங்கேணி பிரதேச செயலகத்தில் தட்டெழுத்தாளராகக் கடமைபுரியும் ம.சிவபாதசுந்தரம் மற்றும் வவுனியா இலங்கைத் திருச்சபை தமிழ்க்கலவன் பாடசாலை உப அதிபர் திருமதி தவமலர் சிவபாதசுந்தரம் ஆகியோரின் இளைய புத்திரியுமாவார். (எ-70)

★ ★ ★ ★



ஆதிமயிலிட்டி, காங்கேசன்துறையைச் சேர்ந்த செல்லையா அன்னராசா அண்மையில் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி திருமதி ச.இளங்கோவன் முன்னிலையில் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

வலி.வடக்கு பிரதேச சபையின் முன்னாள் செயலாளரான இவர், ஆதிமயிலிட்டி காசிபூதராயர் ஆலய வழிபடுவோர் சபை, ஆதிமயிலிடடி சனசமூக நிலையம், சுன்னாகம்தெற்கு ஸ்ரீசிவபூதராயா ஆலய தர்மகர்த்தா சபை ஆகியவற்றின் செயலாளராகவும் பணியாற்றி வருகின்றார். (எ)

## இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக

# இத்தாலிக்குச் செல்ல முயற்சித்த 254 பாகிஸ்தானியருக்கு சிறை

## தங்காலை நீதிமன்றம் விதித்தது

யாழ்ப்பாணம்,ஓக.16

இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக இத்தாலி செல்ல முயன்ற 254 பாகிஸ்தானியர்களுக்கு தலா ஒரு வருடகால கடூழியச் சிறையும், 50 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

தங்காலை நீதிமன்றம் இத்தண்டனையை வழங்கியுள்ளது.

இலங்கையிலிருந்து கப்பல் மூலம் சட்டவிரோதமாக இத்தாலி செல்ல முயற்சித்த இவர்கள் தங்காலைக் கடலில் வைத்து கடற் படையினரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் மீதான வழக்கு தங்காலை நீதிமன்றத்தில் இடம்பெற்றது. விசாரணையின் முடிவில் மேற்படி தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்பட்டது. அபராதத்தைச் செலுத்தத்தவறுவோர் மேலதிகமாக இரண்டு மாத கால கடூழியச் சிறைவாசம் அனுபவிக்க வேண்டுமென்றும் நீதிவான் தீர்ப்பில் குறிப்பிட்டார்.

மேலும் இவ்வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள கப்பலின் தலைவர் உட்பட 7 இலங்கையர்களையும் எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

## யாழ். ஆஸ்பத்திரியில் பணியாற்றும்

# டாக்டர்களுக்கு வழங்கவென மேலும் 15 'பேஜர்'கள் கிடைத்தன

யாழ்ப்பாணம்,ஓக.16

யாழ். போதனா வைத்தியசாலையில் பணிபுரியும், வைத்திய நிபுணர்கள் மற்றும் சிரேஷ்ட வைத்தியர்களுக்கென மேலும் 15 பேஜர் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அவசரநிலைமைகளைப் பொறுத்து வைத்தியர்களை அழைப்பதற்காக பாவிக்கப்படும் இந்த அவசர அழைப்புக் கருவிகளை மைற்றல் கம்பனி வழங்கியுள்ளது.

முன்பு வழங்கப்பட்ட கருவிகளை விட அதிகளவு தூரத்திற்கு இக்கருவிகள் செயற்படக்கூடியன எனக் கூறப்பட்டது. சுமார் 10 கிலோமீற்றர் தூரத்திற்கு இக்கருவிகள் செயற்படவல்லன என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனம் பூரித்துப் பாராட்டுகின்றோம்



யா/சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி
மத்திய மகாவித்தியாலய மாணவி

செல்வி

**ஜெயந்திமாலா சிவகடாட்சம்**

அவர்கள் 2003 க.பொ.த. உயர்தரப் பரீட்சை கலைப்பிரிவில் A,B,C பெறுபேற்றினைப்பெற்று, யாழ். மாவட்டத்தில் 61ஆம் நிலையினை அடைந்தமையையிட்டு அவரை மனதாரப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர் மேலும் பல உயர்வுகளை அடைய வேண்டுமென எல்லாம்வல்ல ஹரிஹரபுத்திர ஐயனாரை வேண்டி வாழ்த்துகின்றோம்.

மாமா : மு.பரமேஸ்வரன்,
அத்தை: ப.சுபாசினி,
மச்சான்: ப.குயின்ரன்

*துறையூர், வேலணை.* (21472) (25-11-14)


# அரசாங்க கேள்வி அறிவித்தல்

**புனர்வாழ்வளிப்பு அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சினால் யாழ். மாவட்டத்திற்கு வழங்கப்படும் அத்தியாவசிய உணவு வகைகள் வழங்கலுக்கான கேள்விகோரல்**

01) யாழ். மாவட்டத்தில் இலவச நிவாரணத்திற்கு 1500 மெற்றிக் தொன் பிறிமா கிறீன் மா விநியோகிப்பதற்காக கேள்விகள் பிறிமா நிறுவனத்தின் யாழ்ப்பாண முகவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

| மாதாந்த கேள்வித்தொகை | | |
|---|---|---|
| 2003 ஒக்ரோபர் | 2003 நவம்பர் | 2003 டிசெம்பர் |
| 1500 MT | 1500 MT | 1500 MT |

கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் முகவர்கள் மீளளிக்கமுடியாத கேள்வி வைப்பாக ரூபா 500.00இனை யாழ். மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி கேள்விப்படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் 18-08-2003ஆம் திகதி தொடக்கம் 27-08-2003ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அலுவலக நாள்களில் மு.ப. 10.00 மனி தொடக்கம் பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

02) கேள்வி சமர்ப்பிப்பதற்கு பந்தி 01 இல் குறிப்பிட்டுள்ள ஆர்வமுள்ளவர்கள் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பாக (விலை கேள் முறி - Bid Bond) மெற்றிக்தொன் ஒன்றிற்கு (01 Mt.) ரூபா நாநூறுப்படி (ரூபா 400.00) செலுத்துதல் வேண்டும் (விவரம் கேள்வி ஆவணத்திலுள்ளது).

03) பூரணப்படுத்திய இரு கேள்விப்படிவத்தினை *தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)* என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ/தபால் மூலமோ யாழ். செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக (கணக்காளரது) அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2003.08.28ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு முன்பாகச் சேர்க்கவும். அன்றைய தினம் பி.ப.2.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோரியவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.

04) நீள தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "பிறிமா கிறீன் மா வழங்கலுக்கான கேள்வி" என எழுதப்படவேண்டும்.

05) ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக (செயற்படுத்தல் முறிக்காக - PERFORMANCE BOND) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும் (விவரம் கேள்வி ஆவணத்திலுள்ளது).

**செ.பத்மநாதன்,**
தலைவர்/அரச அதிபர்,
மாவட்ட கேள்விச்சபை/மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.
14.08.2003. (சி-29533) (11-14)

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

**புனர்வாழ்வளிப்பு, அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சினால் யாழ். மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் அரிசி (புழுங்கல் சிவப்பு நாடு) வழங்கலுக்கான கேள்வி கோரல்**

1. யாழ். மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2003 ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் ஆகய மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இருந்து கொள்வனவு செய்து கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கென கீழே தரப்பட்டுள்ள தொகை அரிசியை நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் (வரைவுள்ளது) இருந்து கோரப்படுகின்றன. ஒவ்வொரு ப.நோ.கூ. சங்கத்திற்கும் வழங்கீடு செய்யப்படவேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| இல. | ப.நோ.கூ. சங்கம் | அரிசியின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | 2003 ஒக்ரோபர் (MT) | 2003 நவம்பர் (MT) | 2003 டிசெம்பர் (MT) |
| 01. | சாவகச்சேரி | 142 | 142 | 142 |
| 02. | கைதடி | 68 | 68 | 68 |
| 03. | கொடிகாமம் | 127 | 127 | 127 |
| 04. | உடுப்பிட்டி | 30 | 30 | 30 |
| 05. | கட்டைவேலி நெல்லியடி | 42 | 42 | 42 |
| 06. | பருத்தித்துறை | 114 | 114 | 114 |
| 07. | புலோலி | 25 | 25 | 25 |
| 08. | மருதங்கேணி | 77 | 77 | 77 |
| 09. | யாழ்ப்பாணம் | 311 | 311 | 311 |
| 10. | நல்லூர் | 161 | 161 | 161 |
| 11. | அச்சுவேலி | 144 | 144 | 144 |
| 12. | நீர்வேலி | 138 | 138 | 138 |
| 13. | மானிப்பாய் | 121 | 121 | 121 |
| 14. | பண்டத்தரிப்பு | 89 | 89 | 89 |
| 15. | அளவெட்டி மல்லாகம் | 64 | 64 | 64 |
| 16. | தெல்லிப்பழை | 138 | 138 | 138 |
| 17. | சங்கானை | 183 | 183 | 183 |
| 18. | சுன்னாகம் | 186 | 186 | 186 |
| 19. | புங்குடுதீவு நயினாதீவு | 40 | 40 | 40 |
| 20. | வேலணை | 47 | 47 | 47 |
| 21. | ஊர்காவற்றுறை | 65 | 65 | 65 |
| 22. | காரைநகர் | 51 | 51 | 51 |
| 23. | தீவகம் | 11 | 11 | 11 |
| 24. | நெடுந்தீவு | 26 | 26 | 26 |
| | மொத்தம் | 2400 | 2400 | 2400 |

2. கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ. சங்கங்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500/- இனை யாழ். மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி, கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2003.08.18ஆம் திகதி தொடக்கம் 2003.08.27ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாள்களில் முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். இவ்வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ.சங்கங்களைப் பொறுத்த வரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.

3. மீளளிக்க முடியாத வைப்பாக ரூபா 500/-ஐ அந்தந்த மாவட்ட செயலகங்களில் செலுத்தி அரசாங்க அதிபர்களிடமிருந்து கேள்விப் படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

4. கேள்வி கோரப்படவுள்ள அரிசி, புழுங்கல் (சிவப்புநாடு) அரிசியாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.

5. பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவங்களை *தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)* என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ/தபால் மூலமாகவோ யாழ். செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் 2003.08.28 பிற்பகல் 2.00 மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பிற்பகல் 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்விகாரர் அல்லது அவரது எழுத்துமூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.

6. கேள்விப்பத்திரத்தின் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் *"அரிசி வழங்குவதற்கான கேள்வி"* என எழுதப்படவேண்டும்.

7. கேள்விகாரர்கள் (Bidders) குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களில் ஒன்றுக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்கு தமது கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கும் அச்சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளை குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கத்திற்கும் விநியோகிக்கப்படவேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.

8. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக (செயற்படுத்தல் முறிக்காக - Performance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டும்.

9. கேள்விகள் பரிசீலனை செய்யப்படும் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்துக்கான விலை, மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும் பொழுது விநியோகவிலை சந்தைவிலையிலும் பார்க்க எக்காரணங்கொண்டும் அதிகமாக இருக்கமாட்டாது.

செ.பத்மநாதன்,
தலைவர்/அரச அதிபர்,
மாவட்ட கேள்விச்சபை/மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம். 2003.08.14


Awaiting A/L Results

**Study In India - Bangalore University at**
**NATIONAL FIRST GRADE COLLEGE**
2nd Cross, Bhoopasandra, R.M.V. Extn 2nd Stage, Bangalore 94
T.P: 0091-80-3414557, 3417833 Fax : 0091-80-3615621, 3417832
E-mail : nfgc@bal.vsnl.net.in web : www.nfgcollege.com

THREE YEARS

**Bangalore University Degree**

**கடந்த 10 ஆண்டுகளாக பின்வரும் பட்டப்படிப்புகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகின்றன.**

B.Sc. - உயிரியல் தொழில்நுட்பம்
B.Sc. - மரபணுவியல்
B.Sc. - நுண் உயிரியல்
B.Sc. - கணனி விஞ்ஞானம்
B.B.M. - தொழில் முகாமைத்துவம்
B.C.A. - கணனிப் பிரயோகம்
B.Com+ - கணனி
M.Sc. - நுண் உயிரியல்
M.Sc. - உயிரியல் தொழில்நுட்பம்
M.B.A. and M.Sc.

2003 ஆவணி மாதம் 17ஆம் திகதி காலை 9.30 மணிக்கு இலவசக் கருத்தரங்கு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. 2003 ஆவணி மாதம் 17ஆம், 18ஆம் திகதி காலை 10.30 மணி முதல் மாலை 5.00மணி வரை கொழும்பு ஹில்ற்றனில் வைத்து பல்கலைக்கழக அதிபரால்/நிர்வாக சபையால் உடனடி அனுமதிகள் வழங்கப்படவுள்ளன.

நுண் உயிரியல் முதுமாணிப் பட்டக் கல்வியில்100% பெறுபேறு உறுதி. சகல மாணவர்களும் பல்கலைக்கழக முதலாம், 2ஆம் தரங்களில் சித்தியெய்தியுள்ளார்கள். 250இற்கு மேற்பட்ட இலங்கை மாணவர்கள் இங்கு கல்வி கற்கின்றார்கள். ஆண்களுக்கும் பெண்களுக்கும் வெவ்வேறு விடுதி வசதிகள் உள்ளன. 150 இலங்கையர்கள் ஏற்கனவே பட்டம் பெற்றுள்ளார்கள். 34 நாடுகளைச் சேர்ந்தவர்கள் கல்வி கற்கிறார்கள். ICCR ஊடாக மாணவர்களுக்கு இந்திய அரசின் புலமைப்பரிசில். இதற்கான பதிவுக் கட்டணம் US$400 A/L பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தியெய்திய மாணவர்களும் இப்போது இணைந்துகொள்ளலாம்.

இப்பொழுதே இணைந்துகொள்ளுங்கள் அதனால் ஒரு கல்வி ஆண்டினைமீதப்படுத்திக் கொள்ளலாம்.

See Career Quest Suppliment in Sunday Observer on Sunday 17th

2003 ஆவணி மாதம் 18ஆம் திகதி வரை இணைந்துகொள்பவர்களுக்கு வசதியான வகையில் கட்டணங்கள் அறவீடு செய்வதற்கு ஒழுங்குகள் செய்யப்படும்.

**Company Secretarial Services (pvt) Ltd. 285C 1/1, Stanley Tillakaratne Mawatha, Jubilee Post, Nugegoda.**
**Tel: 01-854438 E-mail : yapadd@sol.lk Mr.Gunawardana Res. 01-811524 Mr.Gunasekara Res.038-2232657, 038-2234154, 078-697512**
(C/29532) (26-21-11-14)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்குவியலாகிவிட்ட கல்வயல் மீண்டும் புதுப்பொலிவு பெறுமா?

செய்திக்கட்டுரை

தென்மராட்சி செய்தியாளர்

தென்மராட்சி பிரதேசத்தில் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கல்வயல் கிராமம் அமைந்துள்ளது. நுணாவில் கிழக்கு, நுணாவில் மேற்கு, மட்டுவில், கற்குளி, கெருடாவில் ஆகிய பிரிவுகளின் பகுதியுடன் கல்வயல் கிராம அலுவலர் பிரிவு உள்ளது.

பெருங்குளம், இல்லாரை, கெருடாவில், விளைவேலி, மாணாவளை ஆகிய பகுதிகளில் நெல்வயல்களும், விளை நிலங்களும் உள்ளடக்கிய இப்பிரிவில் 635 குடும்பங்கள் வளங்களுடன் வசித்தனர். இங்கு வசித்தோரில் பெரும்பாலானோர் விவசாயிகளாகையால் வருடம் முழுவதும் வருமானம் தரும் பயிர்கள் செய்கை பண்ணப்பட்டன. இவர்களின் கடின உழைப்புக்கு ஊக்கம் தரக்கூடிய வகையில் இப்பகுதியில் உள்ள குளங்களும், கிணறுகளும் வற்றாதநிலையில் காணப்பட்டன. இல்லாரைக்குளம், பெருங்குளம், கெருடாவில் குளம், மாணாவளைக் குளம், விளைவேலிக்குளம் ஆகியவை விவசாயத்தினை மேம்படுத்த உறுதுணைபுரிந்தன.

காலபோக நெற்செய்கை காலத்தில் நெல்வயல்களாகக் காணப்படும் வயல்களின் நெல் அறுவடை முடிந்து மீண்டும் நெற்செய்கை ஆரம்பிக்கும் வரை பணப்பயிர்களான உப உணவுப் பயிர்களும், மரக்கறிப் பயிர்களும் விளைவிக்கப்பட்டன. இப்பகுதியில் விளைவிக்கப்படும் உற்பத்திப்பொருள்கள் குடாநாட்டின் பல சந்தைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டன.

இப்பிரிவு பாலர்களின் கல்வியினை கல்வயல் கலைமகள் முன்பள்ளியும், கற்குளி பாரதி மழலைகள் கல்விப்பூங்காவும் வழங்கின. ஆரம்ப, இடைநிலைக் கல்வியினை கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலயத்தில் கற்றனர். கல்வயல் கலைமகள் சனசமூக நிலையமும், கற்குளி பாரதி சனசமூக நிலையமும் இப்பகுதி மக்களின் நூலக மற்றும் பொழுதுபோக்கு தேவைகளைப் பூர்த்திசெய்தன. இப்பிரிவில் கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள், ஐக்கிய நாணய சங்கங்கள், மகளிர் அபிவிருத்திச் சங்கம், விளையாட்டுக் கழகம், இளைஞர் கழகம், சிறுவர் கழகம், இந்துமன்றம் ஆகியவை திறம்பட இயங்கின.

இங்கு பதிவுசெய்யப்பட்ட எட்டு ஆலயங்கள் உட்பட 15இற்கு மேற்பட்ட இந்து ஆலயங்கள் சமயவளர்ச்சிக்கு உதவின. சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை நிலையங்கள் உட்படப் பத்துக்கு மேற்பட்ட வர்த்தக நிலையங்கள், அரிசி ஆலைகள் இயங்கிவந்தன. மகளிர் அபிவிருத்திச் சங்கத்தினால் தும்புக் தொழிற்சாலையும் நடத்தப்பட்டுவந்தது.

2000 மே 20ஆம் திகதி ஆரம்பித்த யுத்த அனர்த்தங்களால் தென்மராட்சி பிரதேசத்தில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கல்வயல் கிராம அலுவலர் பிரிவும் ஒன்றாகும். யுத்த அரக்கனின் கொடிய குண்டுகள் இப்பகுதிகளில் அனைத்துக் காணிகள், கட்டடங்கள் ஆகியவற்றைப் பதம்பார்த்ததில் கட்டடங்கள் அனைத்தும் கற்குவியலாக மாறின. குடியிருப்புகள், வழிபாட்டுத் தலங்கள், வர்த்தக நிலையங்கள், பொது அமைப்புகளின் கட்டடங்கள், அலுவலகங்கள், பாடசாலைகள், தும்பு உற்பத்தி நிலையம் ஆகியவற்றின் கட்டடங்கள் மீண்டும் பயன்படுத்த முடியாத அளவுக்குப் பலத்த சேதமடைந்தன. பயன்தரு மரங்கள் அனைத்தும் அழிந்தன. விளைநிலங்கள் அனைத்திலும் மிதிவெடிகளும் வெடிக்காத குண்டுகளும் ஆயிரக் கணக்கில் விதைக்கப்பட்டிருந்தன. பல குடியிருப்பு காணிகளிலும் மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருந்தன. இதனையறியாது தமது குடியிருப்புகளைக் பார்க்க வந்தவர்களில் இதுவரை ஐந்து பேர் மிதிவெடியில் அகப்பட்டு தமது கால்களை இழந்து அங்கவீனர்களாயினர். ஒருவர் தனது உயிரையே பறிகொடுத்துள்ளார். விளை நிலங்கள் மிதிவெடி அபாயத்தினால் தரிசு நிலமாக மாறிவிட்டன. மக்கள் மீள்குடியமர்வுக்கு முன்னர் படையினரின் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் இப்பகுதியில் நூற்றுக்கணக்கான மிதிவெடிகளை மீட்டெடுத்தனர். தமது குடியிருப்பு காணிகளைத் துப்புரவு செய்யும் மக்கள் அங்கு காணப்படும் மிதிவெடிகள், வெடிக்காத ஷெல்கள் ஆகியவற்றைக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர்மூலம் அப்புறப்படுத்தி வருகின்றனர். மாணாவளை, இல்லாரை போன்ற விளை நிலங்களில் இன்னமும் மக்கள் செல்ல முடியாத அளவுக்கு மிதிவெடி அபாயம் உள்ள நிலை காணப்படுகிறது. இதனால் அங்கு நெல்வயல்களும் விளைநிலங்களும் தரிசு நிலமாகவே காணப்படுகின்றன.



கல்வயல் கலைமகள் சனசமூக நிலையக் கட்டடத்தின் இன்றைய நிலை.

மிதிவெடி அபாயம் காணப்படுகின்ற போதிலும், இடம்பெயர்ந்த 635 குடும்பங்களில் கடந்த ஜூன் மாதம் வரை 604 குடும்பங்கள் தமது சொந்த இடங்களில் கொட்டில்களை அமைத்து மீளக்குடியமர்ந்துள்ளன

இப்பிரிவில் விவசாய நடவடிக்கையை மீண்டும் மேம்படுத்த மீள் குடியமர்வு வேளையில் குடியமர்ந்த வறுமைக் கோட்டின்கீழ் உள்ள 45 குடும்பங்களுக்கு ஜேர்மன் உதவித் திட்டத்தின்கீழ் லங்கா சேவா நிறுவனத்தினர் விவசாய உபகரணங்களையும் விவசாய உள்ளீடுகளையும் வழங்கியிருந்தனர். பெரும் தொகையான விவசாயிகளை உள்ளடக்கிய இப்பிரிவில் குறிப்பிட்ட ஒரு சிலருக்கு உதவிகள் வழங்கப்பட்டமை ஏனைய விவசாயிகளுக்கு வேதனையளித்தது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் யுத்தத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட இப்பிரிவு, மாதிரிக் கிராமமாக அரசசார்பற்ற நிறுவனமொன்றினால் தெரிவுசெய்யப்பட்டது. அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ள பல குழுக்களும் நியமிக்கப்பட்டன. அந்த நிறுவனத்தின் அபிவிருத்திப் பணிகளால் கிராமத்திற்கு புதுவாழ்வு கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் அபிவிருத்திப் பணிகள் இன்று ஆரம்பிக்கும், நாளை ஆரம்பிக்குமென தினமும் எதிர்பார்த்த மக்கள் மிகுந்த ஏமாற்றமடைந்துள்ளனர். மாதிரிக் கிராமமாகத் தெரிவுசெய்யப்பட்டு பத்து மாதங்களுக்கு மேலாகியும் இதுவரை எந்தவோர் அபிவிருத்திப் பணியும் ஆரம்பிக்கப்படவில்லை.

மாதிரிக் கிராமமாகத் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் இப்பகுதியில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள சில அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்வந்தபோதிலும் இப்பிரிவு மாதிரிக் கிராமமாக அறிவிக்கப்பட்டதையடுத்து அவை தமது பணிகளை வேறு பிரிவுகளுக்கு மாற்றியுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிக்கொட் நிறுவனத்தினரால் இப்பகுதியில் 35 வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டபோதிலும் பின்னர் அந்தத் திட்டத்தினை வேறு பிரிவுக்கு மாற்றிவிட்டனர்.

கற்குவியலாக மாறியுள்ள தமது குடியிருப்புகளைத் திருத்த முடியாத நிலையில் ஓலைக் கொட்டில்களிலேயே தொடர்ந்தும் வாழ்கின்றனர். இப்பகுதியில் இனியும் அபிவிருத்திப் பணிகள் நடைபெறுமென்ற நம்பிக்கையை இழந்த சிலர் தமது சேதமடைந்த வீடுகளைப் புனரமைப்பதில் ஈடுபட்டுவருகின்றனர்.

பதிவுசெய்யப்பட்ட வழிபாட்டுத் தலங்களில் சில இந்துசமய விவகார அமைச்சின் நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்டு வருகின்றபோதிலும் ஏனையவை இன்னமும் சிதைந்த நிலையிலேயே காணப்படுகின்றன. சேதமடைந்த சண்முகானந்தா வித்தியாலயம் அரசசார்பற்ற நிறுவனங்களால் புனரமைக்கப்பட்டு இயங்கத் தொடங்கியுள்ளது.

கட்டடங்கள் இடிந்து கற்குவியல்களாகவும் கொட்டில் வீடுகளாகவும் காணப்படும் கல்வயல் பிரிவு புனரமைக்கப்படுமா? அல்லது மாதிரிக் கிராமமெனப் பெயர் சூட்டப்பட்டதால் இந்த மக்களுக்கு விடிவே வராதா? என தற்போது வினா எழுப்பப்படுகிறது. ✦

# ஆழத்தோண்டினால் சிங்களவருக்குப் பயம் அகலத்தோண்டினால் தமிழருக்குப் பயம்

சத்தியன்

இலங்கையில் தமிழ் மக்களின் வரலாறு நீண்டதொரு பாரம்பரியத்தைக் கொண்டது. ஆனால், இதனை மறுக்கின்ற - சிதைக்கின்ற - முயற்சிகளைத்தான் எப்போதும் பேரினவாத அரசுகள் முன்னெடுத்து வருகின்றன.

ஓர் இனத்தின் தேசிய வாதத்தினைக் கட்டியெழுப்புவதிலும், அந்த இனத்தவரை இனப்பற்றாளராக்குவதிலும் அந்த இனத்தின் வரலாறு அடிப்படை மூலமாக அமைகின்றது. இந்தப் போக்கினை உலகநாடுகளின் வரலாற்றினை ஆராயும்போது தெளிவாகப் புரிந்துகொள்ளமுடியும்.

ஓர் இனத்திற்கு எப்போதும் நெருக்குவாரங்களைத் திட்டமிட்ட வகையில் ஏற்படுத்துவது அடக்குமுறையாளர்களிடையே காணப்படும் பொதுவானதொரு அம்சம். அந்த வகையில், இலங்கையில் குறிப்பாக வடக்கு - கிழக்கில் தமிழர்கள் எப்போதுமே திட்டமிட்டு ஏதோ ஒரு வகையில் புறந்தள்ளப்பட்டார்கள்.

தமிழ் இனம் இந்த மண்ணில் பூர்வீகந்தொட்டே வாழ்ந்து வருகின்றது என்பதனை சிங்கள இனம் மறுக்கும் வகையில் சிங்கள அரசும், பேரினவாத வரலாற்று ஆசிரியர்களும் கண்துஞ்சாது பாடுபடுகின்றார்கள்.

பண்டைக்காலத்தில் எழுதப்பட்ட பாளி மற்றும் சிங்கள இலக்கியங்களில் ஆரம்பகட்டத்தில் தமிழ் இனம் தொடர்பாக எழுதப்பட்ட உண்மைகள் காலப் போக்கில் திரித்தும் மறைத்தும் சிங்களமக்கள் தமிழர்மீது குரோத மனப்பான்மையை வளர்க்கும் வகையில் எழுதப்பட்டன.

இந்த வரலாற்றுத்திரிபுகள் பின்வந்த சிங்கள வரலாற்று ஆசிரியர்களால் அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டு சிங்கள மக்களின் மனங்களில் விஷமேற்றப் பயன்படுத்தப்பட்டது.

இலங்கை வரலாற்றை எழுதியவர்கள் பௌத்தசமய பிக்குகள். அவர்கள் தமிழ் பௌத்தர்கள் அல்ல. அத்துடன், சிங்கள மன்னர்களால் ஆதரிக்கப்பட்டவர்கள். இவர்கள் எழுதிய பக்கச்சார்புடைய வரலாற்று நூல்களை அடிப்படையாகக் கொண்டு பின்வந்த சிங்கள வரலாற்று ஆசிரியர்கள் இலங்கையின் வரலாறு - பௌத்த சமயத்தின் வரலாறு என்ற அடிப்படையிலேயே அணுகுகிறார்கள். இக்கருத்தை வலியுறுத்தும் ஆதாரங்களை மட்டுமே தேடித்தேடி எடுக்கிறார்கள். தமிழ் இனத்தின் சான்றுகளைத் திட்டமிட்டு அழித்து விடுகிறார்கள். போதாதற்குப் போரும் அவற்றை அழித்தது.




ஆனால், மண்ணுக்கு அடியில் புதைந்துள்ளவை மட்டும் ஒருவாறு காப்பாற்றப்பட்டுள்ளன. வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் தமிழரின் பண்பாட்டை, நிலையான வரலாற்றை சிங்களவர்களைப் புறந்தள்ளக்கூடிய எத்தனையோ சான்றுகள் புதைந்து கிடக்கின்றன. அவற்றை வெளியே கொண்டுவருவதற்குப் பேரினவாத அரசுகள் எப்போதும் உடன்பட்டதில்லை. ஆனால், அவற்றைத் தேடி அழிப்பதிலும் திரித்துக் கூறுவதிலும் பேரினவாதிகள் முனைப்பாகச் செயற்படத்தவறவில்லை.

இராணுவப் பிரதேசங்களில் பேரினவாத வரலாற்று ஆசிரியர்களின் துணையோடு இவ்வாறான ஆதாரங்களைத்தேடி அழிக்கும் முயற்சிகள் இப்போது நடைபெற்றாலும் ஆச்சரியப்படத் தேவையில்லை.

ஏனெனில், எத்தனையோ தமிழ்க் கிராமங்கள் சிங்களப் பெயர்களில் அழைக்கப்படுகின்றன. மணலாறு வெலியோயா ஆகியது போல.

ஆனால், ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து ஆளையே கடிக்கும் நிலையாக 'கந்தரோடை' 'கந்தரோதய' என்று மாற்றியமைக்கப்பட்டு அது தொடர்பான துண்டுப் பிரசுரங்களும் வெளியிடப்பட்டு வருகின்றன.

இதன்மூலம் திட்டமிட்ட வகையில் யாழ்ப்பாணத்தில் இருந்த தமிழ் இராச்சியத்தின் வேரினை அழிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனை மேலும் மேலும் பொறுத்துக் கொள்ளுதல் எமது இனம் முழுவதற்குமான அழிவுக்கு வழிகோலிவிடும்.

தமிழர்கள் வாழும் பிரதேசங்கள் என்று நாம் இப்போது இனங்காணுகின்ற வடக்கு - கிழக்கு பிரதேசத்தைத்தவிர முழு இலங்கையிலுமே தமிழர்கள் வாழ்ந்ததற்கான பல்வேறு சான்றுகள் கிடைத்துள்ளன. அதனை எவராலும் மறுக்கமுடியாது. அதனால் முழு இலங்கையிலும் தமிழர்களின் இனத்தை அடையாளப்படுத்தும் தொல்லியல் ஆய்வுகள் துரிதமாக நடத்தப்படவேண்டும்.

பொதுவாக 'ஆழத் தோண்டினால சிங்களவருக்குப் பயம், அகலத் தோண்டினால் தமிழருக்குப் பயம்' என்று குறிப்பிடுவார்கள். ஏனெனில், ஆழத்தில் புதைந்து கிடப்பது பழைமையான தமிழர் வரலாற்றை நிரூபிக்கும் ஆதாரங்கள். அகலப் பரந்து கிடப்பது அண்மைக்கால சிங்கள இனத்தின் அடையாளங்கள்.

அகலமாக மண்ணைத் தோண்டி தமது இனத்தை நிலை நிறுத்தியவர்கள் இப்போது யாழ்ப்பாணத்திலும் அதனை நிரூபிக்க முயற்சிப்பதாகச் சந்தேகம் ஏற்படுகிறது.

விரைவில் யாழ்ப்பாணத்தில் ஆழத் தோண்டும் தொல்லியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும். தமிழ் இனம், தமிழ் இனத்தின் வரலாறு எல்லாமே மண்ணோடுதான் எப்போதும் ஒன்றிப்போனவை. இது வரலாற்று நியதி. அதனால் எந்தவகையிலும் எமது மண்ணை நாமே பாதுகாக்க வேண்டும்.

இதற்கு தமிழ் புத்திஜீவிகளின் துணை வேண்டும். இதற்கான திட்டத்தை அவர்கள் சிந்தித்து விரைவில் செயற்படுத்தவேண்டும். இல்லையேல பையை நிறைத்துக்கொண்டு வீணர்களாக மடியவேண்டிய நிலை ஏற்படும்.

இப்போது எமது இனத்திற்கான வலுவான ஆதாரங்கள் மண்ணுக்குள்ளேயே இருக்கின்றன என்பது



சிங்கள அரசுக்கும் வரலாற்று ஆய்வாளர்களுக்கும் நன்குதெரியும். இலக்கியக் குறிப்புகளின் மூலம் எம்மை ஓரங்கட்டியவர்கள் இப்போது அதனையே திரும்பத்திரும்ப கூறமுடியாது என்பதனை நன்கு உணர்ந்துவிட்டார்கள். இலக்கிய சான்றுகளை முற்றாக மறுதலிக்கும வகையில் இப்போது தொல்லியல் சான்றுகள் உள்ளதை உணர்த்திவிட்டன. அவற்றையும் அழித்து மறுதலிக்கும் முயற்சிகளில் ஈடுபடுகின்றார்கள்.

ஆகவே, தமிழர்தாயகம் அடுத்தவர் பிடியில் அகப்பட்டுவிடாமல் காப்பாற்றத் தமிழ் இனத்தின் மூலத்தை தேடக்கூடிய வகையில் துரிதமாக ஆய்வுகள் ஆரம்பிக்கப்படவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE**

**SHORT COURSE IN AGRICULTURE -2003**

**குறுகிய கால விவசாயப் பயிற்சி நெறி - 2003**

நான்கு மாதகாலம் பயிர்வேளாண்மை, விலங்கு வேளாண்மை, பூங்கனியியல், விவசாய மூலதத்துவம் ஆகிய துறைகளை உள்ளடக்கிய இலவச பயிற்சி நெறிக்கு விவசாயத்தை சுயதொழிலாக மேற்கொள்ளவிரும்பும் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்த 17 - 25 வயதிற் கிடைப்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பயிற்சி நெறிக்காலத்தில் உதவு தொகையும் பயிற்சி முடிவில் சான்றிதழும் வழங்கப்படும்.

இப்பயிற்சி நெறியில் சேரவிரும்புவோர் 20.08.2003 காலை 9.00 மணிக்கு எமது நிறுவனத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்வித் தகைமைச் சான்றிதழ்கள், கிராமசேவையாளரின் நற்சான்றிதழ், வேறு இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றுடன் நேரில் சமுகமளிக்கவும்.

மேலதிக விவரங்களுக்கு:

அதிபர்,
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்,
மருதனார்மடம், சுன்னாகம். (21483) (32-12-16-31)



# கண்ணீர் அஞ்சலி

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி இசை ஆசிரியை
**திருமதி மங்களேஸ்வரி சிவயோகநாதன்**
அவர்களின் அன்புக் கணவர்
**அமரர் கந்தையா சிவயோகநாதன்**
அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இசை ஆசிரியர் கழகம்.
வலயம் - I.

*யாழ்ப்பாணம்.* (21489) (31-12-16)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
04 - 06 - 1924



மறைவு
17 - 07 - 2003

அமரர்
**மாணிக்கவாசகர் பராசக்தி**

எங்கள் குல தெய்வமே!
நீங்கள் எமை விட்டுப்
பிரிந்தாலும் உங்கள்
நினைவுகள் எமைவிட்டு நீங்காதம்மா!

இன்று (16.08.2003) சனிக்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறும் எங்கள் குலவிளக்கின் 31ஆம் நாள் நினைவு அஞ்சலியில் கலந்து எங்கள் தெய்வத்தின் ஆத்மசாந்தியடையப் பிரார்த்தித்து மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

*ஐயா கடையடி,*
*சாவகச்சேரி வடக்கு,*
*சாவகச்சேரி.* (C/29539) (29-12-16-31) - குடும்பத்தினர்.



# மரண அறிவித்தல்

**குமாரவேலு மதியாபரணம்**

**(ஓய்வுபெற்ற மருந்துக் கலவையாளர்)**

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரவேலு மதியாபரணம் நேற்று (15.08.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும் கமலாவதி (திருநெல்வேலி), கருணாதேவி (ஆசிரியை, சிந்மய பாரதி வித்தியாலயம், சுதுமலை), சாந்தகுமாரி (கனடா), கருணாகரன், கிருபாகரன், கமலினி (சுவிற்சர்லாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜயரத்தினம், சிவசுப்பிரமணியம், பாலசிங்கம் (கனடா), சிவசங்கரன் (சுவிஸ்), குமுதினி (சுவிஸ்), கௌரி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், சுதர்ஷினி (சுவிஸ்), சுகந்தி, சுபத்திரா, கஜன், ருபன் (லண்டன்), சிறீதரன், பவசாந்தன், பிரசாந்தன், துர்க்கா (கனடா), மயூரன் (கனடா), சிவபரன் (சுவிஸ்), அஸ்வினி (சுவிஸ்), கேவின் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் பிரவீன், தனுஜன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
விஜயரத்தினம், சிவசுப்பிரமணியம்
(மருமக்கள்).

*தாவடி வடக்கு,*
*மானிப்பாய்.* (21482) (31-12-16)


# தென்னாபிரிக்காவுடனான 3ஆவது டெஸ்ட்: மார்க் புட்சர், ஹூசைன் சதம் குவித்தனர்

தென்னாபிரிக்க அணியுடனான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து வீரர்களான மார்க் புட்சர், நசார் ஹூசைன் ஆகியோர் சதம் குவித்தனர்.

நேற்றுமுன்தினம் ட்ரெண்ட் பிரிட்ஜ் மைதானத்தில் இப்போட்டி ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் இங்கிலாந்து அணித்தலைவர் மைக்கல் வோகன் வென்றார்.

அதையடுத்து இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. 29 ஓட்டங்களில் 2 விக்கெட்டுகளை அவ்வணி இழந்தது. எனினும், 3ஆவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த முன்னாள் அணித்தலைவர் நசார் ஹூசைனும், மார்க் புட்சரும் அபாரமாகத் துடுப்பெடுத்தாடினர்.

புட்சர் 182 பந்து வீச்சுகளில் 21 பௌண்டரிகள் உட்பட 106 ஓட்டங்களைப் பெற்றார். டெஸ்ட் போட்டிகளில் புட்சர் பெற்ற 8 ஆவது சதம் இதுவாகும்.

நசார் ஹூசைன், 229 பந்து வீச்சுகளில் 17 பௌண்டரிகள் உட்பட ஆட்டமிழக்காமல் 108 ஓட்டங்களைப் பெற்றார். டெஸ்ட் போட்டிகளில் ஹூசைன் பெற்ற 13 ஆவது சதம் இது.

புட்சர், ஹூசைன் இருவரும் 3ஆவது விக்கெட்டுக்காக 181 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

நேற்றுமுன்தினம் ஆட்டமுடிவின் போது இங்கிலாந்து அணி 3 விக்கெட் இழப்பிற்கு 296 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இப்போட்டிக்கான தென்னாபிரிக்க அணியில் முன்னணி துடுப்பாட்ட வீரர் கெரி கேர்ஸ்டன் இடம்பெறவில்லை. கையில் ஏற்பட்ட காயமே இதற்குக்காரணம்.

கேர்ஸ்டனுக்குப் பதிலாக நீல் மெக்கன்ஸி சேர்க்கப்பட்டுள்ளார். அதே வேளை, ஜக்கலிஸ் இத்தொடரில் முதல் தடவையாக களமிறங்கியுள்ளார்.

இங்கிலாந்து அணியில் ஜேம்ஸ் கேர்ட்லிக்குப் பதிலாக எட் ஸ்மித் சேர்க்கப்பட்டுள்ளார். அவர் பங்குபற்றும் முதலாவது டெஸ்ட் போட்டி இது. (எ)

# சச்சின் டெண்டுல்கரின் காருக்கு 'பியட்' நிறுவனம் வரி செலுத்துகிறது

இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கருக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட காரின் இறக்குமதி வரியை தாமே செலுத்துவதற்கு பியட் நிறுவனம் தீர்மானித்துள்ளது.

டெண்டுல்கரின் சாதனையைப் பாராட்டி இத்தாலியின் 'பியட்' கார் நிறுவனம் 'பெர்ராரி 360 மெடோன்னா' என்ற சொகுசு காரை பரிசளித்துள்ளது. இதன் மதிப்பு 1.58கோடி இலங்கை ரூபா.

இந்தக் காருக்குரிய இறக்குமதி வரி 2.38 கோடி ரூபாவை டெண்டுல்கரின் வேண்டுகோளின் பேரில் இந்திய அரசாங்கம் ரத்துச் செய்தது.

இதைத் தொடர்ந்து கடந்த சனிக்கிழமை சொகுசு கார் இந்தியா வந்து சேர்ந்தது.

ஆனால், டெண்டுல்கருக்கு வரிச்சலுகை அளிக்கப்பட்டதை எதிர்த்து டெல்லி மேல் நீதிமன்றத்தில் பொதுமக்கள் நலன்கருதி வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி டெண்டுல்கருக்கும், மத்திய அரசுக்கும் விளக்கம் கேட்டு நோட்டிஸ் அனுப்பினார்.

இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் 19ஆம் திகதி மீண்டும் நடக்கவிருக்கிறது.

இந்த நிலையில், டெண்டுல்கரின் இறக்குமதிக் கார் ஏற்படுத்திய பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க 'பியட்' கார் நிறுவனம் முன்வந்துள்ளது.

இதன்படி மேற்படி காருக்கான வரியை 'பியட் நிறுவனம்' செலுத்த முன்வந்துள்ளது. டெண்டுல்கரும் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டுள்ளார். (எ)

# விளையாட்டு

# டைசனின் 'வங்குரோத்து' வழக்கு அடுத்த வருடத்திற்கு ஒத்திவைப்பு

குத்துச் சண்டை வீரர் மைக் டைசன் தாம் வங்குரோத்தாகிவிட்டதாக அறிவிக்கக்கோரி தொடர்ந்த வழக்கு அடுத்த ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அதிபார குத்துச் சண்டை சம்பியனான மைக் டைசன் தான் வங்குரோத்தாகி விட்டதாக அறிவிக்கக் கோரி நீதி மன்றில் வழக்குப் பதிவு செய்திருந் தார். மேலும் தன்னுடைய முகவ ரான 'டான்கிங்' மீதும் வழக்கு ஒன்றை யும் டைசன் பதிவு செய்திருந்தார்.

இந்த நிலையில், நீதிபதி ஜோர்ஜ் டேனியல்ஸுடன் நடந்த சந்திப்பின் போது இரு தரப்பினரும் அடுத்த வருடம் ஏப்ரல் வரை இந்த வழக்கை ஒத்திவைக்க ஒத்துக் கொண்டுள்ளனர்.

முன்னதாக இந்த வழக்கானது எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெறுவதாக இருந்தது. அதற்குள் இந்த வங்குரோத்து விடயம் முடிவுக்கு வந்துவிடும். இந்தப் பிரச்சினைக்கு தீர்வு கிடைத்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குத்துச் சண்டைப் போட்டிகளின் மூலம் சுமார் 3,000 கோடி ரூபாவுக்கு மேலும் சம்பாதித்து இருந்தாலும் கடந்த ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி வங்குரோத்தாகி விட்டதாக வழக்கு பதிவுசெய்திருந்தார். மேலும் தன்னிடம் இருந்து கோடிக்கணக்கான பணத்தை மோசடி செய்துவிட்டதாக முகவர் டொன் கிங் மீதும் டைசன் வழக்குப் பதிவு செய்திருந்தார்.

ஆனால், தான் எந்தத் தவறும் செய்யவில்லை என்றும் டொன்கிங் குறிப்பிட்டுள்ளார். (எ)

# தேசிய வலைப்பந்தாட்டத் தொடர் இன்று குருநாகலில் ஆரம்பமாகிறது

தேசிய வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்றும் நாளையும் குருநாகல், விஹார மைதானத்தில் நடைபெறவுள்ளது. இலங்கை வலைப் பந்தாட்ட சம்மேளனத்தின் இடைக்கால நிர்வாகக் குழு இப்போட்டிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த அணிகள் உட்பட 24 அணிகள் இப்போட்டிகளில் பங்குபற்றுகின்றன.

தினமும் காலை 10 மணிமுதல் போட்டிகள் நடைபெறவுள்ளன. நாளை நடைபெறவுள்ள இறுதிப் போட்டியின்போது, இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்.

கடந்த தடவை இத்தொடரில் ஹட்டன் நஷனல் வங்கி அணி சம்பியனாகியது.

துறைமுக அதிகார சபை அணி இரண்டாமிடத்தைப் பெற்றது.

இம் முறை போட்டிகளில் பங்குபற்றும் அணிகள் விவரம்:-

ஹட்டன் நஷனல் வங்கி, துறைமுக அதிகார சபை, பதுளை விஷாகா வித்தியாலயம், மொனராகலை மாவட்ட வி.க., கொழும்பு கீப்'.பிட் பூளு, களுத்துறை வி.க., காலி யூத், நுவரெலியா முதலாங், கம்பாஹா வி.க., சொலோன்டியன் கட்டு நாயக்க, மாத்தளை வி.க., அநுராதபுரம் தாலவ ம.வி., கண்டி உயர் பாடசாலை, சென்.ஆன்ஸ் இரத்தினபுரி, விமானப் படை, மாலியதேவ வி.க., குருநாகல், சென். ஜோஸப் கல்லூரி - கேகாலை, யாழ்ப்பாணம் வி.க., மட்டக்களப்பு மாத்தறை வி.க., வவுனியா வி.க., ஜோஸப்பியன்ஸ் - நுகேகொடை, புத்தளம் வி.க. (எ)

## பயிற்சி முகாம்

யாழ். மாவட்டப் பாடசாலைகளின் உதைபந்தாட்ட பயிற்றுநர்களுக்கான பயிற்சி முகாம் இன்று சனிக்கிழமை காலை 7மணிக்கு ஆரம்பமாகி 20ஆம் திகதி புதன் கிழமை வரை நடைபெறும். இப்பயிற்சிக்கென ஏற்கனவே விண்ணப்பித்தவர்களும், இதுவரை விண்ணப்பிக்காது பயிற்சி பெற விரும்புபவர்களும் பாடசாலை அதிபரின் சிபார்சுக் கடிதத்துடன் கலந்து கொள்ளமுடியும்.

பயிற்சியில் பங்குபற்றுபவர்கள் உதைபந்தாட்ட வீரருக்குரிய உடை, சப்பாத்து, பந்து என்பவற்றுடன் இன்று காலை 7.00 மணிக்கு யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்திற்கு வரும்படி பா.வி.சங்கத் தலைவர் ந.சிவகடாசம் கேட்டுக்கொள்கின்றார்.


ஸ்ரார் கல்வி நிலையம
சுன்னாகம்

A/L DAY CLASS

கலை, வர்த்தக
பிரிவுகள்

ஆரம்பம்:18.08.2003
காலை 7.00 மணி.
(12) (21478)



**கலைப்பீடம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**அறிவித்தல**

18.08.2003ஆம் திகதியன்று ஆரம்பமாகவிருந்த இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் பிற்போடப்பட்டுள் [illegible]

பதிவாளர்.
15.08.2003



**J/97 கிராம மாதர் அபிவிருத்திச் சங்கம் நடத்தும்**
**சைவ சமய அறிவுப் போட்டி அறிவித்தல்**

**2003.08.16 சனிக்கிழமை**

தரம் 2,3 - முற்பகல் 9.00 முதல் 9.45 வரையும்
தரம் 5 முற்பகல் 10.00 முதல் 11.00 வரையும்
தரம் 4 முற்பகல் 11.15 முதல் 12.15 வரையும்
ஏனைய பரீட்சைகள் 2003.08.17 ஞாயிற்றுக்கிழமை முன்பு குறிப்பிட்ட நேரத்தில் நடைபெறும்.

*ஐயனார் கோயிலடி.* - போட்டி அமைப்பாளர்.
(21484) (31-12-16)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவில் 30 ஆம் நாள்...

மண்ணில் 1962 - 04 - 17

விண்ணில் 2003 - 07 - 18



## அமரர் சின்னக்குட்டி சிவபாதம்

எம் நெஞ்சமெல்லாம் நிறைந்துவிட்ட அப்பாவே!
வஞ்சனை இல்லா மாணிக்கமே எம் அப்பா!
ஆதரிக்க ஆயிரம் உறவுகளிருந்தும்
அப்பா என்றழைக்க 'அப்பா' இல்லையே
விழிகசிந்து நாமிருக்க விண்ணோக்கிப் போனதேன்?
பதைபதைத்து நாம் கதறப் பார்க்காமல் போனதேன்?

கரவெட்டி. (C29556) (32-11)

பிரிவால் துயருறும் : மனைவி, பிள்ளைகள்.

# சதா பொன்ஸ் அல்வாய்

## 2004 A/L Day Classes

| | |
|---|---|
| பொருளியல் | - M.C.சுதாகரன். |
| கணக்கியல் | - N.ஜெயகணேஸ் |
| தமிழ் | - சிவமுகுந்தன் |
| அளவையியல் | - S.G.தர்மதேவன் |
| வணிகக்கல்வி | - மரியதாஸ் |
| இந்து நாகரிகம் | - T.மகிந்தன் |
| இணைந்த கணிதம் | - S.உதயம் |

ஆரம்பம் : 18.08.2003 திங்கள் 5.00 p.m

அனுமதிகளை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்.

(சி-29537) (31-11) -நிர்வாகி.

# மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கு உதவ அயர்லாந்து நிபுணர்கள் வருகை

அயர்லாந்து நாட்டிலிருந்து சிறப்புத் தேர்ச்சிபெற்ற 3 பேர் அடங்கிய நிபுணர் குழு யாழ்ப்பாணத்தில் பரியோவான் கல்லூரியில் இம்மாதம் 18ஆம் திகதி தொடக்கம் 22ஆம் திகதி வரை மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளைப் பரிசோதித்து மதிப்பீடு செய்து அவற்றிற்குரிய பயிற்சி நெறிகள் அடங்கிய ஆலோசனைகளை வழங்கவுள்ளது.

இந்த ஆலோசனைகளைப் பெறவிரும்புவோர் கீழ்க் காணும் தொலை பேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு முன்கூட்டியே பதிவுசெய்யுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

குறிப்பிட்ட அளவு பிள்ளைகளை மட்டுமே நிபுணர்களால் மதிப்பீடு செய்ய முடியுமானதால் முன்கூட்டியே உங்களைப் பதிவுசெய்து உங் களுக்கென குறிப்பிட்ட திகதியையும், நேரத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

Millennium Institute For Children With Special Needs,
C/O Promoters Engineering Company Limited,
844, Point Pedro Road,
Nallur, Jaffna.
தொலைபேசி: 021-222 5780

(சி-29531) (31-11)

# துயர் பகிர்கின்றோம்

ராஜு ஸ்ரோர்ஸ் உரிமையாளரின்
அன்புத் தாயார்

## திருமதி சிவசுப்பிரமணியம் கோசலையம்மா

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தவர் துயரில் நாமும் பங்குகொள்வதோடு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

ஈஸ்வரன் ரேடேர்ஸ்,
69,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.021 222 2813, 3048. (C29544) (32-11)

-உரிமையாளரும் ஊழியர்களும்.

# மரண அறிவித்தல்

## சிதம்பரப்பிள்ளை பூபாலசிங்கம்

காரைநகர் கோவளத்தைப் பிறப்பிடமாகவும் முன்னாள் லுணுகல சிதம்பரப்பிள்ளை ஸ்ரோர்ஸ் பங்காளரும் தற்போது கொக்குவில் பொற் பதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை பூபாலசிங்கம் அவர்கள் நேற்று (15.08.2003) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை - பரிமளத்தின் அன்பு மக னும் பராசக்தியின் (பேபி) அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்லத் துரை - செல்லம்மாவின் அன்பு மருமகனும் பூங்குளரூபனி, பூங்குளவதனி, பூங்குணசீலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கணேசலிங்கம் (கனடா), செல்வக்குமார் (கிளிநொச்சி, முத்துப்பிள்ளையார்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஞானேஸ்வரியின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற இராசரட் ணம் (K.K.P.பண்டாரவளை) அன்பு மைத்துனரும் கணதீபன், குமரன், நாகதீபா, விசாகதீபன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.08.2003) ஞாயிறு காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொற்பதி வீதி,
கொக்குவில். (21502) (29-11-31)

தகவல்: பூங்குணசீலன் (மகன்).

# தலவாக்கலையில் ஐந்து கடைகள் எரிந்து நாசம்!

தலவாக்கலை,ஓக.16

தலவாக்கலையில் ஐந்து கடை கள் நேற்றுமுன்தினம் மாலை 5 மணி யளவில் தீப்பிடித்து முற்றாக எரிந்து சாம்பராகின.

பலகைகளினால் கட்டப்பட்டி ருந்த இக்கடைகள் தீப்பற்றி எரிந் ததற்கு மின்சார ஒழுக்கே காரண மெனத் தெரிவிக்கப்படுகின்றது. தீயை அணைக்க எடுத்துக்கொண்ட முயற்சி கள் பலனளிக்கவில்லை.

# தேவை

1. மில் வேலையில் அனுபவம் உள்ளவர்.
2. பழக விரும்புபவர்.

தொடர்பு :
பிருந்தா மில்ஸ்
No,18, றக்கா றோட்,
யாழ்ப்பாணம்.
Tel: 5745.

(21497)(31-11)

# படிவம்

தொழில்நுட்பக் கல்லூரியில் நடத்தப்படும் கற்கை நெறி களுக்கு மாணவர்களை அனு மதிப்பதற்கான விண்ணப்பப்படி வம் உண்டு.

விண்ணப்ப முடிவு திகதி 22.09.2003

BHARATHI PATHIPPAKAM
OFFSET PRINTERS,
430,K.K.S. ROAD,
JAFFNA.

(C29543) (32-11)

# நாகம்ஸ் சுன்னாகம்

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
சரத்குமார், தேவயாணி,
நெப்போலியன், விவேக் நடித்த

## தென்காசிப்பட்டணம்

காட்சி நேரம் : 11.00, 3.00, 7.00

(C29232) (31-11)

# நிறைஞ்சனாஸ் சங்கானை

அஜித், சிம்ரன்
நடித்த

## வாலி

தினசரி காட்சி: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு

## BLUE STREAK

தினசரி 8.45 இற்கு.

(C29213) (31-11)

# லஷ்சுமி சினிமா

இணுவில்

ரம்யாகிருஷ்ணன், லிவிங்ஸ்டன், மூர்த்தி ஆகியோர் நடித்த



## அன்னை காளிகாம்பாள் ரீலீஸ்

சிறுவர்கள், பெரியோர்கள் குடும்பத்துடன் பார்க்கக் கூடிய படம். 11.00, 2.00, 7.00 (புதியநேரம்)

(21321)

# ராஜா யாழ்ப்பாணம்

எதிர்வரும் 28ஆம் திகதி வரை
இந்தியாவிலும், இலங்கையிலும்
ஒரேதின வெளியீடு.
விஜயகாந்த் கிரண் விவேக்
நடித்த



## தென்னவன்

காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

(C29233) (31-11)

# லிபேட்டி அச்சுவேலி

சரத்குமார். சிம்ரன். வையாபுரி.
மணிவண்ணன்

## அரசு (ரீலீஸ்)

தினசரி: 3.00. 7.00

காலை 11.00 THE PEACE KEEPER

(C/29373) (31-11)

# 1953ஆம் ஆண்டு ஹர்த்தால் 50ஆவது வருட நினைவு தினம்

நாளை (17.08.2003) ஞாயிறு மாலை 4.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நினைவுதினக்கூட்டம் இடம்பெறும்.

தொழிற்சங்க பிரதிநிதிகள் உட்பட பலர் உரை யாற்ற உள்ளனர்.

அனைவரும் வருக!

யாழ்ப்பாணம்.
(சி-21488) (31-11)

- சமூக விழிப்புணர்வு மன்றம்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பாலையா இராசலட்சுமி

அராலியைப்பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலையா இராசலட்சுமி அவர்கள் நேற்று (15.08.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் வைரமுத்து - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும் பாலையாவின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2003) சனிக்கிழமை பி.ப.2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னையா வீதி,
நாலு கால் மடம்,
ஆனைக்கோட்டை. (21493)(31-11)

தகவல்; பிள்ளைகள்.

## திருமதி கனகம்மா சரவணமுத்து

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா சரவணமுத்து நேற்று (15.06.2003) வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் பொன்னம்பலம் - மரியப்பிள்ளை தம்பதிகளின் ஆசைமகளும், காலஞ்சென்ற கணபதி சரவணமுத்துவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கணபதி - இலட்சுமி தம்பதிகளின் பிரிய மருமகளும், திருமதி [illegible] (கனடா), திருமதி ம.செல்வமணி (ராணி, கொழும்பு), திருமதி [illegible] மலர் (யாழ்ப்பாணம்), ச.சிறிஸ்கந்தராஜா (உரிமையாளர், சரவணாஸ் ஒலிப்பதிவகம்), ச.ஆனந்தவடிவேல் (முகவர், மக்கள் வங்கி, சவூதி அரேபியா), திருமதி ஞா.பேபி சறோஜா (கனடா), திருமதி இ.நித்தியானந்த தேவி (ஜேர்மனி), ச.உதயகுமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ச.சத்திய குமார், திருமதி ஜெ.விக்னேஸ்வரி (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பிலிப்துரைராசா (கனடா), ந.மரியதாஸ் (இத்தாலி), ச.அலோ ஷியஸ், திருமதி சி.ஜெசிந்தா (சோதி - ஆசிரியை, யா/தி.கு.க.மடம்), திருமதி ஆ.காஞ்சனா (கொழும்பு), தி.ஞானேந்திரா (கனடா), க.இராஜ லிங்கம் (ஜேர்மனி), திருமதி உ.ஜேன் (பிரான்ஸ்), சி.ஜெயாகாந்தி (அமெரிக்கா) ஆகியோரின் பேரன்புமிக்க மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக் கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

748, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (21494)(31-11)

தகவல்: ச.சிறிஸ்கந்தராஜா (மகன்).

## திருமதி யசோதரா சற்குணராஜா

திருமதி யசோதரா சற்குணராஜா அவர்கள் 2003.08.08 அன்று பிரான் ஸில் காலமானார்.

அன்னார் துரைராஜா (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்) - அமரர் ஞானபூங்கோதை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் சற்குணராஜா அவர்களின் அன்பு மனைவியும் ராஜ்தரன், சுஜிதா ஆகியோரின் அன்புத் தாயாரும், அமரர் மோகனதாஸ் (முன்னாள் பொறியியலாளர்), தேவகி (மன்/சித்திவிநாயகர் இ.கல்லூரி), வாசுகி (பிரான்ஸ்), அமரர் கணதாஸ், துளசிதாஸ் (பெல்ஜியம்), ராமதாஸ் (மன்/சித்திவிநாயகர் இ.கல்லூரி) ஆகியோரின் சகோதரியும், மாயாசோதி (மட்டக்களப்பு), சாள்ஸ் பென்லி (வலயக்கல்விப்பணிமனை,மடு), மதிவண்ணன் (பிரான்ஸ்), ஆனந்தி (வவுனியா), ரேணுகா (மன்/புனித லூசியா ம.வி.) ஆகியோரின் மைத் துனியும் பிரசாத், பிரசன்னா ஆகியோரின் மாமியாரும், விபூஷன், சாளினி, ஆஸ்லி, கபிலன், வாகீசன், லக்ஸ்மன் ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

இவரது இறுதிக்கிரியைகள் 2003.08.13 அன்று பிரான்ஸில் நடை பெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி. (21490)(31-11)

தகவல்: து.ராமதாஸ் (சகோதரன் - ஆசிரியர், மன்/ சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி, மன்னார்).

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கிராமத்தைச் சேர்ந்த பின்வரும் மாணவர்கள் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்று பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பைப் பெற்றதினால் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

| பெயர் | பெறுபேறு | நிலை | பாடசாலை |
|---|---|---|---|
| சிவராசா பிரதீபன் | 3A முகாமைத்துவம் | 02 | கொக். இந்து |
| பாலசிங்கம் பிரியா | 1A, 2B மருத்துவம் | 21 | வேம்படி மகளிர் |
| பாலகிருஷ்ணன் கஜாகரன் | 1A, 2B பொறியியல் | 49 | யாழ். இந்து |
| சிறிஸ்கந்தராசா கஜீபன் | 2A, 1C வர்த்தகம் | 78 | மகாஜனா |
| தளையசிங்கம் சுதர்ஷன் | 2B, 1C பௌதிகம் | 150 | கொக். இந்து |
| திலகேஸ்வரன் சங்கீதா | 1A, 2B கலை | 91 | பெரியபுலம் ம.வி. |

வாழ்த்துவோர் :- இ.இ.இரத்தினதாசன், செ.தர்மலிங்கம், இ.தங்கவேல், இ.கணேசதாஸ், பொ.புஸ்பராசா, ப.பாலசுப்பிரமணியம், கு.ஜெய ஈஸ்வரன், செல்வி [illegible]கண்டு, த.கனகசபை.

குமர கோட்டம், கோண்டாவில். (சி-29536) (31-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்லாந்துப் பிரதமர் சின்வத்ராவுக்கு கண்டியில் நேற்று மகத்தான வரவேற்பு

கண்டி,ஓக.16

நேற்றுக் கண்டிக்கு விஜயம் செய்த தாய்லாந்துப் பிரதமர் தக்சின் சின்வத்ராவுக்கு அங்கு மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

கண்டி அஸ்கிரிய விளையாட்டரங்கில் ஹெலிகொப்டரில் அமைச்சர்கள் லஷ்மன் கிரியெல்ல, டபிள்யூ. ஜே.எம்.லொக்குபண்டார சகிதம் வந்திறங்கிய தாய்லாந்துப் பிரதமரை, மத்திய பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திஸ்ஸ அத்தனாயக்க, மத்திய மாகாண முதலமைச்சர் வஸந்த அலுவிகார, கண்டி மேயர் செனர சேனநாயக்க ஆகியோர் வரவேற்றனர்.

இதனை அடுத்து, அவர் மோட்டார் பவனியாக மல்வத்தை பீடத்திற்கு முதலிலும், பின்னர் அஸ்கிரிய பீடத்துக்கும் சென்று அங்கு மகாநாயக்கர்களைச் சந்தித்துப் பேசினார்.

பௌத்த தர்மத்தைப் பேணும் தாய்லாந்திலும் இலங்கையிலும் சமய கலாசார ரீதியாகப் புரிந்துணர்வையும், நட்புறவையும் வளர்க்க தாய்லாந்துப் பிரதமரின் விஜயம் உதவும் என்று மகாநாயக்கர்கள் தெரிவித்தனர்.

பிரதமரின் வருகை தொடர்பாகக் கலாசாரச் சின்னங்கள் சிலவற்றையும் மகாநாயக்கர்கள் அன்பளிப்பாக வழங்கி தாய்லாந்துப் பிரதமரை ஆசீர்வதித்தனர்.

கண்டி பல்லேகலவில் நிர்மாணிக்கப்பட்டுவரும் சர்வதேச பௌத்த நிலையத்தைச் சென்று பார்வையிட்ட தாய்லாந்துப் பிரதமருக்கு தியவதனநிலமே ரஞ்சன் விஜயரத்ன மகத்தான வரவேற்பளித்தார். அங்கு தாய்லாந்து நாட்டின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு வரும் பௌத்த நிலைய கட்டுமானப் பணிகளையும் அவர் பார்வையிட்டார்.

தாய்லாந்துப் பிரதமரின் வருகையை ஒட்டி கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில் நேற்றுப் பிற்பகல் 4.45 மணிக்கு விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த புத்த பெருமானின் புனித தந்த சின்னக் கண்காட்சியையும் அவர் வழிபட்டார். அங்கு தியவதன நிலமே, தாய்லாந்து நாட்டுக்கும் இலங்கைக்கும் உள்ள வரலாற்றுத் தொன்மைமிக்க சமய வழிபாட்டுத் தொடர்புகளைக் குறிப்பிட்டார்.தாய்லாந்துப் பிரதமர் தலதா மாளிகைக்கு அன்பளிப்புக்களை வழங்கினார். (ம்)

## இன முரண்பாடு......

(2ஆம் பக்க தொடர்ச்சி)

எல்லோரும் நல்ல உறவு நிலைகளை வளர்க்கவேண்டும்.

சாதாரணமாக முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரை பழைய அவலங்கள், பேராட்டங்கள், இனிமேல் வரக் கூடாது என்பதில் அவர்கள் மிகத் தெளிவாகவேயுள்ளனர். இனமுரண்பாடுகளைத் தோற்றுவிக்க முயலும் முஸ்லிம் அரசியல்வாதிகளின் செயற்பாடுகளுக்கு அவர்கள் உடன்பாடாக இல்லை. மாறாக இத்தகைய செயற்பாடுகளையிட்டு வேதனை கொண்டவர்களாகவே அவர்கள் உள்ளனர்.

அவர்கள் இன முரண்பாடுகளின்றிச் சேர்ந்து வாழவே விரும்புகின்றனர். எனவே, முஸ்லிம் அரசியல்வாதிகள் மிக விழிப்போடும், தெளிவோடும் சிந்தித்து அவர்களது செயற்பாடுகளை நடத்த வேண்டுமென அவர்களுக்கு வேண்டுகோள் விடுக்க விரும்புகின்றேன்.

- இவ்வாறு அவர் கூறினார்.

## சமாதான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமாதான முயற்சிகளில் இன்னும் எத்தனையோ படிகளைத் தாண்ட வேண்டியிருக்கிறது. எனவே, அனைவரும் ஒன்றுபட்டு செயற்படுவது அவசியம் - என்றார்.

பிற்பகல் 3 மணியளவில் யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இலங்கைக் கடற்பரப்பிற்குள் இந்திய மீனவர்களின் வருகை, தமிழ் மீனவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள், உயர் பாதுகாப்பு வலயச சிக்கல்கள், விவசாய நிலங்களில் இராணுவம் குடியிருப்பது என்பன தொடர்பாக இணையப் பிரதிநிதிகள் பிறன்சனுக்கு விளக்கினர்.

சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், இலங்கையில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உதவிகள் வழங்குவதில்லை என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

சமாதானத்தினை ஏற்படுத்துவதற்காக சர்வதே நாடுகள் அரசுக்கு போதிய அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ம-ரி)

# சிறையில் தாக்கப்பட்டதாக யாழ். இளைஞர் முறைப்பாடு

## மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரிக்கும்

யாழ்ப்பாணம்,ஓக.16

யாழ். சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சமயம் அதிகாரி களால் தான் கடுமையாகத் தாக்கப்பட்டதாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறை யிட்டுள்ளார்.

கோவில் வீதியைச் சேர்ந்த அந்தோனி ஜெயக்குமார் (வயது23) என்ற இளைஞரே இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

சிறைச்சாலையில் தான் தடுத்து வைக்கப்பட்டிருந்த 23 நாள்களில் சிறைச்சாலை அதிகாரிகளால் கடுமையாகத் தாக்கப்பட்டதுடன் பாலியல் ரீதியிலும் துன்புறுத்தப்பட்டதாகவும் அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இந்த முறைப்பாடு குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை நடத்தவுள்ளது. இதற்காக சிறைச்சாலை அத்தியட்சகர் சிவசுந்தரத்தை எதிர்வரும் 21ஆம் திகதி விசாரணைக்கு சமுகமளிக்கும்படி அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. (ம-ரி)

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிராக பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சி கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் இடம்பெறவுள்ளது.

இப்படியான ஒரு நிலையில் அமைச்சர் நாடாளுமன்ற அமர்வுகளுக்குச் சமுகமளிக்க வேண்டியுள்ளதால் அவரது விஜயம் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்க் கூட்டமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றொரு கட்சியான ரெலோவின் சார்பில் அதன் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று கிளிநொச்சியில் தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடவிருந்தார்.

உத்தேச இடைக்கால நிர்வாகம் தொடர்பான அரசின் திட்டவரைவில் செய்யப்படவேண்டிய திருத்தங்களைத் தமிழ் தேசியக் கூட்டமைப்புக் கட்சிப் பிரதிநிதிகளிடம் கேட்டறிந்து வரும் தமிழ்ச்செல்வன், அதில் மேற்கொள்ளப்படவேண்டிய முக்கிய திருத்தங்கள் தொடர்பான அடிப்படைகள் எனத் தாங்கள் கருதும் விடயங்களை அவர்களுக்கு விளக்கியும் வருகின்றார்.

இந்தத் திட்டவரைவு குறித்து பாரிஸில் சட்ட அறிஞர்களோடு தாங்கள் மேற்கொள்ளவிருக்கும் கலந்தாலோசனை பற்றிய தகவல்களை, தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகளிடம் எடுத்துரைக்கும் அவர், அந்தக்கூட்டத்தில் கவனிக்கப்படவேண்டிய விடயங்கள் தொடர்பாக தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகளின் கருத்தையும் செவிமடுத்து வருகின்றார்.

இந்த விவகாரம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இடம் பெற்றுள்ள நான்காவது கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரதிநிதிகளை தமிழ்ச்செல்வன் அழைத்துப் பேசுவாரா என்பது குறித்துத் தகவல் எதையும் உறுதிப்படுத்த முடியவில்லை.

NIRU
KONDAVIL
A/L 2004
DAY CLASS
★ CHE. திரு.மகேஸ்வரன்
★ PHY. திரு.சிவலிங்கம்
திரு.கருணாநிதி
★ BIO. திரு.தற்பரன்
★ Maths திரு.கந்தவனசெல்வன்
ஆரம்பம்:18.08.2003 (திங்கள்)
(21451)(12-11)

CHEMISTRY NALLUR
CENTRE
சிக்கல் எண்கள்
By.M.Rajan
இன்று ஆரம்பம் 5.00 .p.m
(21500) (32-11)

N.E.I. நல்லூர்
ஆரம்பம் : 16.08.2003
சனி 10.00 a.m.
சிங்கள
வகுப்புகள்
By:A.இராஜரட்ணம்
(21416) (12-11)
3 ஆம் தவணைக்கான வகுப்புக்கள் அனைத்தும் ஆரம்பமாகிவிட்டன.

C.C.A.
சுன்னாகம்
A/L Day Class
கலை, வர்த்தகம்
ஆரம்பம்:18.08.2003
8.00 a.m.
(12-11) (21423)

குகன் கல்வி நிறுவனம்
ஆவரங்கால்
A/L 2004 DAY CLASS
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞானம்
எமது வழமையான ஆசிரியர் குழு
ஆரம்பம் : 18.08.2003 திங்கள் பி.ப.4.30.
(21496) (31-11)

## விளையாட்டு விழா இடம் மாற்றம்

சிறுவர் நன்நடத்தைப் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தினால் பதிவுசெய்யப்பட்ட சிறுவர் இல்லங்களுக்கிடையேயான விளையாட்டு விழா யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்திலிருந்து தவிர்க்க முடியாத காரணங்களினால் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்திற்கு இடம்மாற்றப்பட்டுள்ளமையை அறிவித்துக்கொள்வதோடு ஆர்வலர்கள் அனைவரையும் யாழ்.மத்தியகல்லூரி மைதானத்துக்கு இன்று மாலை 2.00 மணிக்கு சமுகமளிக்கும்படி அன்புடன் அழைக்கிறோம்

சின்வைன் ஸ்ரீவன்
(சிறுவர் உரிமைகள்
மேம்பாட்டு உத்தியோகத்தர்)

T.P.021 222 5657 (21485)(11)

## மரண அறிவித்தல்

### திருமதி விஜிதா ஸ்ரீகணேஸ்

உரும்பிராய் தெற்கை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி விஜிதா ஸ்ரீகணேஸ் நேற்று இரவு அகாலமரணமடைந்தார்.

அன்னார் நா.ஸ்ரீகணேஸ் (ஆசிரியர், வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும் கோபிகணேஸ், பவகணேஸ், கிருஷ்ணப்பிரியா ஆகியோரது பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2003) சனிக்கிழமை மாலை 5.00 மணியளவில் உரும்பிராயில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று வேம்பன் மயானத்தில் பூதவுடல் அடக்கம் செய்யப்படும். இதனை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.
(21593) (29-11)

தகவல்:
நா.ஸ்ரீகணேஸ் (கணவர்)

IPAS
Institute of Professional Accounting Studies
199,Main Street Jaffna
Tel;-0777 563294,
0777 563292

யாழில் aat, Chartered Accountancy பரீட்சைகள்
O/L, A/L சித்தியடைந்த மாணவர்களே!
நீங்களும் தொழில்சார் கற்கை நெறிகளின் aat, Chartered Accountancy, CIMA-UK புதிய அனுமதிகளைப் பெற உடன் தொடர்பு கொள்ளவும்.
அலுவலக நேரம்:-
சனி, ஞாயிறு 9.00a.m - 2.00 p.m
தற்போது aat - Stage I & II, Chartered Foundation, CIMA-UK - Foundation விரிவுரைகள் நடைபெறுகின்றன.

தொழில்சார் கற்கை நெறிகள் எதிர்கால தொழில் வாய்ப்பை உறுதிப்படுத்தும்.

Exemption For Chartered Accountancy - Foundation Examination
BBA, B.Com, HNDA பட்டதாரிகளே!
Chartered Accountancyயில் Foundation examination தற்போது Exemption வழங்கப்படுவதால் INTERMEDIATE LEVEL EXAMஇற்கு உங்களைத் தயார்ப்படுத்த எம்மை நாடவும். IPAS ஊடாக EXEMPTIONஇனை பெற்றுக் கொள்ளலாம்.
உரிய ஆவணங்களுடன் (Degree Certificate ) உடன் தொடர்புகொள்ளவும்.

Chartered Intermediate 2004 July க்கான விரிவுரைகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன.
(C29555) (32-11)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நி[illegible]வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.08.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.